வெளியீடு 6-7-98 Issued 6-7-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, அக்டோபர் 15, 1997 – தொகுதி 37– எண் 3

Wednesday the 15th October, 1997 – Volume 37 – No. 3

...றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ve Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

Y241, 31'N97
N97. 37. 3.
21843

[Price Rs. 3.00

406/97

# 15-10-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 301-333 |
| | 335-348 |
| **2. தகவல் கோரல்** | |
| (அ) வினா நேரத்தில் அலுவலர் மாடத்தில் அதிகாரிகள் ஒருவர்கூட இல்லாதது | 334 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 349-350<br>363-364 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) திருவள்ளூர் மாவட்டம், மணவாள நகர் காவல் நிலையத்தில் திரு. கோவிந்தசாமி மரணம் அடைந்தமை | 349,<br>350-362 |
| (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகிலுள்ள சோமசுந்தரம் நூற்பாலை மூடிக்கிடத்தல் | 362-363<br>365-377 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-குழு | 378 |
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, *1997* (ஆ.செ.) | 378 |
| (ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *1997* (ஆ.செ.) | 383 |
| (இ) சென்னை மாநகரக் காவற்படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டமுன்வடிவு, *1997* (ஆ.செ.) | 401 |

D Y2P,31'N97 N97,37.3

218443


| | பக்கங்கள் |
|---|---|
| **6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரி விதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 | 378-379 |
| (ஆ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 379 |
| (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1997 | 380 |
| (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 380-381 |
| (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 381-382 |
| (ஊ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 382 |
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)** | |
| (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 383-400 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 383, 398-400 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 384-387 |
| திரு. சி. டி. தண்டபாணி | 387-391 |
| திரு. ஜி. பழனிசாமி | 391-393 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 393-395 |
| திரு. ஜி. கே. மணி | 395-397 |
| திரு. சி. ஞானசேகரன் | 397-398 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) —தொடர்ச்சி** | |
| (ஆ) சென்னை மாநகரக் காவற்படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச்) சட்டமுன்வடிவு, 1997 | 401-407 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 405-407 |
| திரு. சி. ஞானசேகரன் | 401-403 |
| திரு. சி. வேலாயுதன் | 403-405 |
| (இ) சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 407-417 |
| மாண்புமிகு திரு. கோ. சி. மணி | 412-415 |
| திரு. ப. ரங்கநாதன் | 408-409 |
| *திரு. செங்கை சிவம் | 410-412 |
| (ஈ) இந்திய சாலைச் சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 417-423<br>424-428 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 425-427 |
| திரு. வி. கே. லட்சுமணன் | 418-420 |
| *திரு. நா. பெரியசாமி | 420-421 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 421-422 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 422-423 |
| திரு. டி. மணி | 424-425 |
| (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 | 429-435 |
| *மாண்புமிகு திரு. கே.என். நேரு | 433-434 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 429-431 |
| *திரு. நா. பெரியசாமி | 431 |
| திரு. ஜி.கே. மணி | 431-432 |

| | பக்கங்கள் |
|---|---|
| **7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி | |
| **(ஊ)** தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, *1997* | 436-445 |
| மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் | 440-444 |
| திரு. பா. வேல்துரை | 436-438 |
| *திரு. கே. சுப்பராயன் | 438-439 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 439-440 |
| **8. பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை**— | |
| சந்தனமரக் கடத்தல் வீரப்பன் பிரச்சினை பற்றியும், பணயக் கைதிகளை விடுவிப்பது பற்றியும் எடுக்கப்படவேண்டிய அணுகுமுறை குறித்து கர்நாடக முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் சென்னையில் சந்தித்துப் பேச இருப்பது குறித்து | 423-424 |
| **9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 445-447 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 29, ஈஸ்வர—திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 அக்டோபர் 15, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்."*

*தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்கு, தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணை புரியும்.*

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 21, திரு. அ. வெங்கடாசலம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**21—**

### ஆலங்குடியில் தீயணைப்பு நிலையம்

***7611**—திரு. அ. வெங்கடாசலம்:*

*மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் தீயணைப்பு நிலையத்திற்கு அரசுக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

[1997 அக்டோபர் 15

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பு எவ்வளவு?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆலங்குடி தீயணைப்பு நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டப்பட்டு, 2-12-1996 முதல் இயங்கி வருகிறது.

(ஆ) எழவில்லை.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடியில் தீயணைப்பு நிலையம் கட்டிய இந்த அரசுக்கு என்னுடைய நன்றியை எனது தொகுதி மக்கள் சார்பாக சொல்லிக்கொள்வதோடு, சென்ற ஆண்டு ஆலங்குடி தொகுதியில் கரம்பக்குடியிலும், கீரமங்கலம் பேரூராட்சியிலும் தீயணைப்பு நிலையம் துவங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருந்தோம். சென்ற ஆண்டு அவர்கள் தரவில்லை. ஆகவே இந்த ஆண்டு, 1998-லாவது நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற கரம்பக்குடி, கீரமங்கலம் பேரூராட்சிப் பகுதியில் தீயணைப்பு நிலையம் துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டுத் திட்டத்திலே சுமார் 26 தீயணைப்பு நிலையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் கட்டிடம் கட்டுவதற்கான திட்டம் இருக்கிறதா? அந்தத் தீயணைப்பு நிலையங்கள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றனவே, அவை எப்போது தொடங்கப்பட இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1997-98-ஆம் ஆண்டில் மொத்தம் 26 தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தேன். அதற்கான அரசு ஆணை 23-7-1997 அன்று பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இந்த 26 நிலையங்களுக்கும் ஊர்திகள் மற்றும்



1997 அக்டோபர் 15]

தளவாடங்கள் உள்ளிட்ட தொடராச் செலவினம் 6 கோடியே 39 இலட்சம் ரூபாயை பொது ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடனாகப் பெறுமாறு அரசு ஆணையிட்டுள்ளதைத் தொடர்ந்து மத்திய அரசுக்கு இந்தக் கருத்துரு அனுப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து அதற்கான பதில் வந்தவுடன் இதற்கான ஆரம்பப் பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொங்கலூர் சட்டமன்றத் தொகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரிக்கை ஒன்று இருந்து வருகிறது. நிறைய கிராமப் பகுதிகளைச் சேர்ந்த அந்தத் தொகுதியிலே பொங்கலூரை மையமாகக் கொண்டு ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று என்னுடைய தொகுதியின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அறிவிக்கப்பட்டுள்ள 26 நிலையங்களும் கட்டி முடிக்கப்படுகிற அல்லது கட்டிட வேலைகள் தொடங்கப்படுகிற நிலை ஏற்பட்ட பிறகு இதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மரக்காணம், வானூர் ஆகிய இடங்களில் வாடகைக் கட்டிடத்தில் தீயணைப்பு நிலையங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரிடம் என்னுடைய வேண்டுகோளை வைத்தேன். இரண்டு இடங்களிலும் அரசுக் கட்டிடத்தில் அவை இயங்குவதற்கு, தாங்கள் ஆவன செய்வீர்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கேள்வி என்ன?

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்கள் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரசுக் கட்டிடம் தேவை. மரக்காணம், வானூர் ஆகிய இரண்டு இடங்களிலும் அரசுக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்று பணிவுடன் கேட்க விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வாடகைக் கட்டிடத்திலே இயங்குகின்ற இந்த நிலையங்கள் படிப்படியாக அரசுக் கட்டிடத்தில் இயங்கக்கூடிய அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வாறு இதுவரையிலே 118 நிலையங்கள் அரசுக் கட்டிடத்திலே இயங்குபவைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தொடர்ந்து படிப்படியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படும்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி, ராசிபுரம் நகரில் தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. சென்ற மார்ச் மாதக் கூட்டத்தொடரிலே, மாண்புமிகு முதல்வரவர்கள், அரசுக் கட்டிடம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும், நிதி வழங்கப்படும் என்று உறுதியளித்தார்கள். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, ராசிபுரம் நகரில் இருக்கிற தீயணைப்பு நிலையத்திற்கு, புதிதாக அரசுக் கட்டிடம் கட்டுவதற்கு முதல்வரவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி விவரமாகச் சொல்லியிருக்கிறேன். மொத்தம் தமிழ்நாட்டில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் 251 ஆகும். அதிலே அரசுக் கட்டிடத்திலே இயங்குகின்ற நிலையங்கள் 118; பிற துறைகளுக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்குபவை 11 நிலையங்கள். வாடகைக் கட்டிடத்திலே இயங்குபவை 122 நிலையங்கள். இந்த 122 நிலையங்களும் அரசுக் கட்டிடங்களிலே இயங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த நிலையமும் கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** பேரவைத் தலைவரவர்களே, எனது நத்தம் தொகுதியிலே, மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள்தான் அங்குள்ள தீயணைப்பு நிலையத்திற்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அது பல ஆண்டுக் காலமாகியும் இன்னும் கீற்றுக் கொட்டகையிலே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த ஆண்டாவது அதற்கு கெட்டிக் கட்டிடம் கட்டித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.



1997 அக்டோபர் 15]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதுபோன்று தனித்தனியாக வருகின்ற எல்லாக் கேள்விகளுக்கும் நான் ஏற்கெனவே மொத்தமாகப் பதில் அளித்திருக்கின்றேன். எனவே, தனித்தனியாகக் கேள்வி கேட்க வேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேர்வைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த முறை வெள்ளம் ஏற்பட்டபொழுது எங்களுடைய பகுதியில் தீயணைப்பு நிலையத்தினர் மிகுந்த உதவி புரிந்தார்கள். இருந்தாலும் கடற்கரையோரப் பகுதிகளெல்லாம் வெள்ள நேரத்திலே மிகவும் பாதிக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட கடற்கரையோரங்களில் இருக்கிற அனைத்துத் தீயணைப்பு நிலையங்களிலும் படகு வைத்திருக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** படகு வைக்கலாமா என்று கேட்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, தீயணைப்பு நிலையங்கள் என்று பெயர் இருந்தாலும்கூட, வெள்ள நேரங்களில் துயர் தணிப்புப் பணிகளுக்கும் இந்தத் தீயணைப்பு நிலையங்கள் பயன்படுத்தப்படுகின்றன. படகுகளைப் பயன்படுத்துவது பற்றி ஒன்றும் பரிசீலிக்க இயலாது. ஏனென்றால் படகுகளை அந்த நிலையங்களிலே வைத்து விட்டால், பிறகு மீனவர்களுக்கு அது பயன்படாமலே போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**22—**

## நிலக்கோட்டை தொகுதியில் தொழில் துவங்குதல்

***7652—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:***

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, பள்ளப்பட்டி அருகில் தொழில் துவங்குவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் அளவு மற்றும் அதற்கான தொகை எவ்வளவு?

[1997 அக்டோபர் 15

(ஆ) அந்தப்பணம் முழுவதும் நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டதா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** தலைவரவர்களே,

(அ) நிலக்கோட்டை வட்டம், பள்ளப்பட்டி கிராமத்தில் மொத்தம் 379.55 ஏக்கர் நிலப்பரப்பு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனத்திற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 1,76,42,224.00 ஈட்டுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். 417 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், நேற்றைக்கே நீங்கள் கேட்டுவிட்டீர்களே, இன்றைக்கு என்ன கேட்கப் போகிறீர்கள்?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** நேற்றைக்கே கேட்டதுதான். இப்பொழுதும் கேட்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதைத்தான் நான் நேற்றையதினமே கேட்டிருந்தேன். அதற்கு அமைச்சரவர்கள் அருமையான பதிலும் அளித்திருக்கிறார்கள். ஆனால் 413 ஏக்கர் இடத்திலே இப்பொழுது இடம் வேறு குறைந்திருக்கிறது. முன்னூற்றுச் சொச்சம் ஏக்கர்தான் இப்பொழுது சொல்கிறார்கள். இருந்தாலும் இதைச் சீக்கிரமாகச் செய்ய, அதற்குண்டான தண்ணீர் வசதியை ஏற்படுத்தி இந்தத் தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கை எப்பொழுது ஏற்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கான செலவு - திட்டச் செலவு 17 கோடி ரூபாய் ஆகும். இத்திட்டத்தின்படி தொழில் வளாகத்திற்கு உரிய நிலத்தைத் தொழில் மனைகளாகப் பிரிக்கின்ற பணி முடிகின்ற தருவாயிலே உள்ளது. உட்சாலைகள் அமைக்கின்ற அந்தப் பணியும் முடிகின்ற தருவாயிலே உள்ளது. ஒரு எம்.ஜி.டி. தண்ணீரை வைகையாற்றிலிருந்து தொழில் வளாகத்திற்குக் கொண்டு வரும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு கழிவு நீர் சேகரிக்கும் குட்டைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. சிறிய பாலங்கள்- தாம்போகிப் பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்டப்படுகிறது. தண்ணீருக்காக 8 ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. இதெல்லாம் நடைபெறுகிறதா, இல்லையா என்பதை



1997 அக்டோபர் 15]

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பார்த்து, எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தர்மபுரி மாவட்டம், அதுவும் குறிப்பாக பெண்ணாகரம் தொகுதி பொருளாதார ரீதியாக, தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கே ஒரு தொழில் வளாகம் அமைக்க வேண்டுமென்று பலமுறை வற்புறுத்திக் கேட்டபோது, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தர்மபுரி மாவட்டத்திலே ஒரு தொழில் வளாகம் அமைப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்தத் தொழில் வளாகத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்கிறபோது, தர்மபுரி தொகுதிக்கும், பெண்ணாகரம் தொகுதிக்கும் மத்தியிலேதான் தேசிய நெடுஞ்சாலை செல்கிறது, அங்கே பெங்களூர்-சேலம் இரயில் பாதை அமைந்திருக்கிறது. ஆகவே, எங்களுடைய தொகுதியிலே அந்தத் தொழில் வளாகத்தை அமைப்பதற்கு அந்த இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய தொழில் வளாகங்களை நெடுஞ்சாலைகளுக்கு அருகிலே அமைக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய எண்ணம். எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கருத்து பரிசீலிக்கப்பட்டு விரைந்து ஏற்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஜி. சுகவனம்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு பர்கூர் தொகுதியிலே, போச்சம்பள்ளி வட்டத்திலே 1500 ஏக்கர் நிலப்பரப்பு 'டாசிட்' நிறுவனத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, அங்கே இதுவரையிலே எந்தத் தொழிலும் தொடங்கப்படாத நிலையிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டு இந்த ஆண்டு அங்கே தொழில் துவங்க ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 15

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பர்கூரைப் பொறுத்தவரையிலும், திட்டமிடப்பட்ட நிலம் 1400 ஏக்கராகும். அதிலே 768 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. மீதியுள்ள புறம்போக்கு நிலங்களையும், தனியார் நிலங்களையும் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன்.

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தொழிற்பேட்டையைப் பற்றிய கேள்வி. நீங்கள் இப்போது சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுகிறேன். நீங்கள் தொழிற்பேட்டை தொடர்பாக துணைக் கேள்வி கேட்டால் அனுமதிப்பேன், இல்லையென்றால் உட்கார வேண்டும்.

**திரு. ஆர். சிவராமன்:** நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சீரிய முயற்சியால் நமது நாட்டில் பெரிய தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட இந்த ஆட்சியில் மூலப்பொருள்களே இல்லாது பின்தங்கிய பகுதியாக இருக்கக்கூடிய திருப்பத்தூர் தொகுதியில் தொழில்சாலைகள் தொடங்க வேண்டுமென்று, கடந்தமுறை தொழில்துறை மானியத்தில் நான் கேட்டுக்கொண்டேன். அதன் அடிப்படையிலே தமிழ் மக்கள் வாழ வேண்டுமென்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. ஆர். சிவராமன்:** முதல்வர் அவர்கள், மூலப்பொருள்களே இல்லாது இருக்கக்கூடிய எங்கள் பின்தங்கிய தொகுதிக்குத் தொழில் துவங்கக்கூடிய வாய்ப்பை அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மூலப்பொருள்களே இல்லாத இடத்தில் என்ன தொழிலைத் தொடங்குவது? (சிரிப்பு) மூளைப் பொருளாவது இருக்கிறதா என்பதை ஆராய்ந்துதான் செய்ய வேண்டும். (சிரிப்பு)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்ிணங்க அகற்றப்பெற்றது.



1997 அக்டோபர் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆண்டி அம்பலம்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நத்தம் தொகுதி பல ஆண்டுக்காலமாக தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டும், எந்தத் தொழிலுமே அங்கு இல்லை. மரியாதைக்குரிய நமது கலைஞர் அவர்கள், மிகமிகப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட அந்தப் பகுதி, தொழில் துறையில் முன்னேறுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதையும் தொழில் வளமாக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. இந்த அரசினுடைய கொள்கை மாத்திரமல்ல, தோழமைக் கட்சியினுடைய கொள்கைகூட, 'வளமான தமிழகம், வலிமையான இந்தியா' என்பதுதான். எனவே, வளமான தமிழகத்தை நிச்சயமாக உருவாக்குவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 1997 செப்டம்பர் 3-ஆம் நாளன்று பாரத நாடு முழுவதிலுமிருந்து 52 மாவட்டங்களை, தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்திருக்கிறது. தமிழகத்தினுடைய எந்த மாவட்டமும் அதில் சேர்க்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டம் ஏற்கெனவே தொழில் வளர்ச்சியில் பின்தங்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு உள்ள உறவைப் பயன்படுத்தி கன்னியாகுமரி மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்தில், சிவகங்கையில் இருக்கக்கூடிய கிராஃபைட் தொழிற்சாலை எப்போது முழுமையாகச் செயல்படும் என்பதைப்

பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கான முன்னேற்பாடுகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசு அதுசம்பந்தமாக மத்திய அரசிலே உள்ள மாண்புமிகு நிதியமைச்சரோடு பேசி, மாண்புமிகு தொழில் அமைச்சரோடு பேசி ஆவன செய்வது என்பதை, படிப்படியாகத்தான் செய்ய வேண்டும். அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, விரைவில் அதைத் தொடங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *23*, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**23—**

**தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவுகள் துவங்குதல்**

***7088*—திரு. த. பூவேந்தன்.**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், அருள்மிகு பழநி ஆண்டவர் தொழில் நுட்பக் கல்லூரியில் தற்போதுள்ள குடிமுறைப் பொறியியல், இயந்திரப் பொறியியல், மின்னியல் தவிர மின்னணுவியல், தானியங்கிப் பொறியியல் போன்ற பாடப் பிரிவுகளும் தொடங்க, வரும் கல்வியாண்டில் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், அருள்மிகு பழநி ஆண்டவர் தொழில் நுட்பப் பயிலகத்தின் முதல்வரிடமிருந்து இந்தப் புதிய துறைகள் தேவை என்ற கருத்துரு எதுவும் பெறப்படாததால் அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில் பழநியிலுள்ள



மாணவர்கள், எலெக்ட்ரிகல், கம்ப்யூட்டர் பாடங்களைப் பயிலுவதற்கு கோவை, திருச்சி, மதுரை செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, மீண்டும் இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற பாடப் பிரிவுகளைத் தவிர புதிய பாடப் பிரிவுகள், பயிற்சிப் பிரிவுகள் துவங்கப்பட வேண்டுமானால், அந்தக் கல்லூரியிலேயுள்ள அல்லது தொழில்நுட்பப் பயிலகத்திலேயுள்ள வசதிகளை எடுத்துக்காட்டி இன்னென்ன தொழில் பிரிவுகள் தேவை என்று கேட்கப்படுமெனில், அதற்கு அகில இந்திய அமைப்பினுடைய (A.I.C.T.E.) இசைவைப் பெற்று, அதற்குப் பின்னர் அரசு வழங்க வேண்டும். அந்த முறைப்படி எந்த வேண்டுகோளும் அந்தக் கல்லூரியின் சார்பில், அதன் முதல்வரிடமிருந்து கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *24*, திரு. டி. நடராஜன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**24—**

**செஞ்சியில் அரசினர் கலைக் கல்லூரி துவக்குதல்**

***7605*—திரு. டி. நடராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் அரசினர் கலைக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி பகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதி, இன்னும் முன்னேறாத பகுதி. அங்கிருந்து வந்து படிக்கின்ற மாணவர்கள் விழுப்புரம்,

[1997 அக்டோபர் 15

திருவண்ணாமலை, திண்டிவனம் ஆகிய நகரங்களுக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. ஏறக்குறைய 35 கிலோமீட்டர் செல்ல வேண்டியுள்ளது. அதனால் அந்த விவசாயிகள் அவர்களுடைய பிள்ளைகளை படிப்பதற்காக அனுப்புவதில் சிரமம் உள்ளது. அதனால் அரசு முன்வந்து, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, ஒரு அரசுக் கல்லூரியை அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள், கல்லூரியிலே படித்தாலும், அதற்குப் பின்னரும் வேலைவாய்ப்பு இடர்ப்பாடுகளுக்கு ஆளாகிறார்கள். எனவே, மேல்நிலைப் பள்ளிப் படிப்பையே ஏதேனும் ஒரு வகையில் தொழிற் படிப்போடு இணைத்து, அவர்கள் பயன் அடையக்கூடிய அளவிற்கு, சுய வேலை தேடிக்கொள்ளக்கூடிய அளவிற்கு உருவாக்க முடியுமா என்பதும் அரசினுடைய ஆலோசனையிலே இருக்கிறது; பரிசீலிக்கப்படுகிறது. அதேநேரத்தில் புதிய கல்லூரிகள் கேட்கப்படுகிற பல்வேறு வட்டாரங்களில் துவங்குவதற்கான நிதியடிப்படை போதுமான அளவிற்கு இல்லாத காரணத்தால், அந்தக் கருத்து பொதுவாக ஏற்கப்படுவதில்லை. இருந்தாலும், நிதி வாய்ப்பு, நிதி வசதி கிடைக்கிறபோது ஆலோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பண்பட்ட சமூகம் உருவாவதற்கு மிக முக்கியமானது கல்வி. அந்தக் கல்விக்காக மாநில அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து செலவழிக்க வேண்டும் என்று கருதினாலும் நிதி இல்லை என்பதால், கல்வி முக்கியமான ஒரு விஷயம் என்பதைக் கருத்திலே கொண்டு, பொது மக்களிடம் நீண்டகாலக் கல்விக் கடன் எழுப்புவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *9-50*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கடன் எழுப்ப முடியுமா, எழுப்பினால் எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பது கேள்விக்குரியது. ஆனால் கடன் எழுப்பினாலும்கூட எந்த அளவுக்கு வெற்றிபெறும் என்று



1997 அக்டோபர் 15]

கருதமுடியவில்லை. சுயநிதிக் கல்லூரிகள் ஆங்காங்கே துவங்கப்படுவதன் மூலமாகத் தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்கு அவர்களே செலவை ஏற்று கூடுமானவரையில் படிக்க வைக்க முடியும் என்பது அரசாங்கத்தினுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசினர் கல்லூரிகள் துவங்குவதற்கு நிதி வசதி இல்லையென்றாலும்கூட, இருக்கின்ற கலைக் கல்லூரிகளில் புதிய பாடத் திட்டங்களைத் துவங்கவேண்டும். குறிப்பாக, நெல்லையில் 25 ஆண்டுகளாக அரசு மகளிர் கல்லூரி ஒன்று இயங்கி வருகின்றது. புதிய பாடத் திட்டமே இல்லை. Applied Maths மற்றும் சுற்றுலாத் துறை பட்டப் படிப்புக்கு அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையாவது அரசு செய்துதர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலேகூட ஒரு கொள்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் வேறு துறையில் பாடம் நடத்துகின்றவர்களாக ஏற்கெனவே இடம் பெற்றிருந்தாலும் கூட, இந்தப் புதிய பாடத் திட்டத்தையும் நடத்துவதற்கு உரிய தகுதி அவர்களுக்கு இருக்குமானால், புதிய செலவு என்ற தேவை இல்லாமல், புதிய பாடத் திட்டங்களைக் கொண்டு வருகின்ற கல்லூரிகளில் ஏற்றுக்கொண்டு அது அனுமதிக்கப்படுகிறது. எனவே, அந்த வகையில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு தனியார் கல்லூரிகளை மிகவும் கருணையுள்ளத்தோடு வரவேற்கிறது. ஆனால் ஏழைக் குழந்தைகள் தனியாருடைய கல்லூரிகளில் சேர்ந்து பணம் கட்டிப் படிப்பதற்கு என்ன வாய்ப்பு இருக்கிறது என்பதையெல்லாம் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நிலக்கோட்டையில் பெண்கள் அரசுக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் - Assurance given by our Hon. Chief Minister in the Assembly - கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அன்றைக்கு சொன்ன அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று என்பதை என்னால் புரிந்துகொள்ள

[1997 அக்டோபர் 15

முடியவில்லை. நாங்கள் இடத்தை இனாமாகக் கொடுக்கிறோம். கட்டிடமும் கொடுக்கிறோம். சம்பளம் கொடுக்க வேண்டியது ஒன்றுதான் பாக்கி. அதைக்கூட வேண்டுமானால் நான் யாரிடமாவது வாங்கிக் கொடுக்கிறேன். இந்த நிதியாண்டில் இல்லாவிட்டாலும், வரக்கூடிய ஆண்டிலாவது அங்கே கல்லூரியை ஆரம்பிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இடம் தருவதாகச் சொல்கிறார்கள், கட்டிடமும் தருவதாகச் சொல்கிறார்கள், நிதியும் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, அவர்கள் பெயரிலேயே ஒரு கல்லூரியை ஆரம்பிப்பார்களானால் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு (குறுக்கிடு) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், நீங்கள் எத்தனை கேள்வி கேட்பீர்கள்? உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தனியாரால் நடத்தப்படுகின்ற உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அரசு அங்கீகாரம் கிடைத்த பின்பும், கிட்டத்தட்ட 7, 8 ஆண்டுகளாக ஆசிரியர்கள் சம்பளம் இல்லாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கருணையுள்ளம் கொண்ட இந்த அரசு, அவர்கள்மீது கருணை கொண்டு, தமிழகத்தில் இருக்கின்ற தனியாரால் நடத்தப்படுகின்ற, சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணைக் கேள்வியா? மூலக் கேள்வி கல்லூரியைப் பற்றியது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா.மு. முபாரக்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதியில் கல்லூரி ஒன்று அமைக்கப்பட



1997 அக்டோபர் 15]

வேண்டுமென்று கடந்த ஆண்டே கோரிக்கை வைக்கப்பட்டது. தற்சமயம் நிதி வசதி இல்லாததால் அரசுத் தரப்பில் கல்லூரி ஆரம்பிக்க இயலாது என்கிற பதில் எனக்குத் தரப்பட்டிருக்கிறது. அவையிலும் அறிவிக்கப்பட்டது. தற்போது மைய அரசு, இந்தியா முழுவதும் பின்தங்கிய மைனாரிட்டி சமுதாயத்தினருக்காக 50 பிளாக்குகளைத் தேர்ந்தெடுத்து, அதிலே கூடலூர் பிளாக்கும் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அந்த பிளாக்கில் கல்விக்காக எவ்வளவு தொகை வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதைப் பயன்படுத்தி கூடலூர் தொகுதியில் கல்லூரி அமைக்கத் தேவையான முயற்சிகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மிக மிகப் பிற்படுத்தப்பட்ட வட்டாரம் என்று அறிவிக்கக்கூடிய ஒன்றியங்களில், பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட இடங்களில், அந்தப் பிற்படுத்தப்பட்ட பகுதியை முன்னேற்றுவதற்கு முன்னுரிமையாக, தொடக்கக் கல்வி, அதற்கான கட்டிடங்கள், அடுத்து நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகள் என்ற அடிப்படையிலே தொடங்கித்தான் கல்லூரி அளவுக்கு உயர்கல்வி வழங்க வாய்ப்பு இருக்குமேயானால் அது கருதப்படுமே தவிர, கல்லூரி தொடங்குவது என்பது அந்தப் பிற்படுத்தப்பட்ட வட்டாரத்தினுடைய முன்னேற்றத்திற்கு முன்னுரிமை பெற்றதாக இருக்க முடியாது. எனவே அப்படி வாய்ப்பு இருக்குமானால் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் மாநிலக் கல்லூரியில் ஒரு விழாவின்போது, 'அரசுக் கல்லூரிகளில் கணினி பயிற்சிப் பாடப் பிரிவுகள், சுய நிதிப் பாடப் பிரிவுகள் தொடங்க அனுமதி தரப்படும்' என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். எனவே, அத்தகையப் பாடப் பிரிவுகளை, கணினி பயிற்சிப் பாடப் பிரிவுகளை, மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற விழுப்புரம் தொகுதியிலே, விழுப்புரத்திலே, திண்டிவனம்

[1997 அக்டோபர் 15

கலைக் கல்லூரியிலே வரும் கல்வி ஆண்டிலாவது துவங்குவதற்கு அரசு முன்வருமா? செஞ்சியிலே ஒரு தொழில் நுட்பக் கல்லூரியாவது தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கணினிபொறிப் பாடம் அரசுக் கல்லூரிகளிலே இடம் பெற வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை. ஆனால் நிதிநிலை அறிக்கையினுடைய பகுதி-2 திட்டத்தில்—Part II Scheme-ல்—எந்த அளவுக்கு நிதி கிடைக்கிறதோ, அதைப் பொறுத்து இது பரிசீலிக்கப்படும். பாலிடெக்னிக் தொடங்குவதற்குத் தனியார்கள் பல பேர் முன்வருகிற காரணத்தால், அப்படி வருகிறவர்கள் அந்த இடத்தில் தொடங்க அனுமதி கேட்கிறபோது உடனடியாக அனுமதிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள்மிகு பழனியாண்டவர் கோவில் வருமானமுள்ள கோவில். அந்தக் கோவிலின் சார்பாக ஒரு தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதுமாதிரி தமிழ்நாட்டில் வருமானமுள்ள கோவில்கள் உள்ள இடங்களில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு முன்வருமா? அதுமட்டுமல்லாமல், ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள ஸ்ரீஆண்டாள் திருக்கோயிலின் கோபுரம் அரசு முத்திரைச் சின்னத்தில் இடம் பெற்றுள்ளது. ஆகவே, அந்தத் திருக்கோயிலின் சார்பாக ஒரு அரசு தொழில் நுட்பக்கல்லூரி ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஏராளமான நிலங்கள் அங்கே இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொண்டு, அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறையினுடைய நேரடிப் பொறுப்பிலுள்ள அந்த நிர்வாகம், அவர்களுடைய நிதி வசதியைப் பொறுத்து அதனை ஆரம்பிப்பதற்கு விரும்பினால், அரசு அதை வரவேற்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே, மூல வினாவே தவறு. தொழில்நுட்பக் கல்லூரி என்று சொல்லியிருக்கிறார்கள். அது தவறு. கல்லூரி கிடையாது., அது பள்ளிதான். திரு. ஆர். சக்ரபாணி.



1997 அக்டோபர் 15]

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான 300 ஏக்கர் நிலம் எனது ஒட்டன்சத்திரம் தொகுதியில் கலிங்கத்தில் உள்ளது. அங்கு ஒரு பொறியியற் கல்லூரி பழனி ஆண்டவர் தேவஸ்தானம் மூலமாகத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி ஆண்டவரையே வேண்டிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை காரணமாக அரசுக் கல்வி நிறுவனங்கள் புதிதாகத் துவக்குவதில் சிக்கல்கள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தற்போது நடந்து கொண்டிருக்கின்ற அரசுப் பள்ளிகள், கல்லூரிகளில் ஏற்பட்டுள்ள காலியிடங்கள் குறித்து—இறப்பின் காரணமாகவும், ஓய்வு பெற்றதன் காரணமாகவும் பல்வேறு காலியிடங்கள் இருக்கின்றன—அரசு தீவிரப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. பல கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. இந்தக் காலியிடங்கள் இருக்கின்ற காரணத்தால், இருக்கின்ற வகுப்புகள் கூட சரியாக நடைபெறாமல், செம்மையாகக் கல்வி கற்பிக்க முடியவில்லை. இதைத் தீர்க்க அரசு துரிதமாக உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது தொடக்கப் பள்ளியிலிருந்து மேல்நிலைப் பள்ளி, கல்லூரி வரையில் ஏராளமான பணி இடங்கள் காலியிடங்களாக இருந்தன. அவற்றை நிரப்புவதற்கு முறைப்படியான தேர்வு நடத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டு, பி.டி. ஆசிரியர்கள், போஸ்ட் கிராஜுவேட் ஆசிரியர் போன்றவர்கள் தற்காலிகமாக, கடந்த ஆண்டு நியமனம் செய்யப் பட்டார்கள். அப்படி தற்காலிகமாக 6 மாதம் வேலை பார்த்த அவர்களுக்கு முன்னுரிமை கேட்கிறபோது அரசு வேலையில் முன்னுரிமை வழங்க முடியவில்லை. ஏனென்றால் 10(ஏ)(1) என்ற தற்காலிக நியமன முறை நீக்கப்பட்டுவிட்டது. எனவே, ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்த ஆசிரியர்களைத்தான் நிரந்தரமான பணியில் அமர்த்த வேண்டுமென்ற விதிமுறை ஏற்கப்பட்டு

இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு அதை விரைவுபடுத்த முயற்சித்தபோது, ஆண்டுதோறும் நடைபெறுகிற முறைப்படி துறையினர் செயல்படும் காரணத்தால்—இந்த ஆண்டு அக்டோபர் வரையிலே அந்தத் தேர்வு வாரியத்தினுடைய பணிகள் நடைபெற்று அவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்—வருகிற ஆண்டு, நிதிநிலை அறிக்கை வருவதற்கு மூன்று திங்களுக்கு முன்னாலேயே அடுத்த ஆண்டில் எவ்வளவு ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் அல்லது காலியிடங்கள் எத்தனை வருகின்றன என்பதைக் கணக்கிட்டு, ஏப்ரல் திங்களிலேயே அந்தப் பட்டியல் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டு, ஜூலை முதல் தேதி, தேர்வு வாரியம் தேர்ந்தெடுத்த ஆசிரியர்கள் நியமிக்கப்படக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று துறைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஏற்பட்ட குறைபாடுகளின் சொச்சமிச்சமாக இருக்கிற குறைபாடுகள் வருகிற ஆண்டில் நிச்சயமாக நீக்கப்படும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் கல்லூரிகள் திறக்கப்படுவதற்கான கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், பல கல்லூரிகளிலே வேலைநிறுத்தம் ஏற்பட்டு கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சென்னை பச்சையப்பன் கல்லூரி, செல்லம்மாள் கல்லூரி ஆகியவை மூடப்பட்டு, மாணவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு, அவர்கள் விடுதலை ஆகமுடியாத சூழ்நிலை இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. ஆகவே, இவற்றில் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளோ அல்லது பள்ளிகளோ, சில இடங்களில் அவர்கள் வேலை நிறுத்தத்திலே ஈடுபடுவதற்கு, அவரவர்களுக்கு ஒரு காரணம் இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே காரணம் இல்லை. அவர்களும்கூட, ஒரு அடையாள வேலைநிறுத்தமாகச் செய்துவிட்டுப் பின்னர் இரண்டு நாட்களில் கல்லூரிகளிலோ அல்லது பள்ளிகளிலோ தொடர்ந்து படிப்பைத் தொடங்குகிறார்கள்; ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது. ஆனால், பச்சையப்பன்



கல்லூரியினுடைய அறக்கட்டளை, இப்பொழுது உயர்நீதிமன்றத்தினுடைய Official Assignee அவர்களின் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறது. அரசின் பொறுப்பில் நேரடியாக இல்லை. அரசு, ஆலோசனைதான் வழங்க முடியும். எனவே அதன் பிரச்சினைகளுக்கு வேண்டுமானால் அரசு ஆலோசனைகள் வழங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. இரா. பெர்னார்டு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**25—**

## அமரர் அறைக்குக் குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல்

***916—திரு. இரா. பெர்னார்டு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், அரசு தலைமை மருத்துவமனையில் "அமரர் அறை"-க்கு குளிர்சாதன வசதி செய்யாதிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதன் மூலம் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகர்கோவில் அரசு தலைமையிட மருத்துவமனையில் "அமரர் அறை" க்கு குளிர்சாதன வசதி செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் முடிவு செய்யப்பட்டு பணி தொடங்கப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

**திரு. இரா. பெர்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூதறிஞர், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நலத் திட்டங்களை விரைந்து செயலாற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், நாகர்கோவில் தலைமை மருத்துவமனையில், பொதுச் சுகாதாரம் மற்றும் அங்கு பணிபுரியும் பணியாளர்கள் நலன்

ஆகியவற்றைக் கருத்திற் கொண்டும், தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்காகவும் இப்பணியினை விரைந்து முடித்தமைக்கு நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவிப்பதோடு, அந்த அறையில் பல பெட்டிகள் அமைக்கவும், தாலுகா மருத்துவமனைகளிலும், நகராட்சி மருத்துவமனைகளிலும் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தவும் அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா எழுப்பப்பட்டது 1996-ஆம் ஆண்டு. ஆனால், 5-6-1997 அன்று இந்த அமரர் அறைக்கு குளிர்சாதன வசதி செய்து ஒப்பந்தக்காரர் மருத்துவமனையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இப்போது அந்தக் குளிர்சாதன அறை மிக அருமையாக இயங்கி வருகிறது. தாலுகா மருத்துவமனைகளிலுள்ள அமரர் அறைக்கும் குளிர்சாதன வசதி ஏற்படுத்தித்தரமுடியுமா என்று கேட்கிறார்கள். முதலில், மாவட்ட மருத்துவமனைகளிலே இந்தப் பணிகளைச் செய்து முடித்ததற்குப் பிறகு, அடுத்த கட்டமாக தாலுகா மருத்துவமனைகளிலுள்ள அமரர் அறைக்கு இத்தகைய வசதியைச் செய்து தருவதற்கு அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மருத்துவமனை பற்றிக் கேட்பதாக இருந்தால், திரு. டி. மணி கேட்கலாம்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட தலைமை மருத்துவமனையில் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்கின்றபோது-அங்கே இருக்கின்ற நிர்வாகிகள் மூன்று பேர் இல்லாத ஒரு சூழ்நிலையும், முக்கியமான ஐந்து மருத்துவர்கள் அங்கே இல்லாத ஒரு சூழ்நிலையையும் ஏற்கெனவே கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன். இன்னும் அது நிறைவேற்றப்படாமல் உள்ளது. அவர்களை நியமிக்க அரசு விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஐநூறுக்கும் மேற்பட்ட மருத்துவர் பதவிகள் நிரப்பப்பட முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. பிறகு, தேர்வாணையத்திடம் இந்த அரசாங்கம் கேட்டுக் கொண்டு,





அதன்படி அவர்கள் தேர்வு செய்து, கடந்த மாதம் 600 மருத்துவர்களை, இந்த அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கடந்த மாதத்திலிருந்து படிப்படியாக ஒன்றியங்களிலும், மாவட்டங்களிலும், தாலுகாகளிலும் எல்லா மருத்துவர் பதவிகளும் நிரப்பப்பட்டு வருகின்றன. இனி, எங்கேயாவது அந்தக் குறைபாடு இருக்குமானால், ஒரு வாரத்திற்குள்ளாக அந்தக் குறை நீக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. கு. மனோகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**26—**

## ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்

***5992—திரு. கு. மனோகரன்:***

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர். கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி தொகுதிக்குட்பட்ட ஜருகு, நூலஹள்ளி, கடகத்தூர், முத்தம்பட்டி, அதகபாடி ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி தொகுதிக்குட்பட்ட ஜருகு, நல்லம்பள்ளி ஒன்றியத்தைச் சார்ந்தது. இங்கு மக்கள் தொகைக்கு ஏற்ப 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. மேலும் நூலஹள்ளி, கடகத்தூர், முத்தம்பட்டி, அதகபாடி ஆகியவை தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வருகின்றன. இங்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும், தருமபுரி நகரில் அரசு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையும் உள்ளன. இவை போதுமானவையாகும் என்பதாலும், இந்த ஊர்களில் துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதாலும், மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து துணை சுகாதார நிலையங்களுக்கு 8 கி.மீ. தூரத்திற்குள் ஆரம்ப சுகாதார நிலையமும், அரசு மருத்துவமனையும் உள்ளதாலும், மேற்படி ஊர்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி தொகுதி, இரண்டு ஒன்றியங்களை உள்ளடக்கியது. அதிலே, தருமபுரி ஒன்றியத்திலே, சுமார் ஒன்றே முக்கால் இலட்சம் பேர் வாழ்கிறார்கள். அங்கு இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டும்தான் உள்ளன. அதேபோல், நல்லம்பள்ளி ஒன்றியத்திலே சுமார் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் பேர் வாழ்கிறார்கள். அங்கேயும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மட்டும்தான் உள்ளன. ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செல்ல வேண்டுமானால், சுமார் *10* கிலோமீட்டர் அல்லது *15* கிலோமீட்டர் தூரம், மக்கள் பிரயாணம் செய்துதான் மருத்துவ வசதி செய்துகொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு, *600* இடங்களுக்குக் கட்டிடங்கள் வழங்கியதுபோல, வருங்காலங்களிலே, கொள்கை முடிவு எடுக்கும்போது, எனது தொகுதியிலுள்ள அந்த இடங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு யாரோ தவறான தகவல் தந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தினுடைய மக்கள் தொகை *1996*-ஆம் ஆண்டு மதிப்பின்படி, ஒரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று இருபது. இந்த ஒரு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து எண்ணூற்று இருபது என்ற மக்கள் தொகையைக் கொண்ட அந்த ஒன்றியத்தில் *5* ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. ஒன்று, பாளையம்புதூர்; இரண்டு, இந்தூர்; மூன்று, பண்டஹள்ளி; நான்கு, தோப்பூர்; ஐந்து, வாலிகம். எனவே, ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் *30* ஆயிரம் மக்கள் தொகை என்ற அடிப்படையிலேதான், இந்த *1,420* ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. உறுப்பினர் குறிப்பிட்ட தருமபுரி ஒன்றியத்தில், *1,24,150* பேர் இருக்கிறார்கள். அங்கே இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும், தருமபுரியிலே ஒரு மாவட்ட மருத்துவமனையும் இயங்கி வருகிற காரணத்தினாலே, வேறொரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர், பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி, இப்போதுகூட, *600* டாக்டர்களை





நியமித்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதேநேரத்தில், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா மருத்துவமனைகளிலுமாக, தமிழ்நாட்டில், கிட்டத்தட்ட *200* மருந்தாளுநர்கள் - Pharmacists - பதவிகள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. எங்கெங்கே மருந்தாளுநர்கள் தேவை என்பது குறித்து ஓர் உயர்மட்டக் குழு போடப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். டாக்டர்கள் நியமிக்கப்பட்ட பிறகும், மருந்தாளுநர்கள் இல்லாத காரணத்தினால், மருந்துகள் கொடுக்கப்பட முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இதிலே தனிக் கவனம் செலுத்தி, உடனடியாக மருந்தாளுநர்களை - Pharmacists - நியமிக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்தாளுநர்கள் இல்லை என்ற குறைபாடு பொதுவாக அரசுக்கு அதிகமாக வரவில்லை. இருந்தாலும், எங்கேயாவது அப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால், அந்தந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய 'Employment Exchange' மூலமாக அந்தப் பதவிகளை நிரப்பிக் கொள்ளலாம் என்று ஏற்கெனவே அரசாங்கம் அந்தந்த மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறது.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *27*, திரு. கோ.க. வீரப்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**27—**

### திருச்செங்கோடு வட்டத்தைப் பிரித்தல்

***10028—திரு. கோ.க. வீரப்பன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இப்பொருள் குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. கோ.க. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு வட்டம், நான்கு ஒன்றியங்களும் இரண்டு நகராட்சிகளும், நான்கு பேரூராட்சிகளும் அடங்கிய மிகப் பெரிய வட்டமாகும். நீண்ட நாட்களாக அந்த வட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை மக்களிடையே இருந்து வருகிறது. மேலும், என்னுடைய தொகுதியில் அடங்கிய பரமத்தி-வேலூர் வட்டம் முன்பு நாமக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தோடு இணைக்கப்பட்டிருந்தது. இப்போது திருச்செங்கோடு கோட்டாட்சியர் அலுவலகத்தோடு அது இணைக்கப்பட்டுள்ளது. பரமத்தி-வேலூர் வட்டத்தைச் சேர்ந்த மக்கள் கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்திற்கு திருச்செங்கோட்டிற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு நாமக்கல்லிற்கும் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தினால், திருச்செங்கோடு வட்டத்தை இரண்டாகப் பிரித்தால் அதை ஒரு தனி சப்-டிவிஷனாக வைத்து, பரமத்தி-வேலூர் வட்டத்தை மீண்டும் நாமக்கல் கோட்டாட்சியர் அலுவலகத்தோடு இணைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதைக் கருத்தில் கொண்டு திருச்செங்கோடு வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் கீழ்க்கண்ட வட்டங்கள் அமையப்பெற்றுள்ளன. 1. நாமக்கல், 2. திருச்செங்கோடு, 3. பரமத்தி-வேலூர், 4. ராசிபுரம். மேற்கண்ட வட்டங்கள் அமையப்பெற்று நாமக்கல் மாவட்டம் 1-1-1997 முதல் செயல்பட்டு வருகிற நிலையில் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டத்தை இரண்டாகப் பிரிப்பது என்பது சாத்தியமல்ல. மேலும், அடுத்து வரும் ஆண்டில் புதிய வட்டங்கள், புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்குவது இல்லை என்று 20-6-1997 அன்று அரசு முடிவெடுத்துள்ளது. புதிய மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் போன்ற கூடுதல் நிர்வாகப் பிரிவுகளை உருவாக்குவது அதிகமான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு வழி வகுக்கும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி வருவாய்ப் பற்றாக்குறை 1700 கோடிக்கு மேல் உள்ளது. இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட கூடுதல் செலவினங்களைத் தவிர்ப்பது அவசியம். ஆகவே, அடுத்த ஓராண்டில் புதிய வட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்குவது இல்லை என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. ம. சண்முகம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**28—**

**பொள்ளாச்சி ஒன்றியத்தில் கூடுதலாகப் பணியாளர்கள் நியமித்தல்**

***3473—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தெரு விளக்குகளைச் சரிவரப் பராமரிக்கவும், புதிய மின் விளக்குகளை இணைக்கவும் சுமார் 39 ஊராட்சிகளுக்கு ஒரு பணியாளர் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளதால், பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் கூடுதலாகப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தெருவிளக்குகளைப் பராமரித்தல், புதிய மின்விளக்குகளை இணைத்தல் போன்ற பணிகள் அந்தந்த வட்டார மின்வாரிய ஊழியர்கள் மூலமாகவே நடைபெற்று வருகின்றன. தற்போதுள்ள சூழ்நிலையில், அரசாணை (நிலை) எண் 225, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 16-7-1997-ன்படி நியமிக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான தெருவிளக்கு உபகரணங்களை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் விலைக்கு மிகாமல் உள்ளாட்சி அமைப்புகள் வாங்கிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் செவ்வனே நடைபெற்று வருவதால் கூடுதல் பணியாளர்களை நியமிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் எல்லாம் தெருவிளக்குகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருப்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதேசமயத்தில் இன்னொன்று, தரமற்ற பல்புகளை வாங்கிப் போடுவதன் மூலமாக

[1997 அக்டோபர் 15

சரியான முறையில் அந்த விளக்குகள் எரிவதில்லை. எனவே, அதை எல்லாம் கண்காணிப்பதற்கு தனியாக ஒரு குழு அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக தனிக் குழு ஒன்று தேவையில்லை. மாவட்ட ஆட்சியர்களுக்கு, இதுபோன்று ஊராட்சி மன்றங்களில் நடக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள். அதுவும் முடியவில்லை என்றால் எங்களுக்குத் தகவல் தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *29*, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**29—**

**வெள்ளக்குட்டை ஊராட்சியைப் பிரித்தல்**

***8480*—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வெள்ளக்குட்டை ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வெள்ளக்குட்டையை தனி ஊராட்சியாகவும், பெரிய வெள்ளக்குட்டை, துரிஞ்சிகுப்பம் மற்றும் நன்னேரி ஆகியவற்றை தனி ஊராட்சியாகவும் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், வெள்ளக்குட்டை ஊராட்சியை இரண்டாகப் பிரித்து, வெள்ளக்குட்டையை தனி ஊராட்சியாகவும், பெரிய வெள்ளக்குட்டை, துரிஞ்சிகுப்பம் மற்றும் நன்னேரி ஆகியவற்றை தனி ஊராட்சியாகவும் பிரிக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

*முற்பகல் 10-15*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அந்தச் செயற்குறிப்பு இல்லை என்று கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தக் கிராமங்கள்...



1997 அக்டோபர் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய தொகுதியைப்பற்றி நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்?

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய தொகுதியாக இருந்தாலும்கூட, அது நான் பிறந்த ஊர் என்கின்ற காரணத்தால் கேட்கின்றேன். அங்கே 4 பெரிய கிராமங்கள் இருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் இவற்றை ஊராட்சிகளாகப் பிரிக்க வேண்டுமென்று நானே வினா தொடுத்து அப்போது அது முடியாமல் போய்விட்டது. காரணம், பேரூராட்சி என்று சொன்னால் எந்தவிதமான திட்டங்களையும் செயல்படுத்த முடியாமல் இருக்கிறது. ஜே.வி.விடி வேலைகள், ஐ.ஆர்.டி.பி. போன்றவை எல்லாம் கிடைக்காத காரணத்தாலே பெரிய கிராமங்களான வெள்ளக்குட்டையை தலைமையிடமாக வைத்து ஒரு ஊராட்சியையும், நன்னேரி, துரிஞ்சிகுப்பம் ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்ட ஒரு இடத்தில் தனி ஊராட்சியையும் பிரித்து அமைத்தால்தான் நிர்வாகம் சரிவர நடைபெறும். இப்போதுதான் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்ற காரணத்தால் உடனடியாகப் பிரிக்காவிட்டாலும்கூட, இப்போது கொள்கை முடிவு எடுத்துவிட்டு, 4 ஆண்டுகள் கழித்து அதைப் பிரிக்கலாம் என்று முடிவு எடுத்தால் நலமாக இருக்கும். அவ்வாறு முடிவெடுத்தால், அடுத்த தேர்தல் வருகின்றபோது அவை இரண்டு ஊராட்சிகளாக ஆக்கப்பட வாய்ப்பிருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, தக்க வழிவகை செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அங்கே நிற்கப்போகிறீர்களா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். அவருக்கு சட்ட நுணுக்கங்கள் நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு உள்ளாட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றினாலொழிய அது இயலாது. இந்த வினாவை எழுப்புவதற்கு முன்னாலேயே அந்த ஊராட்சி மன்றத்தை அணுகி அவர்களிடம் இப்படி ஒரு தீர்மானத்தை இயற்றச் சொல்லியிருந்தால் அதற்கான விடையை நான் முறையாக வைத்திருக்க முடியும். எனவே முறை தவறிக் கேட்கப்படுகின்ற கேள்விக்கு உறுதி அளிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

[1997 அக்டோபர் 15

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தக் குறிப்பிட்ட ஊராட்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். நன்னேரி, துரிஞ்சிகுப்பம், பெரிய வெள்ளக்குட்டை பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஏற்கெனவே என்னிடத்திலே முறையிட்டிருக்கிறார்கள். வெள்ளக்குட்டை பஞ்சாயத்துக்கு வெகு தூரத்தில் இருக்கின்ற கிராமங்களுக்கு முறையான நிர்வாகப் பலன்கள் கிடைக்காமல், சீரான, செம்மையான நிர்வாகம் அங்கே சென்று அடையாமல் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. எனவே அவற்றை முறைப்படுத்தி தனி ஒரு அமைப்பாக, துரிஞ்சிகுப்பம், பெரிய வெள்ளக்குட்டை, நன்னேரி ஆகிய கிராமங்களை இணைத்து ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தினால்தான் அங்குள்ள மக்களுக்கு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின் பலன்கள் கிடைக்கும் என்பது உண்மை. இதுகுறித்து அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன். மேலும், பஞ்சாயத்தின் சார்பாக நானே இங்கே உங்களிடம் முறையிட்டுக்கொள்கிறேன். இதை ஏற்றுக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்துகொள்கின்ற வகையில் நான் ஒரு குறிப்பைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக, ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள் போன்ற அனைத்திலும் இதுபோன்று பிரிப்பதும், சேர்ப்பதும் இன்னும் தேவைப்படுகின்ற அளவில் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், இப்போது அங்கே பொறுப்பிலே இருப்பவர்கள் தீர்மானம் நிறைவேற்றித் தரமாட்டார்கள். அவர்கள் பொறுப்பில் இருக்கிறபோது அரசாங்கம் முன் நின்று, அதை நீக்கிவிட்டு, புதிய அமைப்பை ஏற்படுத்த இயலாது. ஆகையால், தேர்தல் நெருங்கி வருகிறபோது, ஏறத்தாழ *6* மாதங்களுக்கு முன்னால் இதுபற்றிய விவரங்களை இந்த அவையில் தெரிவித்து அல்லது அவரவர்கள் தங்களது தகவல்களைத் தந்தால் அதை வைத்து ஒரு சீராய்வு நடத்தி முடிவு எடுத்து, புதிய தேர்தலை நடத்தலாம் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.



1997 அக்டோபர் 15]

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்ற காரணத்தைக் காட்டி கடந்த பல ஆண்டுகளாக மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்படாமல் உள்ளன. அதனால் ஊராட்சி ஒன்றியப் பணிகள் விரைவாக முடிக்கப்படாமல் தடைப்படுகின்றன. எனவே, மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களை விரைவாகப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்ற நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், கிராம மன்றங்கள் ஆகிய அனைத்துக்கும் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட பதில் அடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *30*, திரு. பொ. முருகேசன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**திரு. சி. ஞானசேகரன்:** இன்னொரு துணை வினாவிற்கு அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I have taken up the next question. Please sit down. Nobody has any right. வினா எண் *30*, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**30—**

## வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்

***9818*—திரு. பொ. முருகேசன் :**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காஞ்சிபுரம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை. *(குறுக்கீடு)*

[1997 அக்டோபர் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கேள்வி எடுக்கப்பட்டுவிட்டது. திரு. ஞானசேகரன், உட்காருங்கள். திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் அரசு சார்பான கல்லூரி எதுவும் கிடையாது. காஞ்சிபுரம் மாவட்டம் ஆனாலும், அதனைச் சுற்றியுள்ள திருவள்ளூர் மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம் எதுவானாலும் அந்த அனைத்து மாவட்டங்களும் விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட மாவட்டங்கள் ஆகும். எனவே, அந்தக் கருத்தின் அடிப்படையிலாவது அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் அண்ணாவின் பெயரில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழகத்திலே 10 வேளாண்மைக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்தக் கல்லூரிகளில் இளநிலை விவசாயப் படிப்பில் 376 பேரும், தோட்டக்கலைத் துறையிலே 75 பேரும், வனவியல் துறையில் 20 பேரும், பொறியியல் துறையில் 40 பேரும், மனைவியில் துறையில் 20 பேரும் என்று மொத்தத்தில் 531 மாணவர்கள் ஆண்டுதோறும் படிக்கின்றார்கள். அதுபோல, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 120 மாணவர்கள் விவசாயப் பாடத்திலே சேர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவதற்கே சிரமமாக இருக்கின்றது. இந்த நிலையில் காஞ்சிபுரத்தில் ஒரு கல்லூரி அமைக்கும் வாய்ப்பு குறைவு என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 31, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**31.**

**அடையாற்றுப் பகுதியை ஆழப்படுத்துதல்**

*9822—**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 அக்டோபர் 15]

(அ) தாம்பரம் தொகுதி, பழைய பெருங்களத்தூர் பகுதியில் அடையாற்றுப் பகுதி மண் சூழ்ந்து, கடற்பாலைச் செடிகள் அடைந்து கிடப்பதை அகற்றி, ஆற்றை அகலப்படுத்தி ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இந்த வினாவிற்குத் துறையின் சார்பில் தரப்பட்டிருக்கின்ற விடையிலிருந்து நான் கூறப்போகின்ற விடை சற்று மாறப் போகின்ற காரணத்தினால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இது ஒரு குறுகிய கால வினாவாக நிதிநிலைக் கூட்டத் தொடரிலே கேட்கப்பட்டது. அப்போது உடனடியாகத் தருகிற பதிலைத்தான் இதில் போட்டிருக்கிறார்கள்.

பெருங்களத்தூர் பகுதியிலே, அடையாற்றிலே மூலைமடுவு என்கிற ஒரு மடுவு சேருகிறது. அங்கு கடற்பாலைச் செடிகள் சூழ்ந்து இருக்கிற காரணத்தால் நீர் சரியாகப் போகவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்தார்கள். 'அதற்கு மதிப்பீடு தயார் செய்யப்படும்' என்று விடை இருக்கிறது. ஆனால் காலம் உருண்டோடிவிட்ட காரணத்தினால், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு மடுவுக்கு மேற்புறத்திலே ரூ.96,500/-ம், மடுவுக்குக் கீழ்புறத்திலே ரூ.90,000/-ம் ஒதுக்கப்பட்டு, ஒப்பந்தம் இடப்பட்டு, பணியும் முடிவு பெற்று, இப்போது கடற்பாலைகள் அகற்றப்பட்டு, செம்மையாக அந்தப் பணி முடிக்கப்பட்டிருக்கின்றது என்கின்ற மகிழ்ச்சிகரமான செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், நன்றி சொல்லப் போகிறீர்களா அல்லது துணைக் கேள்வியா?

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்விதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்தவர்களை அனுப்பி அந்த மூலை மடுவைப் பார்வையிட்டு, பழுதுபார்த்து, சரி செய்து தந்துவிட்டார்கள் என்பது உண்மை. ஆனால், நான் குறிப்பிட்டிருக்கிற இடமானது அந்த மூலைமடுவிலிருந்து சற்றொப்ப 1000, 2000 அடிகளுக்கு அந்தப்

பக்கத்திலே, அடையாறு 5 அடி அகலமாகி குறுகிய காரணத்தினால் அந்த வழியாக தண்ணீர் மதகுக்கு வர முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனை துறை அதிகாரிகள் சுற்றிப் பார்த்தார்கள். எனவே, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அனுப்பி அந்த இடத்தினை மீண்டும் பார்க்க செய்து, அந்த இடத்தினை அகலப்படுத்தியும், அந்தச் செடிகளை அப்புறப்படுத்தியும் கொடுத்தால் தான் வருகிற மழை, வெள்ளக் காலத்திலே. அந்தப் பகுதிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டவுடன், அதிகாரிகள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை அழைத்துக் கொண்டு போய் இடமும் காண்பிக்கப்பட்டு எந்த, எந்த இடத்திலே என்ன செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்போதே மாண்புமிகு உறுப்பினர், 'நான் சொல்கிற இடம் இதுவல்ல, அது இன்னொரு இடம்' என்று காட்டியிருந்தால், அந்த இடத்தையும் எடுத்திருப்பார்கள். ஆனால் அன்றைக்கு 'பரவாயில்லை இதனையும் செய்யட்டும், நாளை இன்னொரு கேள்வியைக் கேட்டு மற்றொரு இடத்தையும் சரிப்படுத்திக் கொள்ளலாம்' என்ற பரந்த நோக்கில் அவர் இருந்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கவனிக்கும், ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பகுதியில் நெய்வேலி காட்டாமணக்கு புதர்போல மண்டிக் கிடப்பதை அரசு அறியுமா? அதனை அகற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அறியும். அதை அகற்ற அரசு சில நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.





**32—**

### பழனி - சாம்ராஜ் நகர் அகல இரயில்பாதை

***2860—திரு. வி.கே. லட்சுமணன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனியையும், சாம்ராஜ் நகரையும் அகல இரயில்பாதை மூலம் இணைக்க தமிழக அரசு மைய அரசிடம் வலியுறுத்துமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் பழனி—சாம்ராஜ் நகர் புதிய அகல இரயில்பாதை இணைப்பிற்கான செயற்குறிப்பு ஏதுமில்லை. இருப்பினும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாம்ராஜ் நகர்—பழனி இரயில்பாதை என்பது கடந்த கால் நூற்றாண்டு காலத்திற்கு முன்பாக சர்வே செய்யப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அந்தப் பாதை மிகவும் முக்கியமான பாதை. ஈரோடு மாவட்டத்திலுள்ள காங்கேயம், தாராபுரம் போன்ற பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பின்னாலும்கூட, அந்தப் பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகள் எதுவும் வரவில்லை. தொழிற்சாலைகள் வரவேண்டுமென்று சொன்னால் அங்கே இரயில் பாதை மிகவும் அவசியமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், பழனி செல்வதற்குக்கூட இது ஒரு சிறந்த இரயில்பாதையாக இருக்க முடியும். எனவே, அங்கே கல்லூரிகள், தொழிற்சாலைகள் அதிக அளவில் வரவேண்டுமென்று சொன்னால், அங்கே ஒரு அகல இரயில்பாதை மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. எனவே, தமிழக அரசு, தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசை அணுகி, அந்த இரயில்பாதைத் திட்டத்தை நிறைவேற்ற ஆவன செய்யுமா என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூன் மாதம் மத்திய இரயில்வே இணை அமைச்சர் மாண்புமிகு சத்பால் மகராஜ் அவர்கள்...

## 2. தகவல் கோரல்

### (அ) வினா நேரத்தில் அலுவலர் மாடத்தில் அதிகாரிகள் ஒருவர் கூட இல்லாதது

**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.*

**HON. SPEAKER :** There is no point of order during question time. (Interruption)

**THIRU M. ABDUL LATHEEF :** I would like to draw the attention of the Hon. Speaker to one point that this is a very important business of the House. We have commenced the Question Hour. The officers on behalf of the Government are expected to take note of the opinions of the Members and Ministers. But, no member of the bureaucracy is present. That is what I would like to draw the attention of the Hon. Speaker.

**HON. SPEAKER :** No, no. The Honourable Ministers themselves can take notes.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா நேரத்தில் எந்த ஒரு அலுவலரும் இங்கே வந்தாலும்கூட, அத்தனைத் துறைகளைப் பற்றிய குறிப்புகளையும் எந்த ஒரு அலுவலராலும் புரிந்துகொள்ளக்கூட முடியாது. ஆகவே இந்தக் கேள்வியும், விடையும் பதிவு செய்யப்பட்டு, அமைச்சர்களுக்குக் கிடைக்கிற காரணத்தால், அமைச்சர்கள் மூலமாகத்தான் கேள்விக்கான விடைகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். தவிர, அலுவலர்கள் இந்த நேரத்தில் வந்திருக்க வேண்டுமென்பது நடைமுறையில் சாத்தியமானதும் அல்ல; பயன்படக்கூடியதும் அல்ல.*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் செயலாளர் வந்தால், அவர்களுக்குரிய இடத்தில் உட்காருவார்கள். இல்லையென்றாலும், செயலாளருக்கு அடுத்து கீழே உள்ள அலுவலர்கள், மேலே மாடத்தில் உட்கார்ந்துகொண்டு குறிப்பு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் கோரிக்கைகள் கவனிக்கப்படவில்லை என்று நினைக்க வேண்டாம். தக்க முறையில் அது கவனிக்கப்படும்.*

**HON. SPEAKER :** The Hon. Member must also be aware that the Hon. Chief Minister is not in the House. It is quite possible that some of the Officers have been summoned by him. (Interruption) Yes, I understand. Your spirit is appreciated.









**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூன் மாதம் மத்திய இரயில்வே இணை அமைச்சர் சத்பால் மகராஜ் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தபோது, இந்த சாம்ராஜ் நகர் அகல இரயில்பாதைப் பணிகளின் ஆய்வு முடிக்கப்பெற்று இருப்பதாக, பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் அறிவித்திருக்கிறார்கள். அதைக் கோடிட்டுக் காண்பித்து இந்த அரசும் 1998-99 நிதி ஆண்டிலேயே இந்த அகல இரயில் பாதைத் திட்டத்தை நிறைவேற்ற வற்புறுத்தி மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், அவர்களுடைய தோழமைக் கட்சி மூலமாக வலியுறுத்தி வேகமாகப் பணியாற்றினால் 1998-99-ஆம் ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிடி. தண்டபாணி.

**திரு. சிடி. தண்டபாணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி-சாம்ராஜ் நகர் தொடர்பு இரயில்பாதை 1935-ஆம் ஆண்டுவாக்கில் ஆய்வு செய்யப்பட்டு, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களில் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டும், என்ன காரணம் என்று தெரியவில்லை, மத்திய அரசு இந்தத் திட்டத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இரயில்வே துறை அமைச்சரைக் கேட்டால், அந்தப் பகுதியிலே தொழில்கள் வளரவில்லை; ஆகவே இரயில், கூட்ஸ் போன்ற வாகனங்கள் இதிலே போவது இலாபகரமாக இருக்காது என்றும், தொழில் துறை அமைச்சரைக் கேட்டால், அங்கே இரயில் செல்வதில்லை, ஆகவே அந்தப் பகுதியில் தொழில்கள் நடத்துவது இலாபகரமாக இருக்காது என்றும், இப்படி மாறி மாறிச் சொல்கிறார்கள், தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசு புதிய இரயில் தடங்களைக் கொண்டுவருவதற்கு சுணக்கம் காட்டுகிறது. எனவே, தீவிரமான முயற்சி எடுத்து, இந்த இரயில்பாதையைக் கொண்டு வருவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுக்க வேண்டும்; 'முயற்சிகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.*

[1997 அக்டோபர் 15

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-7-1996-ஆம் நாளன்று தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய இரயில்வே அமைச்சர் அவர்களிடம் மாநிலத்திலுள்ள அனைத்து இரயில்வே திட்டங்கள் குறித்தும் கலந்தாலோசிக்கின்றபோது, இந்தத் திட்டத்தைப் பற்றியும் வலியுறுத்தி இருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து. மத்திய இணை அமைச்சரும், இதற்கான ஆய்வுப் பணி முடிந்து விட்டதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மீண்டும், 1998-99-ல் இந்தப் பணியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு வற்புறுத்தி, மத்திய அரசாங்கத்திற்குக் கடிதமும் எழுதி இருக்கிறது. ஆகவே, தமிழக அரசு தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கர்நாடக மாநிலத்திலே அகல இரயில்பாதைத் திட்டம் என்பது முழுமையாக முடிந்து இருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே தமிழகத்திற்கு ஓரவஞ்சம் செய்யப்பட்டு இருக்கின்றது. இந்த நேரத்திலே மதுரை-சென்னை அகல இரயில்பாதைத் திட்டம் மிகவும் மந்தமாக நடைபெற்று வருவதைத் துரிதப்படுத்தக் கோரியும், திருச்சியிலிருந்து தஞ்சாவூர் வழியாக விழுப்புரம் வரக்கூடிய மெயின் லைனை அகல இரயில் பாதையாக மாற்றக்கோரியும் மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளின் மூலமாக நானேகூட நேரடியாக டில்லி சென்று மத்திய இரயில்வே அமைச்சரைச் சந்தித்துப் பேசி, இந்தப் பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று கோரியதன் அடிப்படையில், சென்னை-திருச்சிக்கான அகல இரயில்பாதைத் திட்டம் இப்போது விரைவுபடுத்தப்பட்டு இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். அதேபோல மற்ற பணிகளையும் விரைவுபடுத்த வேண்டும் என்று மாண்புமிகு மத்திய



1997 அக்டோபர் 15]

இரயில்வே அமைச்சரிடம் இந்த அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. கடந்த காலத்திலே கர்நாடகத்திலே அதிகப் பணிகள் நடைபெற்றன என்பது உண்மைதான். இப்போது அத்தகைய திட்டங்கள் எல்லாம் ஓரளவிற்கு இங்கே கொண்டுவரப்பட்டு அந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டு இருக்கின்றன. மேலும் விரைவுபடுத்தப்படுவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**33—**

**களவாடப்பட்ட சாமி சிலை மீட்பு**

***2550*—திரு. டி. இராஜேந்தர்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூங்கா நகர் தொகுதியிலுள்ள சுந்தரராஜப் பெருமாள் கோவிலில் வைக்கப்பட்டிருந்த ரூபாய் முப்பது இலட்சம் மதிப்புள்ள சாமி சிலை களவாடப்பட்டதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதனை மீட்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். மேற்படி சிலைக் களவு குறித்து, வேப்பேரி காவல் நிலையத்தில் குற்ற எண் 458/96-ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொண்டதில், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாததால், இவ்வழக்கு 'கண்டுபிடிக்க முடியாததாக' காவல் துறையினரால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், புதிய விவரங்கள் கிடைக்கப்பெற்றாலும், இதே பழக்கத்தைக் கொண்ட பழைய குற்றவாளிகள் அகப்பட்டாலும், வழக்கின் விசாரணை தொடரப்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

[1997 அக்டோபர் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**34—**

**பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

***7458—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:***

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் கூட்டுறவு பால் நிலையத்தில் புதியதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி செந்துறையில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதியிலே செந்துறை பகுதியானது, நிரம்ப பால் கொள்முதல் செய்யப்படும் பகுதி. அங்கு ஒரு நாளைக்கு சராசரியாக 5 ஆயிரம் லிட்டருக்கு மேல் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அங்கிருந்து பாலைக் கொண்டு செல்வது என்றால், பெரம்பலூருக்குத்தான் கொண்டு செல்லவேண்டும். அது 55 கிலோமீட்டருக்கு மேல் தொலைவில் உள்ளது. அப்படி பால் எடுத்துச் செல்லப்படுகிறபோது, அது திரிந்து போகின்ற சூழ்நிலை, கெட்டுப் போகின்ற சூழ்நிலை எல்லாம் உள்ளது. மேலும் கொள்முதல் செய்வதற்காக வாடகை வண்டிகளுக்கு நிரம்பச் செலவிட வேண்டிய சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே, செந்துறையில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் தொடங்க அரசு முன்வருமா என்பதையும், குறைந்தபட்சம் ஏற்கெனவே அந்த மாவட்டத்திலே ஒரு மையப் பகுதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தப் பகுதியிலே ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது; அதையும்



1997 அக்டோபர் 15]

உடனடியாக அரசு நிறைவேற்றித் தருமா என்பதையும் நான் இந்த நேரத்திலே தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செந்துறையில் நாள் ஒன்றுக்கு 4003 லிட்டர் பால் உற்பத்தி செய்து, 3 ஆயிரம் லிட்டர் பால், பெரம்பலூர் பால் கொள்முதல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு குளிரூட்டப்படுகிறது. செந்துறை, மாவட்டத்தின் கடைமடையில் உள்ளது. எனவே, மேலும் பால் உற்பத்தி அதிகமாகும் பட்சத்தில், மாவட்டத்தின் மையப் பகுதி ஒன்றைத் தேர்ந்தெடுக்கின்ற வகையில் அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய காங்கேயம் தொகுதியில் உள்ள சங்கண்டாம்பாளையம் உட்பட, பால் குளிரூட்டும் நிலையங்களில், பல ஆண்டுகளாக தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் பணியினை நிரந்தரம் செய்து கொடுக்க அரசிடம் கருத்துரு உள்ளதா? ஆம் எனில், அது எவ்வளவு நாட்களுக்குள் நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினக்கூலிகளை நிரந்தரம் செய்வது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. கூடியவிரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்தாலோசித்து, அவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

முற்பகல் 10-35

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் துறையில் தனியாரும் நுழைந்து, பால் கொள்முதல் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தரப்படுகின்ற அந்த விலையை விட அதிகமாகக் கொடுத்து பாலை வாங்கி, அதிலிருந்து க்ரீமை

எடுத்துக்கொண்டு, மீதிப் பாலை விற்பனை செய்கிறார்கள். அதனால், சில சமயங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரக்கூடிய பால் குறைவான அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், சில பால் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்துகூட தனியாருக்குப் பாலை விற்பனை செய்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும் அல்லது அந்தத் தனியார் கொள்முதல் விலையைவிட அதிகமான விலையை கூட்டுறவுச் சங்க உற்பத்தியாளர்களுக்குத் தர அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து, பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பால் உற்பத்தியாளர்களுடைய கொள்முதல் விலையை உயர்த்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**35—**

**போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சர்வீஸ் கார்டு வழங்குதல்**

***6585*—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தனியார் துறை போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவருக்கும் சர்வீஸ் கார்டு வழங்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்ட விதிகளில் விதி எண் 44-ஏ (1)-ன் படி அனைத்துப் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், படிவம் XXI-ல் சர்வீஸ் புத்தகம்





உரிமையாளர்களால் வழங்கப்படவேண்டும். எனவே, மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்திலேயே ஒவ்வொரு தொழிலாளிக்கும் சர்வீஸ் புத்தகம் வழங்கவேண்டுமென்று உள்ளது. ஆகையால் அரசு தனியாக உத்தரவு ஏதும் வழங்கவேண்டிய அவசியம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சட்டத்தில் வகை செய்யப்பட்டிருப்பதே பிரச்சினைக்குத் தீர்வாகிவிடாது. சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதை நடைமுறையில் அனுபவிக்கமுடியாமல் முதலாளிகள் தடுக்கிறார்கள் என்பதுதான் மையமான பிரச்சினை. சட்டத்தில் வகை செய்யப்பட்டிருப்பதை அமலாக்கவேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்துப் போராடியதன் விளைவாக, தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் 400 தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டு விட்டார்கள். சட்டத்தில் இருப்பதைக் கேட்டதற்கே டிஸ்மிஸ் செய்யப்பட்டுவிட்ட பிறகு, அவர்கள் தாங்கள் சர்வீசில் இருந்தோம் என்பதை நிரூபிக்கும் ஆதாரம்கூட இல்லாமல் துடிக்கிறார்கள். எனவே, மாநில அரசு சட்டத்தில் வகை செய்யப்பட்டதை நடைமுறையில் அமலாக்குவதற்கான நடைமுறை உத்தரவாதத்தை ஏற்படுத்தும் விதத்தில் எந்தத் தொழிலாளரும் வேலைக்குச் சேர்ந்தவுடன் அவர்கள் கையில் சர்வீஸ் கார்டு கொடுக்கும் ஒரு நடைமுறை உத்தரவாதத்தை அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் இருக்கிறது என்பது ஒரு நிலை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டத்தில் இருப்பது நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி இங்கே கேட்டார்கள். எங்களுடைய துறையின் சார்பாக, பஸ் போக்குவரத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த சர்வீஸ் புத்தகம் முறைப்படி வழங்கப்படுகிறது. அப்படி அந்தச் சட்டத்தை பஸ் முதலாளிகள் - வேலையளிப்போர் - மீறுவார்களேயானால் அவர்கள்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான புள்ளிவிவரமும் இங்கே இருக்கிறது. நான் பெரிய அளவிலே புள்ளிவிவரத்தைச் சொல்லவில்லை என்றாலும், சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1996-ஆம் வருடம் இருந்த

மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை 1,707. பணியாளர்களின் எண்ணிக்கை 1,19,546. மேற்கொண்ட ஆய்வு 6,262. தொடரப்பட்ட வழக்குகள் 660. ரூ.1,48,580/- அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் வரை, மொத்த நிறுவனங்கள் 1,727. பணியாளர்களின் எண்ணிக்கை 1,19,646. மேற்கொண்ட ஆய்வு 3,896. தொடரப்பட்ட வழக்குகள் 451. அபராதம் வசூலிக்கப்பட்டது ரூ.1,38,430/-. புள்ளிவிவரங்கள் தொடருகின்றன. ஆனாலும், எங்கே யூனியன் அமைப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புகார் சொல்கிறார்களோ, அங்கே வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு வழி இருக்கிறது. அதைப்போலவே, தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டால் இன்டஸ்டிரியல் டிஸ்பியூட்ஸ் ஆக்ட்டின் படியும், மற்ற சட்டப் பிரிவுகளின் அடிப்படையிலும் அதற்குப் பரிகாரம் காண வழியிருக்கிறது. அதைப்போலவே, குறைந்தபட்ச போனஸ் கொடுக்கப்படவில்லை என்றாலும், கோரிக்கை விடப்பட்டால் உடனே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கே சிறப்புக் கவன ஈர்ப்புக்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். இதுகுறித்து எந்தெந்த மாவட்டங்களில் எப்படியெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அவையில் அறிவிக்க அரசு தயாராக இருக்கிறது.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1926-ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் காலத்திலேயே தொழிலாளி தன்னுடைய உரிமைகளை வலியுறுத்துவதற்குத் தொழிற் சங்கம் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. ஆனால் 71 வருடங்களுக்குப் பின்னால் இன்று தொழிற்சங்கம் வைத்ததற்காகவே டிஸ்மிஸ் செய்யப்பட்டு விட்டார்கள் 400 தனியார் பஸ் கம்பெனித் தொழிலாளர்கள். எனவேதான், நான் திரும்பத் திரும்ப கேட்டுக்கொள்ள விரும்புவது, தொழிலாளி நீதிமன்றத்தில் தன்னுடைய சர்வீசை உத்திரவாதப்படுத்திக்கொள்ள எந்தப் பிடிமானமும் இல்லை. எனவே, வேலைக்குச் சேர்ந்தவுடன் சர்வீஸ் கார்டு கொடுக்கப்பட்டுவிடுமானால் அந்த சர்வீஸ் கார்டையே ஆதாரமாக்கி அவன் தன்னுடைய நியாயத்தை நிலைநாட்டிக்கொள்ள வாய்ப்பு ஏற்படுமே என்கிற ஆதங்கத்தில்தான் நான் இந்த விஷயத்தை இங்கே கோரிக்கையாக வைத்தேன். எனவே, அவற்றை மறுபடியும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதோடு,





1961-ஆம் ஆண்டு மோட்டார் தொழிலாளர்களுக்கான மையச் சட்டத்தின்படி மாநில அரசிற்கு ஒரு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த மையச் சட்டத்தின்படியான அதிகாரத்தின்படி 5 தொழிலாளிகளுக்கும் கீழுள்ள பஸ் கம்பெனிகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று - 2 மாத கால முன்னறிவிப்பு அடிப்படையில் நோட்டிபிகேஷன் வெளியிடும் உரிமையை மையச் சட்டம் மாநில அரசுக்கு வழங்கியிருப்பதைப் பயன்படுத்தி, 5 தொழிலாளிகளுக்கும் கீழ் உள்ள கம்பெனிகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்ற ஏற்பாட்டைச் செய்வதற்கு மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற எந்தப் புகாராக இருந்தாலும், ஊர் சொல்லி, பெயர் சொல்லி, வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா, இல்லையா என்பது குறித்துத் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய அறிக்கையின்படி உறுப்பினர் சொல்லுகின்ற அத்தனை பிரச்சினைகள் குறித்தும் வழக்குகள் சிலவற்றில் இருக்கின்றனவே தவிர, சிலவற்றில் இல்லை. மேலும், குறைந்தபட்ச போனஸ் சம்பந்தமாகவோ, யூனியன் அமைப்பது சம்பந்தமாகவோ இதுவரைக்கும் எந்த கிளெயிமும் இல்லை. அப்படி இருக்குமேயானால், உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அரசு சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அடுத்து, 5 பேர்களுக்கு உட்பட்டவர்கள் இருந்தால்தான் இந்தச் சட்டம் அமலாகும் என்பது இப்போதைய நிலைமை. ஆனால், ஒருவர் இருந்தால்கூட இதை அமலாக்கலாம் என்று அரசு கடிதம் எழுதி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. எல். சந்தானம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**36—**

**பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு விடுதி கட்டுதல்**

***7370—திரு. எல். சந்தானம்:***

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கென விடுதி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் ஒன்றியத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி ஏதும் இயங்காததால் கட்டிடம் கட்டும் வினா எழாது.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலங்காநல்லூர் ஒன்றியத்தில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதில், ஏறக்குறைய ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். அதைச் சுற்றி நிறைய கிராமப்புறங்கள் இருக்கின்ற காரணத்தினால், அங்கு ஒரு பெண்கள் விடுதி ஏற்படுத்தித்தர வேண்டும் என்றுதான் கேள்வி கேட்டிருந்தேன். அது 'கட்டிடம்' என்று அந்தக் கேள்வியிலே இருக்கிறது. ஆகவே, பெண்கள் விடுதி அங்கே இல்லை என்கின்ற காரணத்தால், வருகின்ற நிதியாண்டிலே அங்கே ஒரு பெண்கள் விடுதியை ஏற்படுத்தித்தர அரசு முன் வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**37—**

### காடுகளில் விதை தூவும் திட்டம்

*4489—**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர்தி மூலம் காடுகளில் விதை தூவும் திட்டம் செயல்முறையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், எந்தெந்தப் பகுதிகளில் இப்பணி மேற்கொள்ளப்படுகிறது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வானூர்தி மூலம் காடுகளில் விதை தூவும் திட்டம் 1994-95-ஆம் ஆண்டு முதல் செயல்முறையில் இல்லை. எனவே, இவ்வினா எழவில்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு வானூர்தி மூலம் .காடுகளில் விதை தூவும் திட்டம் செயல்முறையில் இருந்திருக்கிறது என அறிகிறேன். அப்படி இருந்திருந்தால் எந்தெந்த இடங்களில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது? மேலும், வானத்திலிருந்து விதை தூவுகின்றபோது, கயிறு அறுந்த பட்டங்களாய், காற்றடிக்கும் திசையில் இலக்குகளின்றி அந்த விதைகள் போய் விழுந்து முழுப் பலன் அளிக்க முடியாமல் போகின்ற நிலை ஏற்பட்டது என்று அறிகிறேன். எனவே, அரசிடம் ஏதேனும் மாற்றுத் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வானூர்தி மூலம் காடுகளில் விதை தூவும் திட்டம் மத்திய அரசின் 100 சதவிகித நிதியுதவியுடன் 1988-89-ல் துவங்கப்பெற்று, 1994-95 வரை செயல்படுத்தப்பட்டு வந்தது. இது 71,900 ஹெக்டேரில் 496.08 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. வேலூர், பள்ளிக்கொண்டான், சேலம், சத்தியமங்கலம், திண்டுக்கல், தேனி, மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், திருச்சி, கடலூர், செங்கல்பட்டு ஆகிய வனக் கோட்டப் பகுதிகளில் இது செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்திற்கு 1994-95-ஆம் ஆண்டில் மத்திய அரசு நிதியுதவி அளிக்காத காரணத்தினாலும், மேலும் இத்திட்டம் எதிர்பார்த்த முன்னேற்றம் அளிக்காத காரணத்தினாலும், 1995-96-ஆம் ஆண்டிலிருந்து விதை தூவும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர் மூலம் மலைப் பகுதிகளில் 1994-95-ஆம் ஆண்டு வரை

[1997 அக்டோபர் 15

விதைகள் தூவப்பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இத்திட்டத்தில் செலவுக்கு ஏற்ற முன்னேற்றம் அடையப்பட்டதா? விதை தூவப்பட்ட இடங்களில் எல்லாம் மரங்கள் முளைத்தனவா? அதேபோல, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமருதூரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டம் எதிர்பார்த்த பலன்களை அளிக்காத காரணத்தினால் மனித சக்தி மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு முடிவு எடுத்து, 1993-94 முதல் 1996-97 வரை 12,300 ஹெக்டேர் நிலத்தில் ரூ.67.29 இலட்சம் செலவில் இது செயல்படுத்தப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**38—**

**கால்நடை மருத்துவக் கல்லூரி அமைத்தல்**

***9614*—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டை கால்நடை பெருக்குப் பண்ணையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 39, திரு. கோ. தளபதி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 15]

**39—**

**ஆதிதிராவிட மாணவ, மாணவியர் விடுதிகளுக்குக் கட்டிடம்**

***6358*—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், டிகல்லுப்பட்டியில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகளுக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேடப்பட்டி தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில், அந்த ஏழை மாணவர்களுக்கு இந்த ஆண்டு விடுதி கட்ட அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் ஆதிதிராவிடர் நலத் துறையின் சார்பாக விடுதி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஆண்டுகளில் விடுதி கட்டுவது பற்றி, நிதிநிலையைப் பொறுத்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**40—**

**மீனவர்களுக்கு மானியம் வழங்குதல்**

***7763*—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்கு தொழில் பாதிக்கப்படும் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் அரசு மானியம் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மீனவர்களுக்கு மானியங்கள் எதற்கெல்லாம் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல, தூத்துக்குடி மாவட்டம், பழையகாயல் பகுதியில் உள்ள மீனவர்களுக்கான முகத்துவாரம் மண் மேடாகக் காட்சியளிக்கிறது. அதைச் சீர்செய்து தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனியர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் வளர்ச்சிக்காக மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அது குறிப்பிட்ட மாதத்திற்கு மட்டுமல்லாமல், எல்லா மாதங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. பாரம்பரிய மீனவர்களுக்கு மீன்பிடிக் கலங்களான கட்டுமரம், வள்ளம் போன்றவை வாங்குவதற்காக மானியம் வழங்கப்படுகிறது. உட்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் வாங்குவதற்காக மானியம் வழங்கப்படுகிறது. வலைகளுக்கான 'மால்' வாங்குவதற்கு மானியம் வழங்கப்படுகிறது.

மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின்கீழ் மீன் வளர்ப்பதற்காக மீன் இடுபொருள் வாங்குவதற்காக மானியம் வழங்கப்படுகிறது. மேலும் தகவல் தொடர்புச் சாதனங்கள் வாங்குவதற்காக மானியம் வழங்கப்படுகிறது. குளிர்பதனப் பெட்டி வாங்க மானியம் அளிக்கப்படுகிறது. இதுபோன்ற மானியங்கள் எல்லா மாதங்களிலும் வழங்கப்படுகின்றன. அதேபோல முகத்துவாரங்களைத் தூர் வாருவதற்காக 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக நமது அரசு 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் கொடுத்ததை நான் எடுக்கவில்லை என்றால்தான் நீங்கள் கேட்க வேண்டும்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) திருவள்ளூர் மாவட்டம், மணவாள நகர் காவல் நிலையத்தில் திரு. கோவிந்தசாமி மரணம் அடைந்தமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவள்ளூர், மணவாள நகர் காவல் நிலையத்தில் திரு. கோவிந்தசாமி என்பவர் மரணம் அடைந்தது குறித்து சில உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு, கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்து இருக்கின்றார்கள். இவை அத்தனையையும் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கருதி, கட்சிக்கு ஒருவர் என்ற முறையிலே, திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலிலே பேச அழைக்கிறேன்.

முற்பகல் 10-50

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களின் பெயர்கள்—திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி.ஆர். சுந்தரம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. இ. கணேசன், திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன், திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. டி. மணி. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடத்திலே என்னுடைய உரிமை பாதிக்கப்பட்ட இரண்டு விஷயங்களைப்பற்றி தங்களுடைய அறையிலே அனுமதி கேட்டிருக்கிறேன். அந்த இரண்டு விஷயங்களைப்பற்றி இன்று அவையிலே எழுப்புவதற்குத் தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு விஷயத்திற்கு அனுமதி மறுத்துவிட்டேன். அதைப்பற்றிக் கேள்வி கேட்கக்கூடாது. இரண்டாவது விஷயத்தைப்பற்றி எழுப்புவதற்கு நாளை அனுமதி கொடுக்கப்படும். சிறப்புக் கவன ஈர்ப்பு, திரு. சி. ஞானசேகரன், பேசலாம்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) திருவள்ளூர் மாவட்டம், மணவாள நகர் காவல் நிலையத்தில் திரு. கோவிந்தசாமி மரணம் அடைந்தமை—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தையும், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் கூட்டத்தையும் சென்னையிலே கூட்டி, அவர்கள் நாட்டினுடைய, நிர்வாகத்தினுடைய முன்னேற்றங்களை எல்லாம் அலசி ஆராய்ந்து இருக்கிறார்கள். அப்படி ஆய்வு செய்யப்பட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவல் நிலையத்திற்கு விசாரணைக்காகக் கொண்டு சென்ற கைதி மரணமுற்றால், அதற்கு காவல் நிலைய உயர் அதிகாரிகளே பொறுப்பு என்கிற ஒரு எச்சரிக்கையையும் அவர்கள் விடுத்தார்கள். அப்படி எச்சரிக்கைகள் எல்லாம் விடுத்த பின்னாலும்கூட, மணவாள நகரிலே, விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட நபர் கொல்லப்பட்டிருக்கிறார், மரணம் அடைந்திருக்கிறார். அதேபோல், ஒரு பழைய போலீஸ்காரர், கள்ள நோட்டு வழக்கிலே விசாரணைக்காக அழைத்துத் செல்லப்பட்டவரும்—அவரும்—விசாரணைக்காக கூவம் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டவரும்—சந்தேகமான முறையிலே மரணமுற்று





இருக்கிறார்கள். இப்படிக் காவல் நிலைய இறப்புகள் என்பது தொடர்ந்து நம்முடைய தமிழகத்தில் இருந்து வருவது நல்லதல்ல. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இவ்வளவு கடுமையான எச்சரிக்கை விடுத்தும்கூட, இப்படிக் காவல் துறை அலுவலர்கள், அவர்களை விசாரணைக்காக அழைத்துச் சென்று சந்தேக மரணம் ஏற்படக்கூடிய வகையில் நடப்புக்கள் நடப்பது என்பது நாம் நிச்சயமாகத் தடுக்கவேண்டிய ஒன்று. அடுத்து இதையே காரணமாக வைத்தும்கூட, இப்போது காவல் துறையினர் இன்னொரு முறையைக் கையாளுகிறார்கள். ஏதாவது கொள்ளை வழக்கு, திருட்டு வழக்கு என்று வந்தாலும்கூட, கைதிகளைப் பிடிக்க மறுக்கிறார்கள். இரவு என்று சொன்னால் நாங்கள் பிடிக்கமாட்டோம், Custody death என்று சொன்னாலே, எங்களுக்குப் பெரிய சோதனையாக இருக்கிறது. ஆகவே, விசாரணையைத் தொடர்வதற்கே எங்களுக்குப் பயமாக இருக்கிறது என்று சொல்வதால், விசாரணையிலே ஒரு தளர்வு ஏற்படுகிறது. எனவே, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி என்பதைப் போல இப்போது காவல் துறை இருக்கிறது. ஒரு பக்கம், Custody death என்றால் நாங்கள் அரசுக்குப் பதில் சொல்லவேண்டியதாக இருக்கிறது. இன்னொரு பக்கம் குற்றங்களைக் கண்டுபிடிக்கவில்லை என்று சொன்னால், மக்கள் நம்மை திட்டுகிறார்கள் என்று கம்பி மேல் நடப்பதைப் போல, காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருந்தாலும்கூட, இதுபோன்ற Custody death-க்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடுமையாக அணுகவேண்டும். ஏற்கெனவே, மாண்புமிகு முதல்வரவர்கள் கடுமையாக எச்சரிக்கை விடுத்தும்கூட, இன்னும் அவர்கள் அதை மீறி நடந்து கொண்டிருப்பது நல்லதல்ல. ஆகவே, இதை எல்லாம் தடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல் மரணமுற்றவர்களுடைய குடும்பத்திற்கு *1* இலட்சம் ரூபாயாவது நிதி உதவி அளிக்கவேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில வருடங்களாகவே, தமிழ்நாட்டில் காவல் நிலையங்களிலே விசாரணைக்குரிய கைதிகள் கொல்லப்படுகிற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அந்த நிகழ்ச்சியின்பால் நடவடிக்கை எடுத்து அதை ஒரு கட்டுக்குள் கொண்டுவருவதற்கான தீவிர முயற்சியை மாநில அரசு மேற்கொண்டு இருப்பதனை நாங்கள் முழு மனதோடு

வரவேற்கிறோம். ஆனால் நிலைமை ஏன் இன்னும் கட்டுக்குள் நிற்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முற்படுவதற்கு முன்னால், கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்ற ஆட்சியில் நடந்த சீரழிவுகளை அவ்வளவு எளிதில் சீரமைத்துவிட முடியாத அளவில் காவல் துறை சிதைக்கப்பட்டு இருக்கிறது. உள்ளும் புறமும் சிதைக்கப்பட்டுவிட்டது. எனவே, அவ்வளவு எளிதில் இவற்றை கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று எங்களால் கருத முடியவில்லை. ஏன் என்றால், காவல் துறையினுடைய உயர் அதிகாரிகளின் கூட்டம் கோட்டையிலே நடைபெற்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் ஒட்டு மொ த்தமான உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கின்ற முறையிலே மிகக் கடுமையாக எச்சரிக்கை விடுத்ததற்குப் பின்னரும், காவல் நிலைய மரணங்கள் தொடர்ந்து நிகழ்ந்து இருப்பது என்பது மிகப் பெரிய அதிர்ச்சிக்குரிய ஒன்றாகும். எனவே, நான் இந்த விஷயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, கடந்த முறை செக்ஷன் 302--அதாவது கொலை வழக்கு போட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட்ட சம்பவத்தை நாம் பார்த்தோம். ஆனால் அதேநேரத்தில் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிற விஷயம் என்னவென்றால், காவல் கைதிகள் காவல் கஸ்டடியிலே மரணமடைவது என்பது ஒரு சம்பவம், இந்தச் சம்பவம். பொது மக்கள் மத்தியிலே காவல் துறையைப் பற்றிய ஒட்டுமொத்தமான சித்திரத்தையே மதிப்பிழக்கச் செய்துவிட்டது இந்த இடத்திலே ஒரு விஷயத்தை நினைவுபடுத்துவது பொருத்தம் என்று நான் கருதுகிறேன். சமூகத்திலே கொலை செய்கின்றவர்களும் இருக்கிறார்கள், பிக்-பாக்கெட் அடிக்கின்றவர்களும் இருக்கிறார்கள், சமூகவிரோதிகளும் இருக்கிறார்கள். ஆகவே, சமூகமே சமூகவிரோதி என்று சொல்லிவிட முடியாது. சமூகத்தில் குற்றம் புரிகிறவர்கள் இருக்கிறார்கள் என்பதனாலே சமூகமே குற்றச் சமுகம் என்று தீர்மானித்து விடவோ, தீர்ப்பு அளித்துவிடவோ முடியாது.

*முற்பகல் 10-55*

அதேபோல காவலர்களில் எல்லாக் காவலர்களும் அப்படித்தான் என்ற முடிவிற்கு வருவதற்கும் நாம் விட்டுவிடக்கூடாது. அத்தகைய கருத்துக்களை பத்திரிகைகளும் உருவாக்கி விடக்கூடாது என்றும் பொறுப்புணர்வோடு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே, காவல் துறையில் இருக்கின்ற இத்தகைய ஒருசில தீய சக்திகள்





ஒட்டுமொத்தமான சித்திரத்தையே சிதைக்கின்றன. எனவே, இதில் நமது முதல்வர் அவர்களும், மாநில அரசும்—எதிர் தரப்பில் இருக்கின்றவர்கள் இந்தப் பிரச்சினையிலே ஒரு அரசியல் நடத்தமுடியுமா என்கின்ற மிக மலிவான நிலையிலிருந்து கொண்டு பிரச்சினைகளை அணுகாமல் அவர்களும்—இந்தப் பிரச்சினையில் ஒரு ஒட்டுமொத்த சமூகத் தீர்வு வருவதற்குரிய சமூகப் பொறுப்புணர்ச்சியோடு அனைத்துத் தரப்பு மக்களையும் அணுகவேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இனி நாளையிலிருந்து எந்தக் காவல் நிலையத்திலும் இத்தகைய சாவுகள் நடைபெறாது என்று யாராலும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. அத்தகைய உத்தரவாதம் கொடுக்கின்ற நிலையிலும் நாம் இல்லை. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது இனிமேல் காவல் நிலையத்திலே மரணம் நடைபெறுமானால் சம்பந்தப்பட்டவர்களைக் கடுமையாகத் தண்டிப்பதற்குரிய நிலைகளைச் சிறுகச் சிறுக மேற்கொண்டு, காலப்போக்கில் அவற்றைத் தடுத்து நிறுத்துகின்ற உத்தரவாதத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சிகள் சார்பில் தெரிவித்து முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக்காலமாக காவல் நிலையங்களில் ஒருசில இடங்களிலே விசாரணைக் கைதிகள் மர்மமான முறையில், சந்தேகத்திற்கு இடமளிக்கின்ற வகையிலே இறந்துவிடுகின்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அதிலே ஒன்றுதான் மணவாள நகர் நிகழ்ச்சியும் ஆகும்.

அதே போல, என்னுடைய தொகுதியிலே இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலே 11-ஆம் தேதி அன்று விசாரணை என்ற பெயரிலே அழைத்துச் செல்லப்பட்ட சடையன் என்பவர் காவல் நிலையத்திலே மர்மமான முறையிலே இறந்துவிட்டார். முதல்வர் அவர்கள் அதன்மீதான விசாரணைக்காக உடனடியாக ஏற்பாடு செய்தார்கள். மருத்துவ ஆய்விற்குக்கூட ஏற்பாடு செய்யப்பட்டு, மருத்துவர்கள் குழு சேர்ந்து சவப் பரிசோதனை செய்வதற்கு வாய்ப்பு அளித்தார்கள். ஆனாலும்கூட, அந்த நிகழ்ச்சியிலே இன்றைக்கு வரையிலும் அந்த

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 அக்டோபர் 15

உண்மையானது - அது தற்கொலையா, அல்லது கொலையா என்று அறிய முடியாத அளவிற்கு, சந்தேகத்திற்கு இடம் அளிக்கின்ற அளவிற்கு நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்று சொன்னால், காவல் நிலையங்களில் யார் இறந்தாலும் அந்தக் காவல் நிலையத்திலே பணி செய்கிறவர்கள் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், தற்காலிக இடை நீக்கம் அல்லது பணி நீக்கம் அல்லது அது மாதிரி சாதாரணத் தண்டனைகள் அவர்களுக்கு வழங்கப்படுகிறபோது, அவர்கள் சுலபமாகத் தப்பித்துக்கொள்கிறார்கள். எனவே, அவர்களையும் இந்தக் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தி, அப்படித் தவறு செய்பவர்களையும் தண்டனைக்கு உட்படுத்தும் வகையில் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான பார்வைக்கு மீண்டும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே இறந்த சடையனுடைய குடும்பத்தார் மிக மிக வறுமையிலே உள்ளவர்கள். அவனுக்குப் பிறந்த பையனானவன் எட்டு ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு தீவிரவாத இயக்கத்திற்குச் சென்றுவிட்டான். எட்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னாலே, அவனுடைய அப்பன் என்ற காரணத்திற்காக, மகன் ஏதோ தவறு செய்தான், தீவிரவாத இயக்கத்திலே இருந்தான் என்பதற்காக, தந்தையையும் தண்டிப்பது எந்த வகையிலும் நியாயம் இல்லை என்பது என்னுடைய கருத்து.

எனவே, அந்த சடையனுடைய குடும்பத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உதவித் தொகையாக ரூ. 2 இலட்சமாவது வழங்க வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். அது மிகவும் ஏழ்மையான குடும்பம். மேலும், இந்த மாதிரியான சாவுகள் நிகழ்கிறபோது, சம்பந்தப்பட்டவர்களை கிரிமினல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்துகின்ற அளவுக்கு தண்டனைகள் வழங்க வேண்டுமென்பதையும் எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே வேண்டி விரும்பிக் கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.



1997 அக்டோபர் 15]

முற்பகல் *11-00*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மணவாள நகர் அருகிலுள்ள அண்ணா நகர் ஜல்லிமேடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைச் செயலாளர் கோவிந்தசாமி அவர்கள் காவல் நிலையத்திலே தாக்கப்பட்டு இறந்துவிட்டார்கள், தூக்கிலே தொங்கவிடப்பட்டார்கள் என்று செய்திகள் கூறுகின்றன. அவர் துணிகளுக்கு எம்பிராய்டரி செய்துவரும் தொழிலைச் செய்து வந்தார் என்று கூறப்படுகிறது. எம்பிராய்டரி செய்யும் சங்கத்திலே அவர் உறுப்பினராக இருந்திருக்கிறார். அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த தலைவர் எல்லப்பன் என்பவரிடம், அந்தச் சங்கத்திலே நடந்த கையாடல் தொடர்பாக இவர் கேள்வி எழுப்பி இருக்கின்றார். அப்படிக் கேள்வியை எழுப்பிய பிறகு, அந்தச் சங்கத் தலைவர், தி.மு.க.-வைச் சேர்ந்த எல்லப்பன் அவர்களுக்கும், கோவிந்தசாமி அவர்களுக்கும் வாய்த் தகராறு நடந்ததாகக் கூறப்படுகிறது.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லப்பன் தி.மு.க.-வைச் சேர்ந்தவர் என்பது தவறான தகவல். அதை அவர் திருத்திக் கொள்ள வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எல்லப்பன் தி.மு.க. வைச் சேர்ந்தவர் என்று செய்திகள் கூறுகின்றன என்பதைத்தானன் நான் கூறுகின்றேன். (குறுக்கீடுகள்) பத்திரிகைகள் செய்தி கொடுத்திருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுந்தரம், மணியடிக்கப்பெற்றதைக் கவனித்தீர்களா? நீங்கள் பத்திரிகைச் செய்தியைச் சொன்னீர்கள். ஆனால், தி.மு.க.வின் தலைவரே எழுந்து நின்று, அவர் தி.மு.க. உறுப்பினர் அல்ல என்று சொல்லிவிட்டார்கள். திரும்பவும் அதையே ஏன் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? மற்றவற்றைப் பேசுங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** அதற்குப் பிறகு கொல்லப்பட்ட கோவிந்தசாமி அவர்களுடைய வீட்டிற்கு, போலீசார் சென்றிருக்கிறார்கள். அங்கு சென்று, கோவிந்தசாமி அவர்களையும், அவருடைய மகனையும் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்திருக்கின்றார்கள். அழைத்து வந்து, அவர்களைத் துன்புறுத்தியிருக்கிறார்கள். துன்புறுத்தியதற்குப் பிறகு, அவர் இறந்துவிட்டார். அவர் இறந்துவிட்டதற்குப் பிறகு, அவர் தூக்கிலே தொங்கிவிட்டார் என்ற ஒரு பொய்யான தகவலை போலீசார் கூறியிருக்கின்றார்கள். அதனால், அந்த இடத்திலே ஒரு பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இதற்கு நீங்கள் ஆர்.டி.ஓ. விசாரணை

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1997 அக்டோபர் 15

அல்ல, நீதி விசாரணை நடத்த வேண்டும். பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு குறைந்தது ஒரு லட்சம் ரூபாயாவது நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல, வேலியே பயிரை மேய்கின்றது; போலீஸ் துறையிலே கிட்டத்தட்ட 75 சதவிகிதம் ஈரல் கெட்டுவிட்டது என்று அவர் எடுத்துக் கூறியதைப்போல, கடந்த 25-8-1997 அன்று சென்னை, பேசின்பிரிட்ஜ் காவல் நிலையத்திலே 13 வயது மதிக்கத்தக்க ரமேஷ் என்ற சிறுவன் கொல்லப்பட்டது சம்பந்தமாக அங்கே பொதுமக்கள், அந்தப் போலீஸ் நிலையத்திற்குச் சென்று முற்றுகையிட்டிருக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய பிரச்சினை ஏற்பட்டு, அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. பிறகு, பொதுமக்கள் எல்லாம் விலகிச் சென்றிருக்கிறார்கள். அதேபோல், கடந்த செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் காஞ்சிபுரம் காவல் நிலையத்திலே ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயன்று, அந்தப் பெண், போலீஸ்காரரிடமிருந்து.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது மணவாள நகரைப் பொறுத்தது. அது தொடர்பாக ஒன்றிரண்டைச் சொல்லலாம். காஞ்சிபுரம், செய்யார், இந்த விஷயங்கள் எல்லாம் ஏற்கெனவே குற்றப் புலனாய்வுத் துறைப் போலீசாரால் விசாரிக்கப்பட்டு, அதுசம்பந்தமாக அறிக்கைகள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டன. மீண்டும் அவற்றைப் பற்றிப் பேசுவது சரியல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதுபோன்ற சாவுகள் இந்த ஆட்சியிலே நிறைய நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் காவல் நிலையச் சாவுகளையெல்லாம் உடனடியாகத் தடுத்து நிறுத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்திலே புகார் கொடுக்கச் சென்ற திருவள்ளூரைச் சேர்ந்த ஒரு நபரை அங்கே பலவந்தமாக இம்சைகளுக்கு உள்ளாக்கி, அவர் கொலை செய்யப்பட்டதாக வந்த செய்தியினுடைய பின்னணியில், அவர்



1997 அக்டோபர் 15] [திரு. டி. மணி]

தூக்கிலே தொங்கவிடப்பட்டார் என்ற ஒரு தகவல் பத்திரிகைகளிலே செய்திகளாக வந்திருக்கின்றன. காவல் நிலையங்களிலே கொலை நடைபெறக்கூடாது என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாநில அரசும் கருதி இருந்தாலும்கூட, கடந்த மாதம் நடைபெற்ற காவல் துறை உயர் அதிகாரிகள் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக வலியுறுத்தியதற்குப் பின்னாலும், விசாரணைக்காக காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஒருவரை எப்படி நடத்த வேண்டும் என்று சமீபத்தில் உச்சநீதிமன்றம் வலியுறுத்திய வழிமுறைகளைக் காவல் துறை கடைப்பிடிக்காததே இத்தகைய காவல் நிலையச் சாவுகளுக்குக் காரணமாக அமைகின்றது. இந்த ஆட்சிக் காலத்திலே இது நடக்கக்கூடாது என்ற ஒரு எண்ணம் ஏற்கெனவே அரசுக்கு இருந்தாலும், காவல் துறையிலே இருக்கின்ற சில அதிகாரிகள்—எல்லோரையும் கூறுவதற்கில்லை—சில ஊழியர்கள் கடுமையான தண்டனை வழங்குவதன் மூலமாக இந்தச் சாவுகள்—காவல்நிலையச் சாவுகள்—நடைபெறுகின்றன.

இன்னொரு சம்பவம். ஏற்கெனவே சி.பி.சி,ஐ.டி. அதிகாரிகள் அழைத்துச் சென்று அடுத்த தினம் பிணமாக வந்த ஒரு நிகழ்ச்சிகூட இருக்கிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில்கூட குழித்துறை சப்-ஜெயிலிலே இருந்த, செம்பூத்திசையைச் சேர்ந்த ஒரு கைதி இதுபோன்று இறந்திருக்கிறார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த அரசினுடைய ஆட்சிக் காலத்திலே இனி நம்முடைய காவல் நிலையங்களிலே புகார் கொடுக்கச் செல்பவர்கள் கொலை செய்யப்படமாட்டார்கள் அல்லது சாவு நடைபெறாது என்ற ஒரு உத்தரவாதத்தை இந்த அரசு ஏற்படுத்துகிற வகையிலும், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி அரசினுடைய கவனத்திற்கு நான் இந்தப் பிரச்சினையைக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம் மணவாள நகர் காவல் நிலையத்தில் 9-10-1997 அன்று விடியற்காலையில் கோவிந்தசாமி என்பவர் இறந்த சம்பவம் குறித்து காவல் துறையின் சார்பில் நான் பெற்ற அறிக்கையின் ஒரு

பகுதியை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஒவ்வொரு முறையும் இதுபோன்ற அறிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'இந்த அறிக்கையை முழுமையாக நம்பி ஏற்றுக்கொண்டு அவைக்குத் தெரிவிப்பதாக கருதிக்கொள்ளக்கூடாது. இது ஆய்விலே உள்ள ஒரு அறிக்கைதான். இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்திருக்கிறேன். அதே எண்ணத்தோடுதான் இப்போது இந்த அறிக்கையிலே உள்ள சில பகுதிகளைப் படிக்க விரும்புகிறேன்.

'திருப்பதி குடை வருகையை முன்னிட்டும், புரட்டாசித் திங்கள் வாரத் திருவிழாவை முன்னிட்டும், ஜல்லிமேடு, அண்ணா நகரிலே உள்ள பெருமாள் கோயிலில் திருவிழா நடத்துவது பற்றி 1-10-1997 அன்று அந்த ஊர் மக்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றிருக்கிறது. அப்போது அந்தப் பெருமாள் கோயிலின் பராமரிப்பாளர் என்ற முறையில் எல்லப்பன் என்பவர் அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் திருவிழா குறித்த செலவினங்களை ஒதுக்கியிருக்கின்றார். இறுதியில் தன்னுடைய பங்கிற்கு திருவிழா குறித்த அழைப்பிதழை அச்சிடுவதாகவும் கூறியிருக்கிறார். அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டிருந்த மறைந்த கோவிந்தசாமியின் 28 வயது மகன் இராமலிங்கம் என்பவர் எல்லப்பனைப் பார்த்து 'நீ என்ன எல்லோருக்கும் செலவினங்களை ஒதுக்குவது? உனக்கு மட்டும் செலவு குறைந்த வேலையை ஒதுக்கிக் கொள்வதா?' என்று கேட்டிருக்கிறார். இதன் காரணமாக இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது இராமலிங்கம், "கைப்பின்னல் தொழிற் சங்கத்தின் பணம் ரூபாய் ஆயிரத்தைக்கூட நீ கையாடல் செய்திருக்கிறாய்" என்று எல்லப்பனிடம் கூற, தகராறு வலுத்து, இருவருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டு, அங்கிருந்த ஊர் மக்கள் அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, கோவிந்தசாமி தனது குடும்பத்தோடு நடைப்பயணமாக திருப்பதிக்குச் சென்றுவிட்டு 8-10-1997 அன்று ஊர் திரும்பியிருக்கிறார். அன்று மாலையில் ஊர் மக்கள் முன்னிலையில் மீண்டும் நடைபெற்ற ஊர்ப் பொதுக்கூட்டத்தில் 1-10-1997 அன்று நடைபெற்ற சம்பவத்திற்கு, கோவிந்தசாமி, எல்லப்பன் காலில் விழுந்து மன்னிப்புக் கோரியிருக்கிறார். ஊர் மக்களுக்காக மன்னிப்புக் கேட்டாலும் மனம் உறுத்திய கோவிந்தசாமி தனது மனக்குமுறலை அடக்க மது அருந்தி, தனது வீட்டின் அருகே எல்லப்பனை அசிங்கமான வார்த்தைகளால் திட்டியிருக்கிறார்.



இதனைத் தனது தம்பி நாகப்பன் மூலமாக அறிந்த எல்லப்பன், கோவிந்தசாமியைத் தட்டிக் கேட்க, அதனால் கோவிந்தசாமி, அவரது மகன் இராமலிங்கம் மற்றும் பலர் ஒன்றுகூடி இரவு 9 மணிக்கு எல்லப்பனையும், அவரோடு வந்தவர்களையும் கத்தியாலும், தடியாலும் அடித்துள்ளார்கள். இந்தச் சம்பவத்தில் காயம் அடைந்த எல்லப்பன், அவரது தம்பி, தம்பி மனைவி அம்பிகா மற்றும் அவரது தங்கை கௌரி ஆகியோருடன் 8-10-1997 அன்று இரவு 11 மணிக்கு மணவாள நகர் காவல் நிலையம் வந்து தங்களை அடித்தது பற்றிக் கூறியிருக்கிறார். காயம்பட்டவர்களுக்கு இரத்தம் அதிகமாகப் பெருகவே, அப்பொழுது காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் சுரியப்பா உடனே திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அவர்களைச் சிகிச்சைக்காக அனுப்பியிருக்கிறார்.

முற்பகல் 11-10

பின்பு, உதவி ஆய்வாளர், திருவள்ளூர், அரசு மருத்துவமனைக்குச் சென்று, காயம் அடைந்த எல்லப்பனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின் காவல்நிலையத்துக்கு வந்து, இரவு 11-45 மணிக்கு மணவாள நகர் காவல் நிலையக் குற்ற எண் 452/97, சட்டப் பிரிவு 307 இ.பி.கோவில் வழக்குப் பதிவு செய்துள்ளார். பிறகு இரவு 12-15 மணிக்கு சம்பவ இடத்திற்கு உதவி ஆய்வாளர், காவலர்களோடு சென்று எதிரியைத் தேட, எதிரி தலைமறைவாகி விட்டதால் மீண்டும் இரவு 1 மணி 40 நிமிடம் அளவில் காவல் நிலையத்திற்குத் திரும்பியிருக்கிறார். பின்பு இரவு 1-55 மணிக்கு கோவிந்தசாமி, அவரது மனைவி அன்னம்மாள், அவரது மகன் பாஸ்கர் ஆகியோர், காவல் நிலையம் வந்து தங்களை எல்லப்பன், வடிவேலு, பழனி, கன்னியப்பன் மற்றும் பல ரௌடிகள் உருட்டுக் கட்டையாலும், பல ஆயுதங்களாலும் தாக்கியதாகவும், இதுகுறித்துப் புகார் கொடுக்க காவல் நிலையம் வரும் வழியில் தசரதன் மற்றும் பலர் மீண்டும் தங்களை உருட்டுக் கட்டையாலும், பல ஆயுதங்களாலும் தாக்கியதாகவும் கூறியிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அன்னம்மாள் கொடுத்த புகாரை ஒட்டி வழக்கு ஒன்றும் 116/97-லே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இதுவரையிலே நடந்த சம்பவங்கள் பெருமளவிற்கு உண்மையாக இருந்தாலும்கூட அடுத்து, காவல் நிலையத்தில் அந்த கோவிந்தசாமி இறந்துவிட்டார் என்பதைப் பற்றி, அவர் காவல் நிலையத்திலே அடிக்கப்பட்டாரா, அல்லது காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பு

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 அக்டோபர் 15

நடைபெற்ற தாக்குதல் சம்பவத்திலே காயமுற்றாரா, உட்காயம் ஏற்பட்டதா அல்லது காவல் துறையினர் கூறுவது போல நிலையத்திலே அவர் தூக்கு மாட்டிக் கொண்டாரா என்பவைகளெல்லாம் இப்போது ஆர்.டி.ஓ. விசாரணையிலே இருந்து வருகின்றன.

ஆர்.டி.ஓ.வினுடைய இடைக்கால அறிக்கையும் தரப்பட்டு, காலையிலே நான் மாவட்ட ஆட்சித் தலைவரோடு, டி.ஜி.பி.யோடு தொலைபேசி மூலமாகத் தெரிந்து கொண்ட விவரம்:- ஆர்.டி.ஓ. விசாரணையிலே பெறப்பட்ட இந்த இடைக்கால அறிக்கையில் சந்தேகத்திற்குரிய மரணம் என்பதாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதையொட்டி, தலைமைக் காவலர் ஒருவரும், நிலையக் காவல் பணியிலே இருந்த முதுநிலைக் காவலர் ஒருவரும் தற்காலிகப் பணி நீக்கம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறார்கள், உடனடியாக. இன்று காலையிலே அந்தச் செய்தி வந்த பிறகு, சப்-இன்ஸ்பெக்டரும், இன்ஸ்பெக்டரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட வேண்டுமென்று அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கோவிந்தசாமியினுடைய குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்திலே கொண்டு, அவருடைய குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலேயிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது; அதற்கான உத்தரவும் நேற்றைக்கு முன்தினமே வழங்கப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

காவல் நிலையத்திலே ஏற்படும் இத்தகைய மரணங்கள் குறித்து அரசு எவ்வளவு கவலைப்படுகிறது என்பதையும், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதிலே தீவிரமாக இருக்கிறது என்பதையும் இங்கே இந்தக் கவன ஈர்ப்பின் அடிப்படையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

*10-9-1997*-இல் நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் நான் ஆற்றிய உரையின் சுருக்கத்தை – ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்:

"காவல் நிலையங்களில் ஏற்படும் மரணங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்று நான் பலமுறை கூறி வந்திருக்கிறேன். இருப்பினும் இது தொடர் நிகழ்வாக நடந்து வருகிறது. இந்தப் போக்கு மிகவும் வருந்துவதற்கு உரியது ஆகும். இதனால் அரசுக்குப் பிரச்சினைகள்



1997 அக்டோபர் 15] [கலைஞர் மு. கருணாநிதி]

ஏற்படுவது மட்டுமல்லாமல், காவல் துறைக்கும், அரசுக்கும் மிகுந்த அவப் பெயர் ஏற்படுகிறது. இது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். இதைப்பற்றி அனைத்துக் காவல் துறை அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறி, இனியேனும் காவல் நிலைய மரணங்கள் நிகழாவண்ணம், தக்க நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். காவல்துறை ஒருவரைக் கைது செய்யும்போது ஒரு சாட்சியின் கையெழுத்தைப் பெற வேண்டும் எனவும், கைது செய்து விசாரிக்கும்போது கைது செய்யப்பட்டவரின் நண்பர் அல்லது உறவினருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது. காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் அடிக்கடி காவல் நிலையங்களைப் பார்வையிட்டு காவலர்களுக்கு அறிவுரை வழங்கினால் இந்தக் காவல் நிலைய மரணங்கள் தவிர்க்கப்படும் என்று நம்புகிறேன். இனிமேல் இதுபோன்று காவல் நிலைய மரணம் நிகழ்ந்தால் உயர் அதிகாரிகளையும் அதற்குப் பொறுப்பாக்க அரசு முடிவு செய்திருக்கிறது." என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த மாநாட்டில் இறுதியிலே நான் உரையாற்றியபோது பின்வருமாறு குறிப்பிட்டேன்:

*முற்பகல் 11-15*

"ஒரு குற்றம் வெளிப்படாமல் போனால்கூட பரவாயில்லை, குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் கொலையுண்டான், காவல் நிலையத்திலே கொலையுண்டான் என்ற செய்தி அவமானகரமானது, அரசிற்கு மாத்திரமல்ல, காவல் துறைக்கும்தான் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. ஒரு காவல் நிலையத்தில் இருக்கின்ற கைதி இறந்துவிட்டான் என்பதற்குப் பிறகு சென்று விசாரிப்பதைவிட, அடிக்கடி மாவட்ட மேலதிகாரிகளாகிய நீங்கள் காவல் நிலையத்திற்குச் சென்று ஆய்வு செய்வதன் வாயிலாக அங்கே அடைக்கப்பட்டிருக்கின்ற கைதியைப் பார்த்துக்கூட, குற்றம் சாட்டப்பட்டவனைப் பார்த்துக்கூட நீங்கள் விசாரிக்கலாம். போலீசார் அவர்களிடம் உண்மையை வரவழைப்பதற்காக அடித்தார்கள் என்ற செய்தி உங்களுக்குக் கிடைத்தால்கூட நீங்கள் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிப்பதே குற்றம் என்பது அவர்களுக்குப் புலப்பட்டால்தான் அதற்கே எச்சரிக்கை உண்டு, நடவடிக்கை உண்டு என்பது அவர்களுக்குத் தெளிவாக்கப்பட்டால்தான், லாக்கப்பில் அடித்துக் கொலை செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை அவர்களால் உணர முடியும்" என்பதை நான் குறிப்பிட்டேன். இதற்கேற்ப, இந்தச் சம்பவத்திலேகூட இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் என்கிற அளவிற்கு உயர்

அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆர்.டி.ஓ. வினுடைய அறிக்கை வந்த பிறகு, மேலும் இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, இதற்கு மேலும் விசாரணை தேவையா என்பதை அறிந்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். நண்பர் தீரன் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, அவர்களுடைய பகுதியிலே, காவல் நிலையத்திலே கொலையுண்டதாக அறிவிக்கப்பட்ட சடையனுடைய குடும்பத்திற்கு உதவியளிப்பதைப் பற்றி அரசு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, காவல் நிலையச் சாவுகள் என்பது, பல ஆண்டுகளாக, எந்த அரசாக இருந்தாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அரசில் அது தவிர்க்கப்பட வேண்டுமென்று எவ்வளவோ முயற்சிகளை நாம் மேற்கொண்டாலும்கூட, நம்மையும் மீறி இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன. இதற்கு முழுப் பொறுப்பை ஏற்கவேண்டியது காவல் துறைதான் என்றாலும், காவல் துறையைக் கையிலே வைத்திருக்கின்ற அரசுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது என்பதை உணர்ந்து அரசு செயல்படும் என்பதை எடுத்துக்காட்டி, இனி இத்தகைய குற்றங்கள் தொடர்ந்து நடக்காமல், நண்பர் மணி எடுத்துக்காட்டியதைப்போல இந்தக் குற்றங்களுக்குக் காரணமாகவோ அல்லது பொறுப்பாகவோ இருக்கின்றவர்கள்மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏற்கெனவே பல இடங்களில் நடைபெற்ற இந்தச் சம்பவங்களில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. யாரும், எந்தக் காவல் அதிகாரியும் மன்னிக்கப்படவில்லை, இடமாற்றம் அல்லது பணிமாற்றம் அல்லது பணி இறக்கம் அல்லது பணியிலிருந்து விலக்கம் என்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கைது செய்யப்பட்ட சிலர் மீது வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. அதைப்போல இந்தச் சம்பவத்திலும் நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகிலுள்ள சோமசுந்தரம் நூற்பாலை மூடிக் கிடத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகிலுள்ள சோமசுந்தரம் நூற்பாலை மூடிக் கிடப்பது குறித்து கவனஈர்ப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஜி. பழனிசாமி, திரு. கே. சுப்பராயன், திரு. பெருந்துறை நா. பெரியசாமி, திரு. வை. சிவபுண்ணியம்,, திரு. எஸ். வி. கிருஷ்ணன், திரு. வி. அய்யனுசாமி, திரு. பசும்பொன் தா. கிருட்டிணம், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. எல். சந்தானம், திரு. இ. கணேசன், திரு. ஜி.கே. மணி ஆகியோரும், ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக அனைத்தையும் சிறப்புக் கவன ஈர்ப்பாகக் கருதி, முதலிலே திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.





## 2. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்— தொடர்ச்சி

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேண்டும் உங்களுக்கு?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நாளை முதலமைச்சர் அவையில் இருக்கமாட்டார். தேனி மாவட்டத்தில் நான் நுழையக்கூடாது என்று தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** I have already told you that I will not permit discussion on the High Court order. I have rejected it. நீங்கள் இதற்கு மேல் உங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென்றால் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டு வெளியேறுங்கள். இல்லையென்றால், (குறுக்கீடு) நீங்கள் இரண்டு உரிமைப் பிரச்சினைகளைக் கொடுத்திருக்கிறீர்கள். ஒன்றை நான் அனுமதிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதை நாளைக்கு எடுக்கிறேன். இன்னொன்றுக்கு எந்தச் சூழ்நிலையிலும் நான் அனுமதி கொடுக்க முடியாது. காரணம், உயர்நீதிமன்ற உத்தரவு உள்ளது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இதற்குப் பிறகும், அவை நடவடிக்கைகளில் அடிக்கடி நீங்கள் குறுக்கீடுவது நல்லதல்ல. இனிமேல் குறுக்கீட்டால் நான் நடவடிக்கை எடுப்பேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேசிவிட்டு வெளியேறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச அனுமதிக்கமாட்டேன். உங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு வெளியேறுங்கள்.

[1997 அக்டோபர் 15

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு சமுதாயத்தினுடைய பிரதிநிதியாக இந்த மாமனறத்திலும், மக்கள் மாமன்றத்திலும் செயல்பட்டு வருகிறேன். என்னுடைய நடவடிக்கைகளை அரசியல் ரீதியாகச் சந்திக்க ம்டியாமல், கோர்ட் மூலமாகத் தடுக்கின்ற நடவடிக்கைகளிலே, இந்தத் தமிழ்நாடு அரசு செயல்படக்கூடிய வகையிலே, தேனி மாவட்டத்திற்குள் நுழையக்கூடாது என்று, மதுரை செஷன்ஸ் கோர்ட்டினுடைய ஆர்டரையும் மீறி, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு வந்து ஒரு ஆணையை வாங்கியிருக்கிறார்கள். இது என்னுடைய முழுச் சுதந்திரத்தை மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே இருக்கின்ற, இரண்டு கோடிக்கு மேல் இருக்கின்ற தலித் மக்களுடைய உரிமையையும் பாதிக்கக்கூடிய விஷயம்.

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதைச் சொல்லி முடித்து விட்டீர்கள். இப்போது வெளிநடப்புச் செய்யுங்கள். அவ்வளவுதான். அதற்கு மேல் உங்களைப் பேச அனுமதிக்க மாட்டேன். நான் தெளிவாக உங்களிடம் சொல்லிவிட்டேன். உயர்நீதிமன்ற உத்தரவைப் பற்றி இந்த அவையிலே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியாது. உயர்நீதிமன்றத்திலே உங்கள் மீதான இந்த உத்தரவை வேண்டுமென்றே கேட்டிருக்கிறார்கள் என்றால், நாளைக்கு துணை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறபோது, அரசாங்கத்தைக் குறை சொல்லிப் பேசுங்கள். எனக்கு அதிலே ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. ஆனால், உயர்நீதிமன்றத்தின் உத்தரவை வைத்து நீங்கள் உரிமை மீறல் பிரச்சினை கொடுப்பதை நான் அனுமதிக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். உங்களுடைய விளம்பரத்திற்காக, நீங்கள் எத்தனையோ கோடி மக்களின் பிரதிநிதி, அது, இது என்றெல்லாம் நீங்கள் பேசிவிட்டீர்கள். அவ்வளவுதான். இனிமேல் நீங்கள் வெளியேற வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வெளியேறுங்கள், அவ்வளவுதான்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழ்நாடு அரசின் தலித் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறேன்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)



1997 அக்டோபர் 15]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு-தொடர்ச்சி

### (ஆ) சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகிலுள்ள சோமசுந்தரம் நூற்பாலை மூடிக் கிடத்தல்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு, திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:

***திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகிலுள்ள முத்தனேந்தல் சூப்பர் ஸ்பின்னிங் நூற்பாலை கடந்த மூன்று ஆண்டுகளாக மூடியிருக்கின்றது. ஏறத்தாழ 300-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுடைய குடும்பங்கள் வறுமையில் வாடிக் கொண்டிருக்கின்றன. வேறு வழி இல்லாமல் அவர்கள் தங்களுடைய போராட்டங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் அந்தப் போராட்டங்களை நடத்துவதற்கு முன்வருகிற அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எங்களுடைய தொழிற்சங்கமும், அப்படிப்பட்ட ஒரு போராட்டத்திலே ஈடுபட வேண்டும் என்று விரும்பினாலும், பொறுப்புணர்வின் காரணமாக நாங்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபட முடியாத ஒரு இக்கட்டான நிலைமை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை என்னுடைய சொந்த கிராமத்திலே இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்; அந்தத் தொழிற்சாலைப் பிரச்சினை, என்னுடைய குடும்பப் பிரச்சினை என்றுகூடச் சொல்லலாம்; அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் எல்லாம் என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகூடச் சொல்லலாம். எனவே, இந்தக் குடும்பப் பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்குகிற வகையிலே பல்வேறுபட்ட நடவடிக்கைகள் நடக்கின்றன. என்னைப் பொறுத்தவரையில், அந்தத் தொழிற்சங்கத் தோழர்கள், "தாவன்னா கிருட்டிணன் நினைத்தால், முதலமைச்சர் கிட்ட ஒரு வார்த்தை சொன்னா, நாளைக்கே இந்த மில்லைத் திறந்து விடுவார், அவர் சொல்லமாட்டேங்கிறாரு" என்ற ஒரு குறைபாட்டையும், குற்றச்சாட்டையும் கூட என்மீது சுமத்துகிறார்கள். இப்போதும், எங்களுடைய மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு தங்கமணி அவர்கள் கடந்த மூன்று நாட்களாக, தொடர் உண்ணாவிரதம் அல்ல, காலவரையற்ற உண்ணாவிரத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். மூன்று நாட்களாக உண்ணாவிரதம் இருக்கிற அவருடைய உயிரைக்

காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் நமக்கெல்லாம் இருக்கின்றது. ஆகையினாலேதான், அவர் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று நான் என் சொந்தச் சார்பிலேயும் இந்த மன்றத்தின் சார்பிலேயும் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தபோது, நலிவுற்ற மில்களையெல்லாம் அரசு நடத்த வேண்டும் என்ற கொள்கை மேற்கொள்ளப்பட்டபோது, மத்திய அரசு பல தொழிற்சாலைகளை எடுத்துக் கொண்டது. அதே நேரத்தில் N.T.C. —National Textile Corporation என்ற அந்த அமைப்பு உருவானபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'ஏன் National Textile Corporation மூலமாக எடுக்க வேண்டும், Tamil Nadu Textile Corporation என்ற ஒன்றைத் துவக்கி, அதன் மூலமாக சில மில்களை எடுக்கலாமே' என்று எடுத்த அந்த முடிவின் அடிப்படையிலேதான் இந்த சோமசுந்தரம் நூற்பாலை, Tamil Nadu Textile Corporation மூலமாக எடுக்கப்பட்டது. அதன்மூலமாக சிறப்பாகவே நடைபெற்றது. இடையிலே தனியார் அந்த ஆலையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு முயற்சி எடுக்கப்பட்டு, ஏற்கெனவே இருந்த அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி, கடந்த அரசு அதை அந்தத் தனியாருக்குக் குறைந்த விலையில் கொடுப்பதற்கு முன்வந்தது. அதை எதிர்த்து, சி.ஐ.டி.யூ சங்கம், நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, தனியாருக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்லி நிறுத்திவிட்டார்கள். ஆக, ஆலையும் ஓடவில்லை, தனியாருக்கும் தரப்படவில்லை, டி.என்.டி.சி.யும் அதை நடத்த முன் வரவில்லை. டி.என்.டி.சி. நடத்த முன்வராததற்குக் காரணம், அந்த ஆலையை நடத்துவதற்குப் பதிலாக, அந்த அமைப்பு வேறு பல காரியங்களில் ஈடுபட்டு பல்வேறு ஊழல்களுக்கு ஆளாகி, அதனுடைய நிதிநிலைமை மோசமாகிப் போய்விட்டது என்பதுதான். இந்தச் சூழ்நிலையில் அந்த ஆலையை நடத்துவதற்கு நம்முடைய தமிழக அரசு முன்வரவேண்டும்.

*முற்பகல் 11-25*

என்னைப் பொறுத்தவரையில், அந்த ஆலையைத் தனியாருக்கு ஒப்படைப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் தகுந்த விலை தரப்படவேண்டும், மீண்டும் அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட





வேண்டும். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்த ஆலையை சில இலட்சம் ரூபாய்க்கு கொடுப்பதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, அந்த ஒப்பந்தத்தை நம்முடைய அரசு பரிசிலனை செய்து, புதுப்பித்து, தனிப்பட்டவரோ அல்லது அந்த ஆலையின் முதலாளியோ அந்த ஆலையை நடத்துவதற்கு முன்வந்து, உடனடியாக 300 குடும்பங்களையும் வாழவைக்க முன்வரவேண்டும். அப்படிச் செய்தால் அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படி அந்தத் தனியார் அந்த ஒப்பந்தத்திற்கு முன்வராத சூழ்நிலையில், நம்முடைய தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்பரேஷன் முன்வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்து, உடனடியாக அந்த சோமசுந்தரம் நூற்பாலையைத் துவக்கி, 300 குடும்பங்களையும் வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இடையிலே அவர்களுக்கு நிவாரணத் தொகையாக ஒரு குடும்பத்துக்கு 500 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அது இப்போது வழங்கப்படவில்லை என்ற குறைபாடும் வழங்க வேண்டுமென்று கோரிக்கையும், இருக்கிறது. எனவே, . அந்தத் தொகையை, அந்த ஆலையைத் துவக்குகிற வரையிலாவது உடனடியாக வழங்கி, அந்தக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரைக்குப் பக்கத்தில் இருக்கின்ற முத்தனேந்தல் கிராமத்திலுள்ள அரசு நூற்பாலை கடந்த 3 ஆண்டுகளாக மூடிக் கிடக்கிறது. இந்த நூற்பாலை 1992-ஆம் ஆண்டு வரை இலாபகரமாக ஓடிக் கொண்டிருந்தது. அதன் பிறகு, அன்றைய அரசாங்கத்தின் தவறான போக்கின் காரணமாக அந்த ஆலை கொஞ்சம் கொஞ்சமாக நலிந்து, மூடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்று பட்டினியும், பசியுமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஆலை திறக்கப்பட வேண்டுமென்பதற்காக நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர் உடையப்பன் அவர்கள் தலைமையில் கடந்த மாதம் 20-ஆம் தேதி ஒரு அடையாள உண்ணாவிரதம் நடத்தினார்கள். அதன் பிறகு இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி அவர்கள் காலவரையற்ற

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1997 அக்டோபர் 15

உண்ணாவிரதத்தை மேற்கொண்டு 3 நாட்களாக உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சோமசுந்தரம் நூற்பாலை இலாபகரமான நூற்பாலை என்பது மட்டுமல்லாமல், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கிற ஆலையாகும். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள நல்ல விலை மதிப்புமிக்க ஒரு நூற்பாலையாகும். அரசு நடத்துகின்ற இந்த நூற்பாலை ஏன் மூடப்பட்டது என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பசும்பொன் தா. கிருட்டிணன், அவர்கள் இங்கே இரண்டு கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே எனக்கு வேறுபாடு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்.டி.சி. சரியாக நடைபெறவில்லை என்பது போலச் சொன்னார்கள். என்.டி.சி. ஒரு மில்லை, பக்கத்திலேயே கமுதக்குடியில் நடத்திக் கொண்டிருக்கிறது.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** நான் பேசி முடித்துவிடுகிறேன், அப்புறம் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.டி.சி. சரியாக நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. என்.டி.சி.யைப் போல டி.என்.டி.சி. என்ற ஒன்றை ஆரம்பிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவு எடுத்து டி.என்.டி.சி.யை ஆரம்பித்தார்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.டி.சி. ஆலை மிக இலாபகரமாக கமுதக்குடியில், நாள்தோறும், வளர்ந்துகொண்டிருக்கிற ஒரு நல்ல ஆலையாக நடந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், அரசு நூற்பாலை என்பது இந்த ஒரே ஒரு நூற்பாலைதான். ஆயிரக்கணக்கான நூற்பாலைகள் தமிழகத்தில் இருந்தாலும்கூட, தமிழக அரசு நடத்துகின்ற ஒரு நூற்பாலை இந்த சோமசுந்தரம் நூற்பாலை மட்டும்தான். அந்த ஆலை இன்று மூடிக் கிடப்பது நம்முடைய அரசுக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கிறது என்றே நான் கருதுகிறேன். ஆகவே அந்த நூற்பாலையை உடனடியாகத் திறந்து நடத்துவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.



1997 அக்டோபர் 15] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

*முற்பகல் 11-30*

இன்னொன்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். ஆலையைக் குறைந்த விலைக்கு விற்றுவிடக்கூடாது என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதிலேயும்கூட நான் மாறுபட்டிருக்கிறேன். தயவுசெய்து நீங்கள் யாருக்காவது அந்த ஆலையை இனாமாகக்கூட கொடுத்து, அந்த நூற்பாலையைத் தொடங்கி, அங்கே இருக்கின்ற 300 பேர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமென்ற உணர்வினை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் விலை குறைந்துவிடக் கூடாது, விலை குறைந்துவிடக் கூடாது என்று இருக்கக்கூடாது. ஏற்கெனவே சி.ஐ.டி.யூ. காரர்கள் தொடுத்த வழக்கின் காரணமாக இன்று ஆலை மூடப்பட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஆகவே, எப்படியாவது, தனி நபர் வந்தால்கூட, அவர்களிடம் கொடுத்து, நூற்பாலையைத் திறக்க வைத்து, அதிலுள்ள 300 பேருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தங்கமணி அவர்கள் இன்றுடன் 3 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதத்தின் மகிமை, கொடுமை என்ன என்பதை ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்ததிலிருந்தே உணர்ந்திருக்கிறேன் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மகாத்மா 20 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்; நாம் ஏன் இருக்கக்கூடாது என்று நானும் உண்ணாவிரதத்தில் போய் உட்கார்ந்தேன். ஒரே நாளில் தலை சுற்றத் துவங்கி, உடம்பெல்லாம் வியர்க்கத் தொடங்கியது. மயக்கம் வந்த நேரத்தில் எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் வந்து எனக்குக் கை கொடுத்தார். அதே மாதிரி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், திரு. தங்கமணி அவர்களுடைய உயிரைக் காப்பாற்றுகின்ற வகையில், ஆலையிலே பணியாற்றுகின்ற 300 பேர்களின் வாழ்க்கையை வளப்படுத்துகின்ற வகையில் உடனடியாக இந்த அவையிலே உறுதிமொழி கொடுத்து, அந்த ஆலையைத் திறப்பதோடு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல ஊழியர்களின் உடனடித் தேவைக்காக அவர்களுக்கு 500 ரூபாய் உதவித் தொகையாக வழங்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரையிலே, முத்தனேந்தல் சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில் 1965-லே துவங்கப்பட்டது. 1976-வரையிலும் தனி நபர்களிடம் லாபகரமாக அது இயங்கி வந்தது. 1976-க்குப் பிறகு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் காரணமாக நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னர் அந்தப் பஞ்சாலையில் பணியாற்றக் கூடிய 300-க்கும் மேற்பட்டவர்கள் தொடர்ந்து பல்வேறு போராட்டங்கள் நடத்தியதன் காரணமாக, 1986-ல் தமிழக அரசு ஒரு அவசரச் சட்டத்தின் மூலமாக அந்த ஆலையைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. அதற்குப் பின்னாலே 1994-லே ஆலை மூடப்பட்டது. 1996-லே, தொடர்ந்து 3 மாதம், நலிவுற்றிருந்த அந்தத் தொழிலாளர்களுக்கு மாதம் 500 ரூபாய் வரையிலும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. தற்போது 3 வருடமாக ஆலை மூடிக் கிடக்கிறது. தொழிலாளர்களுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாக மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் 3 தினங்களாக உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார். திடீரென்று, அவசரப்பட்டு, ஒரு அரசியல் காழ்ப்புணர்வின் காரணமாக, இந்த உண்ணாவிரதத்தினை கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் மேற்கொண்டார் என்று சொல்வதற்கு இல்லை. சென்ற ஆண்டு இதே சட்டமன்ற உறுப்பினர் இதைக் கவன ஈர்ப்பு மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. கிருட்டிணன் அவர்களும், திரு. பெரியசாமி அவர்களும் நேரடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே ஆலை மூடப்பட்டுள்ள விவரங்களை பல நாட்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எப்படியாவது இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும்; தொடர்ந்து இந்த ஆலை ஓட வேண்டும்; அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்ததற்குப் பின்னால், எந்தவொரு முடிவுக்கும் வராத காரணத்தால், இந்தக் கால கட்டத்திலே இத்தகைய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, ஆளுங்கட்சி சார்பாக திரு. தா. கிருட்டிணன் அவர்கள் சொன்னதைப்போல, எப்படியாவது, அந்த ஆலையை உடனடியாகத் திறந்து 300 தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்க வேண்டும். நலிவுற்ற நிலையில் இருந்த அந்த ஆலையை ஏற்கெனவே அவசரச் சட்டத்தின் மூலமாக அரசு எடுத்துக் கொண்டதே தவிர, அந்த ஆலையைப்





புனரமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் ஒரு கால கட்டத்திலேயும் எடுக்கப்படவில்லை. இதில் அரசியல் காரணம் கூட இருக்கிறது. முன்னாள் ஆட்சியினர் மிகப் பெரிய தவறு செய்து, அந்த ஆலையை, மதுரைக் கூட்டுறவுச் சங்கத்தை விற்றதுபோன்று, ஆளுங்கட்சிக்காரர்களுக்கு விற்கின்ற ஒரு நிலையை உருவாக்கி, அதை விற்கின்ற முயற்சிகளை மேற்கொண்டார்கள். அன்றைக்கு இதே சட்டமன்றத்தில் நானே இந்தப் பிரச்சினையைக் கிளப்பினேன். இந்த ஆலையைத் தனியாருக்கு விற்பதற்கு, மோசடியில் ஈடுபடுவதற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்கிட கடந்த அரசு முற்பட்டது. அது சரியல்ல என்று அப்போது பேசியதனுடைய விளைவாக அது நிறுத்தப்பட்டது. அந்த ஆலை மீண்டும் மூடப்பட்டிருக்கிறது. இதை உணர்ந்து, உடனடியாக அந்த ஆலையினைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்; அரசு நல்லாதரவு தந்து அதை முடித்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. ....

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சட்டப்பேரவைத் தொகுதிக்குட்பட்ட சோமசுந்தரம் நூற்பாலை மூடிக்கிடக்கின்ற நிகழ்ச்சிக்குக் காரணம் என்னவென்றால், அந்த ஆலையைத் தனியார் நடத்துகின்றபோதும் சரி, அரசாங்கம் நடத்துகின்ற நேரத்திலும் சரி, இலாபகரமாக இயங்கி வந்த அந்த நூற்பாலை, கடந்த ஆட்சியாளர்களுடைய தொழில் விரோதப் போக்கின் காரணமாகவும், தொழிலாளர் நலனிலே அக்கறை இல்லாத போக்கின் காரணமாகவும்தான் இவ்வளவு நஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தில் கடந்த ஆட்சியாளர்களுடைய கொடுமையினாலே, இந்த சோமசுந்தரம் நூற்பாலையைப் போல ஏராளமான நூற்பாலைகள் மூடப்பட்டன. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் என்ற நூற்பாலை மூடப்பட்டபோது, அதைத் திறக்க வேண்டுமென்று நானும், அங்கேயுள்ள பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கவாதிகளும், சாத்வீகமான முறையிலே பல்வேறு போராட்டங்களை நடத்திய

நேரத்தில் எங்கள்மீது பொய் வழக்குகளைச் சித்தரிக்கச் செய்து, எங்களையெல்லாம் சிறைக்கு அனுப்பினார்கள். இப்படிப்பட்ட தொழிலாளர் விரோதப் போக்கினால்தான் இந்த ஆலை மூடிக்கிடக்கின்றது. ஆகவே, தொழிலாளர் விரோதப் போக்கினால் மூடிக்கிடக்கின்ற இந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்று அநதத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், என்னுடைய அன்பிற்குரிய இனிய நண்பர் தங்கமணி அவர்கள் மூன்று நாட்களாக அங்கே உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள். என்னுடைய நெருங்கிய நண்பர் என்ற முறையிலே நான் சொல்வதோடு மட்டுமல்லாமல், இதுகுறித்து கடந்த ஆண்டே இந்த மாமன்றத்தில் அவர்கள் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர் பிரச்சினை எப்படியாவது தீர்க்கப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலே காலவரையற்ற உண்ணாவிரதத்திலே ஈடுபட்டிருக்கிறார். இதனை இங்கிருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் இந்த நேரத்திலே சற்று நினைவுகூர வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலை மற்றவர்களுக்கும் வந்துவிடக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவோடு இந்தப் பிரச்சினையைச் சீர்தூக்கி ஆராய்ந்து, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அந்தத் தொழிலாளர்கள் வாழ்வு வளம்பெற வேண்டும் என்பதற்காக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்து, அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை, முத்தனேந்தலிலே அரசால் இயக்கப்பட்டு வந்த நூற்பாலை கடந்த மூன்று ஆண்டுகளாக ஓடாத நிலையிலே, அதிலே பணியாற்றி வந்த 300 தொழிலாளர் குடும்பங்கள் மிகவும் கஷ்டமான நிலையிலே, அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைக்கூட நடத்துவதற்கு முடியாமலிருந்த ஒரு கால கட்டத்திலே, நிர்ப்பந்தத்தின் காரணமாகத்தான் அந்தச் சட்டமன்ற உறுப்பினர், அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு இன்றைக்கு உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். பாரதி சொன்னது போல, 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற அந்த வாசகத்திற்கொப்ப, தனி மனிதனுக்காக எதையும் பொருட்படுத்தாமல், அவர் பட்டினி கிடக்கிறார் என்றால்





எதையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்ற, கருணை உள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்த நேரத்திலே அந்தத் தொழிலாளர்கள் வறுமையில் வாடக்கூடாது என்கின்ற நோக்கத்தோடு அந்த ஆலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த ஆலையைத் தனியார் இயக்கியபோதும் சரி, அரசு இயக்கியபோதும் சரி, சென்ற அரசு நல்ல முறையிலே ஓடிக் கொண்டிருந்த நூற்பாலையை விற்பதற்கு முற்பட்ட காரணத்தினாலே பிரச்சினை எழுந்து, அது தடுக்கப்பட்டு, நின்றுவிட்டது என்பதை அரசு உணர்ந்திருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற தொழிலாளர் குடும்பங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கு மீண்டும் இந்த ஆலையைத் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆலை நல்ல இடத்திலே, தேசிய நெடுஞ்சாலைக்குப் பக்கத்திலே அமைந்திருக்கின்றது. பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள அந்த இடத்திலே அமைந்து இருக்கின்ற அந்த நூற்பாலையை அரசே ஏற்று நடத்தி, அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டும். அதோடு அந்தத் தொழிலாளர்களுக்காக, உண்ணாவிரத்தை மேற்கொண்டிருக்கிற நமது சட்டமன்ற உறுப்பினர்களுடைய உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்கு அரசு அத்தனை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். தற்காலிகமாக அரசு ஏற்று நடத்துவதற்கு முன்னால், அங்கு வறுமையிலே ஆட்பட்டிருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு மாதம் 500 ரூபாய் என்று ஏற்கெனவே வழங்கிக் கொண்டிருந்த உதவித் தொகையை மீண்டும் அளித்திடல் வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன் நன்றி வணக்கம்.

முற்பகல் 11-40

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தனேந்தல், சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில் மீண்டும் திறக்கப்பட வேண்டுமென்ற சிறப்புக் கவன ஈர்ப்பில் பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. தா. கிருட்டிணன் அவர்களும், அன்பிற்குரிய திரு. ஜி. பழனிசாமி அவர்களும், திரு. ஜி. கே. மணி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் இது சம்பந்தமாக

மூன்று தினங்கள் காலவரையற்ற உண்ணாவிரதம் இருப்பதைச் சுட்டிக்காட்டி, இதுகுறித்து ஒரு நல்ல அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள்.

இதிலுள்ள சங்கடத்தை—சட்ட ரீதியாக ஏற்பட்டிருக்கின்ற சங்கடத்தை, பண ரீதியாக அல்ல—நான் உங்களுக்கு விளக்குவது எனது கடமையாகும். சோமசுந்தரம் நூற்பாலை, திரு. பி.எஸ்.எஸ். சோமசுந்தரம் செட்டியார் அவர்களால், 1965-ஆம் ஆண்டில், சிவகங்கை மாவட்டம், முத்தனேந்தல் என்ற இடத்தில், 13,260 கதிர்களைக் கொண்டு துவக்கப்பட்டது. தொடக்கத்தில், பணியாளர்களையும் சேர்த்து, 304 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். 1-8-1976-ல் அவர்கள் தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டிய ஊதியம், பிராவிடன்ட் ஃபண்ட்—இப்படிக் கொடுக்க வேண்டிய எதையும் கொடுக்காத காரணத்தினால், சீர்கேடு காரணமாக, 8-10-1976 அன்று அந்த ஆலை மூடப்பட்டது. அதன்பின், துணித் தொழில் வளர்ச்சித் துறை மற்றும் ஆலைப் பணியாளர்கள் நலன் ஆகியவற்றைக் கருதி, மத்திய அரசு, தொழில் அபிவிருத்தி மற்றும் வரன்முறைச் சட்டம் பிரிவு 18-ஏஏ-யின்படி, 4-11-1977 தேதியிட்ட ஆணையின் மூலம், மேற்படி ஆலை எடுக்கப்பட்டு, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் மேற்கண்ட ஆலையை நடத்த அதிகார உரிமை அளிக்கப்பட்டது. மேற்கண்ட ஆணையின் அடிப்படையில் சோமசுந்தரம் நூற்பாலை, 6-12-1977 முதல் 13-8-1986 வரை தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வந்தது. இந்த ஆலை, 1986-ஆம் ஆண்டு "சோமசுந்தரம் நூற்பாலை கையகப்படுத்துதல் மற்றும் மாற்றுதல் சட்டத்தின்படி" தமிழக அரசால் 14-8-1986-ல் கையகப்படுத்தப்பட்டு, ஆலையின் முழு உரிமையும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திடம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், 1988-ஆம் ஆண்டு, பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து அரசால் அமைக்கப்பட்ட திரு. இராமநாதன் குழு, இவ்வாலையைக் கூட்டுறவு நூற்பாலையாக மாற்றப் பரிந்துரை செய்ததன் அடிப்படையில் மேற்கண்ட ஆலையைக் கூட்டுறவு நூற்பாலையாக மாற்ற அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மேற்கண்ட ஆலையை, சேலம் கூட்டுறவு நூற்பாலையின் இரண்டாவது அலகாக ஒருங்கிணைக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு அறிவுறுத்தியது. முன்னாள் ஆலை உரிமையாளர், ஆலையைக் கையகப்படுத்தியதை எதிர்த்து வழக்குத் தொடர்ந்த காரணத்தினாலும், சேலம் கூட்டுறவு





நூற்பாலை, கூட்டுறவுச் சட்டத்தின் கீழும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கம்பெனிச் சட்டத்தின் கீழும் இயங்குவதால், மேற்கண்ட ஆலையை, முன்னாள் ஆலை உரிமையாளரிடம் ஒப்படைக்கவோ, அல்லது மூடிவிடவோ தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் பரிந்துரை செய்தது. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் இந்த ஆலை இயங்கி வந்தபோது நட்டம் அதிகரித்தது. இந்த ஆலையில், குவிந்த நட்டம், 31-3-1992-லே, சுமார் ரூ. 2 கோடியே 45 இலட்சம் ஆகும். இந்த நட்டத்தினால், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், ஒரு நலிவுற்ற நிறுவனமாக இருந்த அதை ஆராய்ந்து—அன்றைய அரசு; இந்த அரசு அல்ல—பழைய அரசு, இந்த ஆலையை 94 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய்க்கு சோமசுந்தரம் செட்டியாருக்கு விற்க முடிவு செய்தது. இதனடிப்படையில், அரசாணை எண் 287, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள் 16-10-1993-ல் அரசு ஆலை நிர்வாகத்தை முன்னாள் உரிமையாளரிடம் ஒப்படைக்க ஆணையிட்டது. மேற்கண்ட அரசாணையில் விற்பனை வரி நிலுவைத் தொகையுடன் நிர்வாகத்தை ஒப்படைக்க ஆணையிடப்பட்டது. இந்த விற்பனை வரி நிலுவைத் தொகை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் நிர்வாகத்தின்கீழ் மேற்கண்ட ஆலை செயல்பட்டபோது ஏற்பட்ட காரணத்தினால், முன்னாள் ஆலை உரிமையாளர்கள் விற்பனை வரி நிலுவைத் தொகையுடன் ஆலை நிர்வாகத்தைத் திரும்பப்பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள்.

*முற்பகல் 11-45*

அடுத்து, 27-6-1997 அன்று தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 120-ஆவது இயக்குநர்கள் கூட்டத்தில், இந்த ஆலையைத் திறந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக, தென்னிந்திய ஆலைகள் ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்து ஒரு அறிக்கை பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க அந்த நிர்வாகத்திடமிருந்து தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் ஒரு அறிக்கை பெறப்பட்டது. அந்த அறிக்கையில் இந்த ஆலையைத் திறந்து நடத்துவது என்றால் 8 கோடியே 17 இலட்சம் ரூபாய் தேவை என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தொகையைக்கூட அரசு வழங்கினாலும், இந்த ஆலை 4 கோடியே 2 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஈட்டியுள்ளதால் இந்த ஆலைக்கு எந்த நிதி நிறுவனமும் நிதி உதவி அளிக்க முன்வராது. மேலும், இந்த ஆலையின் கடன் தொகையான 2 கோடியே 84 இலட்சம் ரூபாயை, காலப்போக்கில் தீர்க்க வேண்டியுள்ளது. இதற்கிடையில் முன்னாள்

ஆலை நிர்வாகிக்குச் சாதகமாக வழக்கில் தீர்ப்பாகிவிட்டால், முதலீடு செய்த பணத்தை ஆலை நிர்வாகியிடமிருந்து வசூல் செய்வது என்பது இயலாத காரியமாகிவிடும் என்று தமிழ்நாடு பஞ்சாலைக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்திருக்கிறார். அப்படியிருந்தும் நம்முடைய தமிழ்நாடு அரசு செப்டம்பர் 1997-ல் விற்பனை வரிக்காக 15 இலட்சம் ரூபாயும், ஜூன் 1997-ல் EPF-க்காக 8 இலட்சம் ரூபாயும், இடையிலே ஓய்வு பெற்றவர்கள், இறந்தவர்களுக்காக 5 இலட்சம் ரூபாயும், ஆலையினுடைய உற்பத்தி இல்லாத இந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் அளித்திருக்கிறது. ஏறக்குறைய 28 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் அளித்து வந்திருக்கிறது.

மேலும், தமிழகத்தில் இந்த ஆலை மாத்திரம் மூடப்பட்டு இருக்கவில்லை. 1-1-1990-ஆம் தேதிக்குப் பிறகு 36 ஆலைகள் மூடப்பட்டுள்ளன. இந்த 36 ஆலைகளில் பணியாற்றிய 19,574 தொழிலாளர்கள் இன்றையதினம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆலையைப் பொறுத்தவரையில் 231 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு மூடப்பட்டுள்ள ஆலைத் தொழிலாளர்களின் பரிதாப நிலையை உணர்ந்து இந்த அரசு கடந்த ஆண்டு தீபாவளியின்போது, 4-11-1996 அன்று வெளியிட்ட ஆணையின்படி 16,919 தொழிலாளர்களுக்கு தலா 400 ரூபாய் வீதம் சுமார் 68 இலட்சம் ரூபாயைக் கருணைத் தொகையாக அளித்து உதவியது. அதே அடிப்படையில் இந்த ஆண்டு தீபாவளி வருவதையொட்டி, கடந்த ஆண்டிற்குப் பிறகு மூடப்பட்ட தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கும் சேர்த்து, 19,574 தொழிலாளர்களுக்கும் தலா 400 ரூபாய் வீதம் மொத்தம் சுமார் 78 இலட்சம் ரூபாயைக் கருணைத் தொகையாக வழங்கிட முடிவு எடுத்து 13-.ஆம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இந்த ஆலையிலே பணியாற்றும் தொழிலாளர்களும் அந்தக் கருணைத் தொகையைப் பெறத் தகுதி உடையவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலை திறப்பதைப் பற்றிய இருவேறுவிதமான கருத்துக்களை ஒட்டி, இருவேறுவிதமான வழக்குகள் இன்று உயர்நீதிமன்றத்திலே இருக்கின்றன. ஆகவே, அந்த வழக்குகள் முடிந்த பின்புதான் ஆலையைத் திறப்பது பற்றிய ஒரு முடிவு எடுப்பதற்கு வாய்ப்பு உண்டு. நானும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் திருச்சியில் இதுகுறித்து ஒரு நாள்





முழுவதும் பேசினோம். ஐ.என்.டி.யூ.சி. ஏற்கெனவே வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டது. அன்று கூட அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்த்த நிலையில் சி.ஐ.டி.யூ. அந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ள மறுத்ததன் விளைவாக, ஒரு நல்ல முடிவை எடுக்கமுடியாமல் நானும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு நாள் முழுவதும் பேசிவிட்டுத் திரும்பி இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் இந்த ஆலையைத் திறப்பதற்கு இந்த அரசால் எப்படி முடியும் என்பதை நீங்களே உணர்ந்து பார்க்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய திரு. தங்கமணி அவர்களைக் கேட்டுக்கொண்டு, கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் இந்த அரசு அளித்திருக்கின்ற தொகையைப் பெறுவதோடு, உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகு அதை எப்படி முறையாக எடுத்து நடத்துவது என்று முடிவு எடுப்பதற்கு 'சிட்ரா'-வினுடைய ஆலோசனையின்படி நாம் பெற்றிருக்கின்ற கருத்தை ஒட்டிச் செயல்படலாம் என்று உங்களுக்குத் தெரிவித்து, இதை என்னுடைய வேண்டுகோளாக ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-50*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும் எடுத்துக் காட்டிய குறைபாடுகளுக்கு, உணர்வுப்பூர்வமான செய்திகளுக்கு, உள்ளபடியே இருக்கின்ற நிலைமை என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1990-ஆம் ஆண்டிற்குப் பிறகு 36 ஆலைகள் இவ்வாறு மூடப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்றுதான் இந்த ஆலை. இந்த ஆலையைப் பொறுத்தவரையிலே, இது அரசுக்குச் சொந்தமானது என்றாலும்கூட, இப்போது நீதிமன்றத்திலே யாருக்குச் சொந்தம் என்ற கேள்வி எழுந்து இன்னும் தீர்ப்பு வராமல் உள்ள சூழ்நிலையில் அதை உடனடியாக அரசு எடுத்து நடத்துவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. இதைப்பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கின்ற காரணத்தாலும், தீர்ப்புக்குப் பிறகு ஒரு நல்ல முடிவை தொழிலாளர்கள் சார்பாக எடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாலும், இந்த அவையில் அரசின் சார்பாக நான் தருகின்ற உறுதிமொழியை ஏற்று நண்பர் தங்கமணி அவர்கள் தன்னுடைய உண்ணாநோன்பைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1997 அக்டோபர் 15

## 4. அறிக்கை அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். குழுவின் தலைவர் திரு. கே. எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98-ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் இருபதாவது மற்றும் இருபத்தொன்றாவது அறிக்கைக்களைக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவுவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



1997 அக்டோபர் 15]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[1997 அக்டோபர் 15

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-55*

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*



1997 அக்டோபர் 15]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஊ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1997) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 50/1997), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவுச் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

---

@14-10-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[1997 அக்டோபர் 15

## (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சம்பள உயர்வினைக் குறித்து சில கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பல்வேறு வகையிலே இதுவரை ரூ. 6,000 ஆக பெற்று வந்த சம்பளம் ரூ. 8,000 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது, இந்தச் சம்பள உயர்வு யாருக்குச் சாதகமாக இருக்கும் என்பதைத்தான். வருமான வரித்துறையினுடைய ஆளுகைக்கு உட்பட்டால், இந்தச் சம்பள உயர்வு என்பது வருமான வரியாகக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அளிக்கப்படுகின்ற சலுகைகளை வருமான வரிக்கு உட்படாத வகையிலே அமைக்கலாம் என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். பொதுவாக, 'Tax should not be evaded, but can be avoided' என்று சொல்வார்கள். ஆகவே, வருமான வரியை விலக்குகின்ற வகையிலே நம்முடைய சம்பள உயர்வு அமையவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற பணிகளைப் பார்க்கும்போது அவர்கள் தொகுதியிலே நிறைய சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிற காரணத்தால் அவர்களுக்கு ஊர்தி ஒன்றை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஊர்தியை அவர்களுடைய பதவிக் காலம் முழுவதும் அரசின் சார்பிலே வழங்கலாம். அப்படி முடியாத பட்சத்திலே அவர்களுக்கு கார் வாங்குகின்ற அளவுக்கு வட்டியில்லாக் கடன் அளிக்கலாம் என்று நான் இங்கே முன்மொழிய விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையிலே எல்லாத் துறைகளிலும் மிகுந்த பொறுப்பு இருப்பதாக மக்கள் நினைக்கிறார்கள். உள்ளாட்சித் துறையிலே பிரதிநிதிகள் வந்துவிட்டாலும்கூட அதற்கும் சேர்த்து நம்மிடையே மக்கள் குறைகளைச் சொல்கிறார்கள். ஆகவே, எல்லாப் பகுதிகளிலும் உள்ள எல்லாத் துறைகளுக்கும் சென்று நேரடியாக ஆய்வு செய்யவேண்டிய கட்டாயம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற காரணத்தால்





நிச்சயமாக இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், 6 மாதத்திற்கு ஒரு முறை 5 ஆயிரம் ரூபாய் என்று வழங்குகின்ற இரயில் பயணப் படியை மற்ற மாநிலங்களில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற அளவுக்கு உயர்த்தித் தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பல்வேறு வகைகளிலே பயணம் செய்யக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, பீகார் மாநிலத்தில் வழங்குகின்ற இரயில் பயணப் படியைப் போல, ரூபாய் 50 ஆயிரம் வழங்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும்போது பதவியில் இருந்து சமீபத்தில் மரணம் அடைந்த நம்முடைய அமைச்சர் தங்கபாண்டியன் அவர்களுடைய மறைவு குறித்தும், சட்டமன்ற உறுப்பினர் தங்கவேல் அவர்களுடைய மறைவு குறித்தும் நாம் அனுதாபம் தெரிவித்தோம். அப்படி பதவிக் காலத்தில் இருக்கும் போது மரணம் அடைகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களுக்கு 5 ஆண்டுக் காலத்திற்குக் கிடைக்கக்கூடிய சம்பளம் அனைத்தையும் அந்தக் குடும்பத்திற்கு வழங்கவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

டி.சி.ஆர்.ஜி. என்று Death-Cum-Retirement Gratiuty என்று எப்படி அரசு ஊழியர்களுக்கு இருக்கிறதோ, அந்த வகையில், அரசு அலுவலர்களை விட மிகப் பொறுப்புணர்ச்சியோடு, மிகுந்த கடமையோடு பணியாற்றுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படி இடையிலே மரணம் அடைகின்ற நேரத்தில், அவர்களுடைய குடும்பத்திற்கு அவர்கள் 5 ஆண்டுக் காலம் பதவிக் காலத்தில் பெற்று இருக்கக்கூடிய முழுப் பணத்தையும் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று இப்போது இருக்கின்ற—New M.L.A.Hostel and Old M.L.A. Hostel—இந்த இரண்டு விடுதிகளையும் தவிர்த்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று தனியாக வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை தமிழக முதலமைச்சர் அவர்கள் அங்கீகரித்து இருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன்.

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்][1997 அக்டோபர் 15

அப்படி அவர்கள் கட்டுகின்ற நேரத்தில் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காகவோ அல்லது பிற பணிகள் காரணமாகவோ சென்னைக்கு வரும்போது மிகுந்த - மிகுந்த என்றால் extraordinary-யாக Luxurious இல்லாமல், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் வீடுகள் அமையவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நடுவண் அரசிலே கம்ப்யூட்டர் வாங்குவதற்கான சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். மிகுந்த வேகமாக இருக்கின்ற இந்த நவீன யுகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்து இருக்கவேண்டிய பல்வேறு புள்ளிவிவரங்களுக்கும், பல்வேறு கடிதத் தொடர்புகளுக்கும், பல்வேறு அலுவலகப் பணிகளுக்கும் உதவும் வகையில் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் கம்ப்யூட்டர், கணினிப் பொறி வாங்கித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் பதவிக் காலம் முடிகின்ற நேரத்தில் அந்த கம்ப்யூட்டர்களை நாம் திரும்பப் பெறலாம் என்ற நிபந்தனையோடு வழங்கலாம்.

சாதாரணமாக இப்போது, Internet-E-mail- என்று வந்து விட்ட நவீன யுகத்திலே இத்தகைய வசதிகள் நிச்சயமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணியை மேம்படுத்தும் என்று நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றையதினம் பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு செய்தி, நம்முடைய சட்டப் பேரவை அலுவலகத்திலிருந்து வரக்கூடிய கேள்வி பதில் எல்லாம் கம்ப்யூட்டரில் வந்திருக்கிறது என்று அவர்கள் பெருமையோடு பாக்ஸ் கட்டிப் போட்டிருக்கிறார்கள். அந்தவகையில் வாழ்வின் ஒரு அங்கமாக இன்றைக்கு கம்ப்யூட்டர் இருக்கிறது, இருந்து வருகிறது. ஆகவே, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதிப் பணியை சீர்மையாகவும், செம்மையாகவும் அவர்கள் செய்யக்கூடிய வகையில் கம்ப்யூட்டர் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

*பிற்கல் 12-05*

பொதுவாக, சட்டப் பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நான் ஒரு முக்கியமாக கோரிக்கையை விடுக்க விரும்புகிறேன். மத்திய



1997 அக்டோபர் 15] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

அரசிலே, மத்திய அமைச்சருக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கடிதம் எழுதினால், நிச்சயமாக அந்தக் கடிதத்திற்குண்டான பதிலோடுதான், அந்த பைல் முடிகிறது. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தவிர, மற்றபடி ஒவ்வொரு கடிதத்திற்கும் பதில் வருகிறது. அதுபோல, நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் அளிக்கின்ற கடிதங்களுக்கு, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் நிச்சயமாகத் தகுந்த வகையிலே பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, 'Protocol' என்று சொல்லப்படுகிற, மரியாதை தரப்படுகின்ற அந்த பெருமையினை அரசு அலுவலர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று அரசு அறிவுறுத்த வேண்டும். பல்வேறு நிகழ்ச்சிகளில், பல்வேறு இடங்களிலே சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய—பொது மக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்களுடைய மரியாதை காப்பாற்றப்பட வேண்டுமென்ற வகையில், 'Protocol' நிச்சயமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும். ஒருவேளை பழைய ஆணையின்படி, சில அதிகாரிகள் அறியாமல் ஏனென்றால், இருக்கக்கூடும். அவர்களுக்கு நினைவூட்டுகிற வகையில், 'Protocol' என்ன என்று, நம்முடைய சட்டப் பேரவைச் செயலாளரோ அல்லது சட்டப் பேரவைத் தலைவர் அவர்களோ, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு எழுதி, சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய பேராண்மையையும், பெருமையையும் நிலைநிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளங்கள் பற்றிய மசோதா மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கமாக உறுப்பினர்களுக்கு சம்பளங்கள் உயர்த்தப்படுவதை பொது மக்கள் விரும்புகிறார்களோ, இல்லையோ நம்முடைய உறுப்பினர்கள் அத்துணைபேரும் வரவேற்கக்கூடும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் அவர்கள் இங்கே கேட்டார்கள். இந்தச் சம்பளத்தை உயர்த்துகின்ற காரணத்தால், வருமான வரி வருமா, வராதா என்று. வருமான வரி வருகிறதோ, இல்லையோ, ஒவ்வொரு பிரஜையும் அவருக்கு வருமானம் வருமேயானால் அதற்குரிய வரியைக் கொடுக்கின்ற

[திரு. சிடி. தண்டபாணி] [1997 அக்டோபர் 15

உணர்வு எல்லோருக்கும் கட்டாயம் வரவேண்டும். அதிலும் குறிப்பாக, மக்களுடைய பிரதிநிதிகளுக்கு அந்த உணர்வுகள் வர வேண்டும். ஆனால் இந்தச் சம்பள உயர்வின் காரணமாக, நிச்சயமாக வருமான வரி போடுகின்ற அளவுக்கு வராது; இது மட்டுமே வருமானமாக இருந்தால், வருமான வரி வராது. ஆனாலும்கூட இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புவது, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்றைக்குப் பொறுப்பு நிரம்ப இருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினருடைய செயல்பாடும், இன்றைக்குப் பரவலாக இருந்து பொது மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கிறது. சம்பள உயர்வு எப்படி இருந்தாலும்கூட அவர்களுக்கு வசதிகள் செய்துதர வேண்டும் என்பதில் அரசு கொஞ்சம் முழுமூச்சாக அக்கறை எடுத்து பரிசீலனை செய்து, அதற்குரிய உத்தரவுகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக, போக்குவரத்து என்று எடுத்துக்கொண்டால், ஆங்காங்கே இருக்கக்கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளுக்குச் செல்கின்ற நேரத்தில், போக்குவரத்துச் செலவே அவர்களுக்கு ஒரு பெரிய சுமையாக இப்போது இருக்கிறது. வாகனங்களுக்கு டீசல் அல்லது பெட்ரோல் ஊற்றுவது போன்ற வசதிகளுக்காக, ஒரு குறிப்பிட்ட அளவாவது ஒவ்வொரு உறுப்பினருக்கும் போக்குவரத்துப் படி என்ற வகையில் வழங்குவதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல், இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தான் பொதுமக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். நிர்வாகத்தில் இருக்கக்கூடிய அதிகாரி என்பவர்கள் பொதுமக்களுக்கு. பதில் சொல்ல வேண்டுமென்ற Accountability இல்லை. பொதுமக்களுடைய பிரச்சினைகளை, எண்ணங்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களும், அதிகாரிகளும் இணைந்துதான், ஒரு பிரச்சினையில் முடிவு எடுக்க வேண்டும்; அப்படிப்பட்ட முடிவுகள் எடுக்கவேண்டுமென்று சொன்னால் நிச்சயமாக குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். Department Related Standing Committee என்று நாடாளுமன்றத்தில் 1985-லிருந்து செயல்படுகிறது. அதேபோல், இங்கிலாந்து நாடாளுமன்றத்திலும் செயல்படுகிறது. கிட்டத்தட்ட 60, 65 ஆண்டுகளாக அமெரிக்க நாட்டு நாடாளுமன்றத்திலேயும் அது செயல்படுகிறது.



1997 அக்டோபர் 15] [திரு. சிடி தண்டபாணி]

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையில் 4, 5, மாநிலங்களில் அது போன்ற குழுக்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு துறைக்கும் ஒரு Standing Committe என்கிற அந்தக் குழு இருக்குமானால் வரவு-செலவுத் திட்டத்தை, நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கின்ற நேரத்தில், அந்தக் குழு அதிகாரிகளுக்கு உதவி செய்யும். அந்தக் குழு, நிரந்தரமாக 5 ஆண்டுக் காலத்திற்குச் செயல்பட வேண்டிய குழுவாக இருக்கும். அந்தக் குழுவுக்குத் தலைவர் ஒருவர் இருப்பார். பெரும்பாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அந்தக் குழுவின் தலைவராக இருப்பது வழக்கம். அப்படிப்பட்ட குழு அமைக்கப்படுமானால் ஒவ்வொரு துறைக்கும் பயனுள்ள கருத்துக்கள், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நிச்சயமாகப் பரிமாறிக்கொள்ளப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும். உதாரணமாக, சில நேரங்களிலே மசோதாக்கள் தயார் செய்யப்படுகின்றன. அவற்றில் எவ்வளவோ தவறுகள் இருக்கின்றன. சபைக்கு வருகின்றபோது முழுமையாக நிச்சயமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உள்ள மசோதாவாக அது இருப்பது இல்லை. ஆனால் இந்தக் குழு அமைக்கப்படுமானால் அந்த மசோதாவை அந்தக் குழு பரிசீலனை செய்து, அதனை சபைக்குத் தருகின்றபோது, அதற்கு மாற்றுத் தீர்மானமோ, திருத்தமோ கொடுக்கக் கூடிய நிலைமை இருக்காது. அதனால் சபையினுடைய நேரத்தைக் கூட நாம் இன்றைக்கு அதிகமாகச் செலவழிக்கவேண்டிய அவசியம் இல்லை, சபையின் நேரத்தை வீணடிக்கவேண்டிய அவசியம் வராது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் Standing Committee என்கின்ற ஒரு குழுவை ஒவ்வொரு இலாகவுக்கும் உண்டாக்குவதற்கு நம்முடைய தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதனால் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், அவர் எந்தத் துறையை ஏற்றுக்கொள்கிறாரோ அதிலே ஒரு involvement ஒரு ஈடுபாடு அவருக்கு நிச்சயமாக இருக்கும். அந்த ஈடுபாட்டின் காரணமாக அந்தத்துறைக்கும் நல்லது, சட்டமன்ற உறுப்பினரின் நடவடிக்கைக்கும் நல்லதாக இருக்கும். அரசின் சுமையும் அதனால் குறையும். இன்னும் சொல்லப்போனால், அமைச்சர் பெருமக்களுக்கும் சுமை குறைகிற நிலைமை ஏற்படும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு முறையை அருள்கூர்ந்து அரசு பரிசீலனை செய்து, அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே இந்தச் சபையில் குறிப்பிட்டதைப் போல இன்னும் ஒரு வேண்டுகோள். இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களிடத்திலே கொடுக்கக்கூடிய விண்ணப்பங்கள் என்று வருகின்றபோது அமைச்சர்களுக்கும், அவர்களுக்கு சிலநேரங்களில் இருக்கக்கூடிய வேலைப்பளுவின் காரணமாக முறையாக அப்பணிகள் நடைபெறுகின்றனவா என்று அவர்களால் பார்க்க முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களும் அடிக்கடி அமைச்சர்களைத் தொல்லை செய்யக்கூடிய நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அவை கொஞ்சம் குறைவதற்கு நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவலகத்திலேயே, நாடாளுமன்றத்தில் இருப்பதைப்போல 2,3 அலுவலர்களைப் போட்டு ஒரு Notice office வைத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த அலுவலகத்திலே கடிதங்களைக் கொடுத்து உடனே அந்தக் கடிதங்களை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கோ, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ சேர்த்து, அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா, இல்லையா; என்ற விவரங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படுமானால் முறையாக சில காரியங்கள் நடைபெறும். அது இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்றும் அந்த முறையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அது மட்டுமல்லாமல், என்னுடைய இன்னுமொரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது அவர்களுடைய செயல்பாடுகள் பல்வேறு வகைகளிலே உண்டு. யாரும் தவறாக எண்ணக் கூடாது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தூய்மையான ஆட்சியை வழங்க வேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கிறார்கள், இப்போது அப்படியே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எல்லா வகையிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தூய்மையாகப் பணியாற்றினாலும்கூட சில இடங்களிலே பொதுமக்களுக்குச் சந்தேகம் வருகிறது. அப்படிப்பட்ட சந்தேகத்தை பொதுமக்களுடைய மனதிலிருந்து போக்குவதற்கு இங்கே ஒரு குழு அமைக்க வேண்டும். Surveilance குழு என்ற ஒரு குழுவை அமைக்க வேண்டும். இது ஜனநாயகம் உள்ள நாடுகள் அனைத்திலும் இருக்கிறது. அமெரிக்காவில் இருக்கிறது. இங்கிலாந்தில் இருக்கிறது, பக்கத்தில் உள்ள நேபாளத்தில் இருக்கிறது. இந்த நாடுகளில் எல்லாம் இருக்கிறது. சட்டமன்றத்தில் மட்டும் அல்லாமல் சட்டமன்றத்திற்கு



வெளியிலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நடவடிக்கைகள் என்ன என்று கவனிப்பதற்கு அந்தக் குழு பயன்படும். ஆக, அப்படிப்பட்ட குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.ஜி. பழனிசாமி.

*பிற்பகல் 12-15*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளங்கள் வழங்கல் சட்டமுன்வடிவில் எனக்கு முன்னர் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்தோடு என்னுடைய கருத்துக்களையும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள்- இப்படிப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் - பொதுமக்களுக்குச் சேவை மனப்பான்மையோடு வந்து இருக்கிற உறுப்பினர்களின் சம்பளத்தைப்பற்றி சட்டமன்றத்திலே விவாதிப்பது என்பது, பொதுமக்களிடத்தில் என்னதான் சேவை மனப்பான்மையோடு பணியாற்றினாலும், அவர்களை சம்பளத்திற்காக இருக்கக்கூடிய பணியாளர்களாகக் கருதக்கூடிய நிலை இப்போது உருவாகி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போன்று, இதற்கென்று ஒரு Standing Committee அமைத்து, அதிலே விவாதித்து, அந்தக் குழு கொடுக்கக்கூடிய அறிக்கையைச் சம்பளமாக ஏற்று வழங்கக்கூடிய நிலையை உருவாக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் என்று போட முடியாது; அமைச்சர்களுக்குச் சம்பளம் என்று போட முடியாது. அவர் கூறியதுகூட சரியில்லை என்று நான் கருதுகிறேன். அநேகமாக இது சம்பளம் இல்லை; இது ஒரு ஊதியம்தான். பொறுப்பிலே இருக்கிற காலத்தில், பதவியிலே இருக்கிற காலத்திலே மட்டும்தான் இதனை வழங்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறதே தவிர, இது ஒரு படி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஊதியம் வேறு, சம்பளம் வேறு.

**திரு. ஜி. பழனிசாமி:** இன்னும் சொன்னால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இன்றையதினத்திலே இது ஊதியமாக வழங்கக்கூடியது. வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய ஒரு சட்டமன்ற உறுப்பினர்

[திரு. ஜி. பழனிசாமி] [1997 அக்டோபர் 15

தன்னுடைய குழந்தைகளைப் பள்ளியிலே படிக்க வைக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு சர்ட்டிபிகேட் வாங்க வேண்டுமென்று விரும்பினால்கூட, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய ஊதியத்தைக் கணக்கிட்டு அதன் காரணமாக அந்தச் சலுகையைக்கூட இழக்கக்கூடிய நிலை வருகிறது. இந்த ஊதியம் நிரந்தரமல்ல. ஒரு குடும்பத்திற்கு வழங்கக்கூடிய ரேஷன் கார்டிலே கூட, சம்பளத்தைக் குறிக்கக்கூடிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது. இது எனக்கு ஏற்பட்டது. அதனால், என்னுடைய பள்ளி செல்லும் பிள்ளைகளுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகளைக்கூடப் பெற முடியாத சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. இன்றைக்கு நான் 12 ஆயிரம், 14 ஆயிரம் ரூபாய் என்று பள்ளிக்குச் கட்ட வேண்டுமென்று சொன்னால் எப்படிக் கட்ட முடியும்? அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. ஆகையால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு சட்டமன்றத்திலே விவாதங்களைத் தொடங்கக் கூடாது. அதற்கு ஒரு கமிட்டி அமைத்து, அதிலே அதுபற்றிப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மற்ற மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் அவர்களது ரூமிலேயே இப்போது கம்ப்யூட்டர் வழங்கப்பட்டு இருக்கிறது. நாடாளுமன்ற விவாதத்திலேகூட, சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டார்கள் என்று தகவல் வந்து இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் யாரும் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

இன்றைக்குக் கூட நம் சட்டமன்றத்தின் நிகழ்ச்சி நிரலைக்கூட கம்ப்யூட்டரில் அடித்துக் கொடுத்து, எழுத்துக்கள் எல்லாம் அழகாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இன்றைக்கு கேள்வி-பதில்கள் எல்லாம்கூட நமக்கு கம்ப்யூட்டரில் அடித்துக் கொடுத்து இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நவீன காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கணிப்பொறிகளை வழங்குவதற்கான வாய்ப்புகளை நீங்கள் உருவாக்க வேண்டும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருகின்ற மனுக்கள் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அநேகமாக தபால்காரர் வேலைதான் பார்க்கிறார்கள். பொதுமக்கள் கொடுக்கிற தபாலை வாங்கி தங்களுடைய லெட்டரை அத்துடன்



1997 அக்டோபர் 15] [திரு. ஜி. பழனிசாமி]

வைத்துக்கொடுக்கிற வேலைதான் நடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேண்டுமானால் சொல்கிறேன், இன்றைக்கு நான் 6, 7 அமைச்சர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். எனக்குக் கொடுத்து இருக்கிற கடிதங்களை 6, 7 அமைச்சர்களுக்கு லெட்டர்பேடில் எழுதி தொடர்ந்து கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். இதை ஒரு சட்டமன்ற உறுப்பினர் தொடர்ந்து செய்ய முடியாது. 4, 5 அமைச்சர்களுக்கு நேரடியாக கடிதங்கள் கொடுத்து ஆகிவிட்டது. இன்னும் 4, 5 அமைச்சர்களுக்குக் கடிதம் கொடுக்க வேண்டும். செக்ரடரிக்குக் கடிதம் எழுதி வைத்து இருக்கிறேன். இப்படிப் பல கடிதங்களை நாம் நேரடியாகக் கொண்டுபோய் கொடுக்க வேண்டி இருக்கிறது. எனவே, கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு உதவியாளரைக் கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு.ஜி. பழனிசாமி:** முடித்து விடுகிறேன். பல மாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் வழங்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகையினால், இங்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கண்டிப்பாக உதவியாளர்களை நீங்கள் வழங்க வேண்டும். அவர்களுக்கு கணிப்பொறிகளை வழங்குங்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் பிரதிநிதிகள், சரியாக, நேர்மையாக, சேவை மனப்பான்மையோடு பணியாற்ற வேண்டும் என்று சொன்னால், நாம் உண்மையாகவே கொச்சைப்படுத்திச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுடைய சம்பளத்தைப் பற்றி சட்டமன்றத்திலே விவாதிப்பது என்பது, சட்டமன்ற உறுப்பினரையே கொச்சைப்படுத்துவதாக இருக்கிறது; அந்த நிலை இருக்கக் கூடாது. நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்துங்கள். அதற்கு ஒரு குழு அமைத்து, அதன் அறிக்கையைப் பெற்று சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுமார் 2 ஆயிரம் ஓட்டுகளைப்

பெற்றுத் தேர்வு பெற்று வருகின்ற பஞ்சாயத்து தலைவருக்கு ஒரு அலுவலகம் இருக்கின்றது; ஒரு உதவியாளரும் இருக்கின்றார். 5 ஆயிரம் ஓட்டுகளைப் பெற்று உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு யூனியன் தலைவராக வருகிறவருக்கு ஒரு அலுவலகம் இருக்கின்றது; அதில் BDO உட்பட ஏகப்பட்ட அலுவலர்கள் உள்ளனர். இரண்டு ஜீப்புகள் இருக்கின்றன; தொலைபேசி, சுமோ உட்பட வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் சுமார் 2 லட்சம் வாக்காளர்களின் வாக்குகளைப் பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்குத் தொலைபேசி வேண்டாம், உதவியாளர்கள் வேண்டாம், தொகுதியில் உருப்படியாக ஒரு அலுவலகம் வேண்டாமா? அங்கே ஒரு உதவியாளர் வேண்டாமா? ஏவலர், ஒரு டைப்பிஸ்ட், ஒரு கம்ப்யூட்டர் வேண்டாமா? அதோடு ஒரு மகேந்திரா ஜீப்பும் வேண்டும். (சிரிப்பு) டாடா சுமோ வேண்டாம், மகேந்திரா ஜீப்பே போதும். இதைச் செய்து கொடுங்கள். எதுவும் இல்லாமல் அனாதையாகத் தெருவில் சுற்றுகிறோம்.

ரோட்டில் நாங்கள் போனால் எங்களிடத்தில்தான் கட்டுக்கட்டாக மனுக்களைக் கொடுக்கிறார்கள். திரும்பப் போனால், பதில் கொடுக்கவில்லை என்று திட்டுகிறார்கள். எப்படிப் பதில் கொடுக்க முடியும்? சம்பளத்திலிருந்துதான் கவருக்கே இரண்டு ரூபாய்க்கு ஸ்டாம்ப் ஒட்டவேண்டியிருக்கிறது. யூனியன் ஆபீசில் உட்கார்ந்திருந்தோம், அங்கேயிருந்தும் வெளியில் அனுப்பிவிட்டீர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் தெருத்தெருவாக அலைகிறார்கள், குறை கூறுங்கள், குறை கூறுங்கள் என்று, திரும்பி வரும்போது, மக்கள் பதில் எங்கே என்கிறார்கள். இந்தக் கஷ்டம் எல்லோருக்கும்தான். மாண்புமிகு துணைத் தலைவர் தொகுதிக்கும் இதுதான் நிலை. அமைச்சர்கள் தொகுதிகளுக்கும் இதுதான் நிலை. ஆகவே, ஒவ்வொரு தொகுதிக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான அலுவலகம் ஒன்று இருக்க வேண்டும். தொகுதியில் முழுமையான வசதி பெற்ற அலுவலகத்தை நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதுபோல், பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் சொந்த ஊரில் இல்லாமல், மற்ற, மற்ற தொகுதிகளில் போட்டியிட்டு ஜெயித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்தத் தொகுதியில் வாடகை வீடு கூடத் தர மறுக்கிறார்கள். Housing Board வீட்டைக்கூட வாடகைக்குத் தர மறுக்கின்றது. அரசாங்கமே M.L.A.-க்களுக்கு வாடகை அடிப்படையில் ஒரு வீட்டைக் கொடுக்கக்கூடாதா? 5 ஆண்டுகளுக்கு மட்டுமாவது வீடு கொடுக்கலாமே? இதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





பஞ்சாப், சின்ன மாகாணம்; சின்ன சின்னத் தொகுதிகள். அங்கே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு டெலிபோன் பில்லுக்கு வருடத்திற்கு 30 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். எங்களுக்கு முப்பதாயிரம் ரூபாய் வேண்டாம், ஆயிரம் ரூபாய் குறைத்துக்கொண்டு, 29,000 ரூபாய் கொடுக்கலாமே! அதைவிடப் பெரிய மாநிலமுங்க இது. ரயில்வே படி, அங்கே 50,000 ரூபாய் வழங்குகிறார்கள். நமக்கு அதில் ஐந்தில் ஒரு பங்கு என்ற அளவில் 10,000 ரூபாய் இங்கே படி கொடுக்கப்படுகிறது. அதையும் இரண்டு பாதியாகத்தான் கொடுக்கிறார்கள். இப்போது ஒரு பாதி கொடுத்திருக்கிறார்கள். 50,000 ரூபாய் எங்களுக்கு வேண்டாம், 40,000 ரூபாயாவது தாருங்களேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கொஞ்சம் நேரம் முன்னால் இந்தச் சீட்டைக் கொடுத்துப் பேசுங்கள் என்று சொல்லியிருக்கிறார். இதை எல்லாக் கட்சியினரும் முழுமையாக ஆதரிக்கிறார்கள். எதிர்ப்பு என்று யாரும் இல்லை. ஆகவே, தயவுசெய்து இதுபோன்ற கருத்துக்களைக் கொஞ்சம் செவிமடுத்து ஆவன செய்யவேண்டும் என்று மீண்டும், மீண்டும் நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் நிலைமை வெளியில் தெரியாமல் இதை மூடிமறைத்து நமக்குள்ளேயேபேசி இதற்கு ஒரு ஏற்பாடு செய்ய ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகப் பேசவும்.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பளங்கள் வழங்கல் சட்டமுன்வடிவின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எடுத்துக் காட்டினார்கள். ஏதோ சட்டமன்ற உறுப்பினர்கள் 8,000, 10,000 ரூபாய் அளவில் அதிகமாகச் சம்பளம் பெறுகிறார்கள் என்று சொல்கிற நிலைக்கு இடமளிக்காத வகையில், நான் இந்த நேரத்தில் உங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், சம்பளம் என்ற வார்த்தையையே எடுத்துவிடுங்கள் என்பதுதான். சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் சம்பளமே கேட்கவில்லை. நாங்கள் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள். மக்களுக்குச் சேவை செய்வதற்காக வந்தவர்கள் என்ற நோக்கோடுதான் நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக

எங்கள் பணிக்காலத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். ஒரு தொழிலாளியாக இருந்து சட்டமன்ற உறுப்பினராக வந்தவர், ஐந்தாண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபிறகு வெளியில் செல்கிறபோது, மீண்டும் ஒரு தொழிலாளியாகவே ஒரு தொழிற்சாலையில் பணியாற்றிய நிலை எல்லாம் இந்த நாட்டிலே கடந்த காலத்திலே இருந்தது. இதற்கு முன்னாலே இருந்த நிலைமைகள் எல்லாம் இப்போது மாறியிருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்தக் காலகட்டத்திலே, சாக்ரடீஸ் சொன்னதைப்போல, 'உன்னையே நீ அறிவாய்' என்று சொன்னதைப் போல, இப்போது இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்களுடைய மனச்சாட்சி அறிந்து மக்களுக்குச் சேவை செய்ய வந்தவர்களாகவே, சேவை நோக்கோடு, தன்னலம் கருதாது பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, மாதம் ஒன்றுக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு எவ்வளவு செலவாகிறது என்று பார்க்கும்போது, பட்டியல் போட்டால் மாதாமாதம் கடன்தான் நிற்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் இங்கே நான் வேண்டி விரும்பிக்கேட்டுக்கொள்வது என்னவென்றால், தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அலுவலகம் வேண்டும். சாதாரணமாக, ஒரு வருவாய் ஆய்வாளர் இருக்கிறார் என்றால், அவருக்கு அந்தக் கிராமத்திலேயே ஒரு அலுவலகம் இருக்கிறது. அதைப்போல, அனைத்துப் பிரச்சினைகளையும் உள்ளடக்கி மனுக்களைப் பெறுகின்ற நிலையிலும், அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்காகப் பல்வேறு அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளவேண்டிய நிலையிலும் இருக்கின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு அவரது தொகுதியின் தலைநகரில் ஒரு அலுவலகம் இருக்கவேண்டும். அந்த அலுவலகத்தில் குறைந்தபட்சம் ஒரு உதவியாளரும், ஒரு தட்டச்சரும் நியமிக்கப்படவேண்டும்.

அதேநேரத்தில், தொகுதி முழுவதும் சென்று பார்வையிட, பொதுமக்களின் குறைகளை அறிய, வாகனம் தேவை, வாகனம் என்றால், சட்டமன்ற உறுப்பினர் ஐந்தாண்டுக் காலம் அதை அந்தத் தொகுதிக்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற அளவில் இருக்கவேண்டும். அவருடைய பதவிக்காலம் முடிந்த பிறகு, அவருக்குக் கொடுக்கப்படுகின்ற வீடானலும், வாகனமானாலும், அலுவலகமானாலும், அதை விட்டுவிட்டுத்தான் செல்வார்கள் அந்த வகையில், அவர்களுக்கு அந்த வசதிகளைச் செய்துதரவேண்டும்.



*பிற்பகல் 12-25*

ஆகவே, இந்த நிலையில், ஒரு அலுவலகம், ஒரு கார், உதவியாளர், தட்டச்சர், ஓட்டுநர் போன்ற இந்த அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பது நம்முடைய அரசின் கடமையாக இருக்க வேண்டும்.

அதுபோல, மக்களுக்காகப் பணியாற்றுகின்றபோது, தொலைபேசிக் கட்டணம் மிகவும் அதிகமாக வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்காகப் பேசுவது இல்லை. மக்கள் பிரச்சினைகளுக்காகப் பேசுகின்றபோது ஒவ்வொரு தடவையும் கட்டணம் ரூ.15,000, 12,000 10,000 என்றெல்லாம் வருகிறது. எனவே, இந்தத் தொலைபேசிக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், இங்கே கூட, பல்வேறு பிரச்சினைகள் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் சொன்னார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் ஏற்க நிச்சயமாக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு விழாக்களுக்கான நிகழ்ச்சி நிரலிலேகூட, மாண்புமிகு உறுப்பினர்களின் பெயர்களை அச்சடிக்கின்ற நேரத்திலே, பல்வேறு குறைகளெல்லாம் வருகின்றன. அவை alphabetic முறையிலே அச்சடிக்கப்படுகின்றனவா அல்லது மூத்த உறுப்பினர் அல்லது தொகுதி அடிப்படையிலே அச்சடிக்கப்படுகின்றனவா என்ற நிலையை முன்வைத்து, ஒரு முறையை வகுத்து, அரசு விழாக்களிலே கலந்துகொள்கிற உறுப்பினர்களின் பெயர்களை முறைப்படுத்தி, பெயர்களை அச்சடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு.சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிலுரையை அளிக்க இருக்கின்ற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பஸ் கட்டணத்தை உயர்த்தியதைப் பற்றிச் சொல்கிறபோது, மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அளவுக்கு மற்ற மாநிலங்களையெல்லாம் பெருந்தன்மையோடு மேற்கோளாகக்

காட்டிய நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதற்கும் அதே மேற்கோளை எடுத்துக்கொள்ள வேண்டும். மிசோரம் ஒரு சின்ன மாநிலம். அங்கேகூட 14,000 ரூபாய் படியாக எம்.எல்.ஏ.க்களுக்குத் தருகிறார்கள். மேலும் அரசாணைப்படியே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் Chief Secretary-க்கு equal என்றிருக்கிறது. தலைமைச் செயலாளருக்கு இணையாக இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கு, அந்தத் தலைமைச் செயலாளருக்கு நாம் என்னென்ன சலுகைகளையெல்லாம் அளிக்கிறோமோ, அந்தச் சலுகைகளையெல்லாம் வழங்க ஆவன செய்யப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்து வைத்திருந்தாலும், ஏப்ரல் மாதத்திலேயே இதுபற்றி முழுமையாக விவாதிக்கப்பட்டு அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்த சலுகைகளை நிறைவேற்றியதன் அடிப்படையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவு இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, வருமான வரியைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இராமன் அவர்கள் பேசுகிறபோதுகூட சுட்டிக்காட்டினார்கள். உறுப்பினர்களுடைய வருமானம் 6,000 ரூபாயாக இருந்தபோது, சம்பளம் ரூ.2000, காம்பன்சேட்டரி அலவன்ஸ், ரூ.1,500, தொலைபேசிக் கட்டணம் ரூ. 1,250, கான்ஸ்டிட்யூயென்சி அலவன்ஸ் ரூ. 625, போஸ்டர் அலவன்ஸ் ரூ. 625 என்று மொத்தம் 6,000 ரூபாயாக இருந்தது. இதில் காம்பன்சேட்டரி அலவன்ஸ் ரூ. 1,500-லிருந்து ரூ.3,000/-ஆக 1-4-1997-லிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே நான்-டாக்சபிள் இன்கம், அதாவது வருமான வரிக்கு உட்படாத சில இனங்கள் வருமானத்திலே இருக்கின்றன. சம்பளம் டாக்சபிள். அதர் அலவன்சஸ் ரூ.600 வரை, வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. டெய்லி அலவன்ஸ், அதாவது தினப்படி, டிராவலிங் அலவன்ஸ், அதாவது பயணப்படி ஆகியவற்றிற்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன. இதுதான் வருமான வரித் துறையிலிருந்து



அரசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கம். ஆகவே, 600 ரூபாய்தான் மற்ற படிகளிலே வருமான வரியிலேயிருந்து விலக்கு நமக்கு அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் சொல்லும்போது மற்ற மாநிலங்களைக் குறிப்பிட்டு இந்த மாநிலத்திலே நீங்கள் சொல்லக் கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இப்போது மற்ற மாநிலங்களுக்கேற்ப இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தர வேண்டுமென்று அவர்களே வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் இப்போது இல்லாவிட்டாலும் வருகிற காலங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனித்து அடுத்த நிதிநிலை அறிக்கை முழுமையாக வருகிறபோது வழங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, இந்த உயர்வை ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 12.30*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு ஏற்கப்பட்டது.



## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(இ) சென்னை மாநகரக் காவற்படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.செ)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (சேலம் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1997) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

—தொடர்ச்சி

**(ஆ) சென்னை மாநகரக் காவற்படை (சேலம் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு, 1997.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டமுன்வடிவு-ஆய்வு செய்தல், 1997 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1997.) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற் படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.சி. ஞானசேகரன்:

**திரு.சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று என்னுடைய

@14-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

218443

சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். 'மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட்' என்பதை சேலம் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மற்ற மூன்று முக்கியமான இடங்களுக்கு - மாநகரங்களுக்கு - இப்போது நீட்டிப்பதற்காக இந்தச் சட்டம் இயற்றப்படுகிறது.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய, காவல் துறையில் இருக்கக்கூடிய பணிகளைவிட மாநகரங்களில் இருக்கக்கூடிய காவல் துறைக்குக் கூடுதலான பொறுப்பு இருக்கிறது என்ற வகையிலே, காரண நோக்கத்திலே சில விளக்க உரைகள் கொடுக்கப்பட்டு, இந்தச் சட்டமுன்வடிவு இயற்றப்படுகிறது. இவ்வளவு நாம் செலவு செய்தும்கூட, கோடிக்கணக்கிலே இதற்காகப் பணத்தை ஒதுக்கீடு செய்தும்கூட, இன்றைய செய்தித்தாளை எடுத்துப் பார்த்தால் சென்னையிலேகூட கடைகள்தோறும் சென்று ரௌடிகள் கத்தியால் குத்தி ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் பணத்தைப் பறித்தார்கள் என்ற கதைகள் செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிரவும் நாட்டிலே பல பிரச்சினைகள், குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், காவல் துறை சற்று விழிப்போடு இருக்க வேண்டிய காலகட்டம் இது. இதற்காக எங்கள் பகுதியான வேலூரைக்கூட ஒரு மாநகரமாக மாற்றி "மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட்" -ஐ எக்ஸ்டெண்ட் செய்ய வேண்டும். காரணம், நாமேகூட கிராமப் பகுதிகளைவிட, மாநகரப் பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற காரணத்தால், வேலூர் வளர்ந்து வரக்கூடிய ஒரு பெரிய நகரமாக ஆகிக் கொண்டிருக்கிற நேரத்தில், அதையும் ஒரு மாநகரமாக இந்த அரசு உடனடியாக அறிவித்து, அங்கேயும் ஒரு கமிஷனரை உடனடியாகப் போட்டால்தான் குற்றங்களை உடனடியாகக் குறைக்க இயலும். ஆகவே, என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், இந்த 'ஆக்ட்'-ஐ வேலூருக்கும் எக்ஸ்டெண்ட் செய்யக்கூடிய அளவுக்கு அதை ஒரு மாநகரமாக மாற்றித் தாருங்கள் என்பதுதான். (குறுக்கீடு) சத்துவாச்சாரி-அதேபோல பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் ஏரியா போன்ற அத்தனையும் வேலூர் மாநகராட்சி ஆகும்போது வந்துவிடும். சத்துவாச்சாரியும் அதிலே அடங்கிவிடும்.

காவல் துறையைப் பொறுத்த அளவிலே, வேலூரில் போலீஸ் கல்லூரி இயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் இருந்த அளவிற்கு இப்போது காவல் துறையில் திறமைகள் இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறது. வேலூரிலிருந்து எப்போது அந்தக் கல்லூரியை எடுத்து விட்டார்களோ அப்போதே அதற்கான மகிமை போய் விட்டதுபோலத் தெரிகிறது.





ஆகவே, மீண்டும் நீங்கள் வேலூரில் காவலர் பயிற்சிக் கல்லூரியை அந்த இடத்திலே தொடங்கிப் பயிற்சி அளிப்பீர்கள் என்று சொன்னால், நிச்சயமாக காவல் துறைக்கு முன்னர் எப்படியெல்லாம் பெருமை இருந்ததோ, அந்தப் பெருமை கூடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதை எப்படியாவது பரிசீலித்து வேலூரில் காவலர் பயிற்சிக் கல்லூரியை மீண்டும் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-35

இப்போது எங்கு பார்த்தாலும் நிறை கொலை, கொள்ளை என்று வரக்கூடிய நிலைமையில், காவல் துறையில் இன்னும் கொஞ்சம் கூடுதலாக ஆட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.ஐ.க்களில் 448 பேர்கள் விடுபட்டுப் போய்விட்டது என்று சொல்கிறார்கள். அதேபோல், 1993-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களில் 376 பேர்கள் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நீங்கள் பயிற்சியை உடனடியாகத் துவக்கிடவேண்டும். இன்னும் ஆயிரம் சப்-இன்ஸ்பெக்டர்களை நியமனம் செய்ய இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஆயிரம் சப்-இன்ஸ்பெக்டர்களை உடனடியாக நியமனம் செய்து, சட்டம்-ஒழுங்கை முழுமையாக நம்முடைய தமிழகத்திலே நிலைநாட்டுவதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று நான் கூறி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு.சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஒரு மாநில அரசினுடை அடிப்படைக் கடமை அனைத்து மக்களுக்கும் வேறுபாடற்ற பாதுகாப்பு அளிப்பது என்பதாகும். ஆனால், சில சந்தர்ப்பங்களிலே அரசியல் நோக்கத்தோடு ஜாதி, மத உணர்வுகளை ஆங்காங்கு தூண்டுவது போன்று சில அரசியல்வாதிகள் பேசினாலும்கூட, இதுபோன்ற உள்ள உணர்வு வந்துவிடக்கூடாது என்ற அளவிற்கு அரசினுடைய காவல் துறையினுடைய அனைத்துச் செயல்பாடுகளும் அமையவேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமீபத்தில் 11-8-1997 அன்று திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையத்தில் 3 பேர்கள் - பூக்கடை கண்ணன், டாக்டர் செல்வக்குமார், டெய்லர் ஜெய்சங்கள் இல்லாமல் - சாதாரணமாக ஒரு மோதல் வந்துவிடும், அதிலே சிலர் இறந்துபோய்விடுவார்கள்,

அல்லது சிலருக்கு காயம் ஏற்பட்டுவிடும் என்ற சூழ்நிலை ஏற்படுவது உண்டு. ஆனால் எந்தவிதமான காரணமும் இல்லாமல் - 3 பேர்கள் தீவிரவாதிகளால் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்கு 22-ஆம் தேதி நாங்கள் சென்று, அவர்களுடைய வீட்டிற்குச் சென்று ஆறுதல் சொல்லி, பக்கத்திலே உள்ள ஒரு இடத்தில் பொதுக்கூட்டத்தில் பேசி, அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டும், ஜாதி, மதம் இரண்டாவது பட்சம், தேசியம் நமக்கு ஒன்று; எனவே, எல்லோரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று எல்லாம் பேசிவிட்டு வந்தேன். அரசு, காவல்துறை எந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும். 27-ஆம் தேதி, அதே இடத்தில், திரும்பவும் முத்துக்கிருஷ்ணன் என்பவர் எந்தவிதமான காரணமும் இல்லாமல் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே, 15 நாட்களுக்குப் பிறகு, தீவிரவாதிகளுக்கு இதுபோன்ற தைரியம் மேலும் வருகிறது என்று சொன்னால், காவல் துறையினுடைய நடவடிக்கை எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ஆகவே, ஜாதி, மத அடிப்படையிலே மக்கள் இதைப் பிரித்துப் பார்க்கக்கூடிய உணர்வு வந்துவிடக்கூடாது என்று நான் வேண்டுகோள் வைக்கிறேன். இறந்து போன முத்துக்கிருஷ்ணன் அவர்களுடைய வீட்டிற்குச் சென்றோம். நானும் ஓ. ராஜகோபால், எம்.பி.யும் சென்றோம். அவர்களுடைய தாயார் சொன்னார்கள்— அவர்கள் எங்களிடம் அழுதுகொண்டே சொல்லும்போது, 'நாங்கள் இங்கு எந்தவிதமான தவறும் செய்யவில்லை, எங்களுக்குள் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையோ, ஏற்றுமுட்டலோ வேறு எந்தவிதமான தவறும் இதுவரையில் நடந்தது கிடையாது. ஆகவே, நாங்கள் இந்துவாக வாழ்கிறோம் என்று சொல்லக்கூடிய ஒரே காரணத்திற்காக இதுபோன்று நடந்து இருக்கிறதோ என்று அஞ்சுகிறோம்' என்று சொன்னார்கள். அவர்களை நாங்கள் சமாதானப்படுத்திவிட்டு வந்திருக்கிறோம். எனவே, இதுபோன்ற உணர்வுகள் பாமர மக்களின் மத்தியில் எந்தக் காரணத்தைக் கொண்டும் வந்துவிடக்கூடாது, அதற்குத் தகுந்தாற்போல் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, கோவை, மேட்டுப்பாளையத்தில் 1-9-1997-ஆம் நாளன்று சண்முகம், ரமேஷ், திருக்குமார் என்கிற ராம், மூர்த்தி, கண்ணன் ஆகிய 5 பேர்கள் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த 2 சம்பவங்களிலும், ஏதாவது பிரச்சினைகள் இருந்து வந்தனவா என்று பார்த்தால் இல்லை. ஓரளவிற்கு ஜாதிச் சண்டை, மதச்சண்டை



எல்லாம் முடிந்து. அமைதியாக இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, இதுபோன்ற தீவிரவாதிகளின் செயல்களால் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்களை வாழவிடமாட்டார்களோ என்ற சிந்தனை வரக்கூடிய அளவில் நிலைமை தோன்றிவிட்டது. எனவே, அனைவருக்கும், ஜாதி, மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு இந்த அரசு தகுந்த பாதுகாப்புக் கொடுக்கும் என்கிற அளவில் அரசினுடைய நடவடிக்கை அமைய வேண்டும். இதுபோன்ற சந்தேகம் எந்த இடத்திலும் யாருக்கும் வரக்கூடாது என்ற அளவுக்கு உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அரசினுடைய செயல்பாடுகள் அமையவேண்டும்.

இன்னொன்று, அரசியல்வாதிகளுக்கு நான் வேண்டுகோள் வைப்பது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுங்கள். இது மெட்ராஸ் சிட்டி போலீஸ் ஆக்ட் என்பதை மாற்றி, சேலம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளிக்கு எக்ஸ்டெண்ட் செய்கிறார்கள். எனவே, இந்த பில்லில் பேசுங்கள். சம்பந்தம் இல்லாதவற்றைப் பேசாதீர்கள.

**திரு. சி. வேலாயுதன்:** நான் பில்லில்தான் பேசுகிறேன். எனவே, திருநெல்வேலி மாவட்டத்தில், போலீஸ் கமிஷனர் வரக்கூடிய இடங்களில், இதுபோன்ற உணர்வு வந்துவிடாமல் இருக்கக்கூடிய அளவில் — அரசியல்வாதிகளும்கூட இதுபோன்ற பிரச்சினைகள் வந்துவிட்டால் ஜாதி, மதத்திற்கு அப்பாற்பட்டு அங்கே சென்று அவர்களுக்கு ஆறுதல் சொல்வதோடு தகுந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவையொட்டிய கருத்துகள் கூறப்படாவிட்டாலும், காவல் துறையினுடைய அணுகுமுறைக்காக சில அரிய ஆலோசனைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த அரசு செயல்படும். அவற்றை வலிமைப்படுத்துகின்ற நோக்கத்தோடுதான் 3 புதிய மாநகரங்களில் 'கமிஷனரேட்' என்று அமைக்கப்படவிருக்கிறது. அதற்கு

[திரு. க. பொன்முடி] [1997 அக்டோபர் 15

ஆகிற செலவு, ரெக்கரிங்—தொடர் செலவு 3 மாநரங்களுக்கு ரூ.7 கோடியே 44 லட்சமும், தொடராச் செலவு ரூ.8 கோடியே 10 லட்சமும் ஆகிறது. ஆகவே, இந்தச் செலவுகளுக்குப் பிறகு, இந்த 3 மாநகரங்களிலும் காவல் பணி சிறப்புப்படுத்தப்பட வேண்டும் என்ற உணர்வோடு உருவாக்கப்பட்டிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பரிவுகள் 2 முதல் 14 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பரிவுகள் 2 முதல் 14 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின்



1997 அக்டோபர் 15] [பேரவைத் துணைத் தலைவர்]

முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவற்படை (சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகரங்களுக்கு செயற்பாடு நீட்டிப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1997) நிறைவேற்றப்பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அடுத்து, 1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1997). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[பேரவைத் துணைத் தலைவர்] [1997 அக்டோபர் 15

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1997) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.*"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தினுடைய சட்டமுன்வடிவை வரவேற்று, ஒரு சில கருத்துக்களை முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, இந்த ஆட்சி உருவான பின்பு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தினைத் துவக்கி வைத்தோம். அப்படித் துவக்கி வைத்துப் பல மாதங்கள் ஆகியும், அந்தக் கால்வாயில் குடிநீர் விநியோகத்திற்காக ஆந்திர மாநிலம் 500 எம்.ஜி. வழங்கியும், முழுவதுமாக அந்தக் குடிநீர் வந்து சேர்வதாகத் தெரியவில்லை. அதிகாரிகளைக் கேட்கின்றபோது, கால்வாய்களில் உடைப்பு இருக்கிறது; அதன் காரணமாக 450 எம்.ஜி. அதிலிருந்து லீக்கேஜ் ஆகிவிடுகிறது என்று கூறுகிறார்கள். அதற்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் எந்தவிதமான நடவடிக்கையும் இதுநாள் வரையில் எடுத்ததாகத் தெரியவில்லை.

மற்றொன்று, சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தால் செய்யப்படும், வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, கழிவு நீர் இணைப்புப்பணி என்பது இதற்கு முன்பு எல்லாம் கோட்டப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் திடீரென்று அந்தப் பொறுப்பினை சென்ட்ரலைஸ் செய்து அதாவது,மொத்தமாகத் தலைமையிடத்திலே வைத்துக்கொண்டு, தலைமையிடத்திலேதான் சென்று முறையிட வேண்டுமென்கிறார்கள். உதாரணத்திற்கு, திருவொற்றியூர், தண்டையார்பேட்டை பகுதிகளிலே இருப்பவர்கள் அந்தப் பகுதிக் கோட்டப் பொறியாளரிடம் சென்று குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்புக் கேட்டால், அந்த அதிகாரிகள், 'எங்களால் முடியாது, நீங்கள்

@14-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது



1997 அக்டோபர் 15] [திரு. ப. ரங்கநாதன்]

சிந்தாதிரிப்பேட்டையில் இருக்கின்ற தலைமையிடத்திற்குச் சென்று பணம் கட்டினால்தான் அந்த இணைப்புக் கிடைக்கும்' என்று கூறுகிறார்கள். அதை உடனடியாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வாரியத்திலே பணியாளர்களே இல்லை. குடிநீர் வாரியத்தில், ஏறத்தாழ 15 ஆண்டுகளாக புதிய கழிவுநீரகற்றுப் பணியாளர்களைத் தேர்வு செய்யவில்லை. இதனால் சென்னை நகரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் கழிவுநீரில் சில நேரங்களில் அடைப்பு ஏற்படுகின்றபோது மூழ்குதாரிகள் இல்லாமலும், பல பகுதிகளிலே அங்கே தார்ச்சாலைகள் புதியதாகப் போடப்பட்டிருந்தாலும், அந்தத் தார்ச்சாலைகள் எல்லாம் இன்றைக்கு பழுதடைந்திருக்கின்றன என்றால், அதற்கு முதல் காரணமே சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியம்தான். ஆகவே, இதை மனதிலே வைத்து, அமைச்சரவர்கள் உடனடியாக அங்கே மூழ்குதாரிகளை நியமிப்பதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டும். காரணம், இதற்கு முன்பெல்லாம் அந்த வாரியத்திற்குத் தலைமைப் பொறுப்பு ஏற்பவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள். ஆனால் அந்தச் சட்டத்தை திருத்தி இப்போது இந்தத் துறையைக் கவனிக்கின்ற பொறுப்பை வகிக்கின்ற அமைச்சர் அவர்களே இந்த வாரியத்திற்கும் தலைவராக இருக்கின்ற காரணத்தினாலே இந்தப் பணிகள் எல்லாம் எளிதாக முடியும் என்று நான் நினைக்கிறேன்.

அதேபோல, மாநகராட்சிக்கும், வாரியத்திற்கும் இணைப்புக் குழுவைப் போட்டிருக்கிறீர்கள். அந்த இணைப்புக் குழுவைப் பொறுத்தவரையில், மாநகராட்சி மன்ற வார்டுக் குழுத் தலைவர்கள்தான் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால், சென்னை நகரிலே இருக்கின்ற 14 சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த இணைப்புக் குழுவிலே உறுப்பினர்களாக இருந்தால்தான், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், குடிநீர்ப் பிரச்சினையையும், கழிவுநீர்ப் பிரச்சினையையும் தீர்க்க ஏதுவாக இருக்கும், இதை வார்டு இணைப்புக் குழுக்கூட்டத்திலே எடுத்து வைத்துப் பரிகாரம் காண முடியும். அதை மனதிலே வைத்து அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநிலக் காங்கிரசின் சார்பாக வரவேற்று, அமர்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதுநாள் வரையில், இந்தத் துறையினுடைய செயலாளராக இருந்தவர்களான ஐ.ஏ.எஸ். அதிகாரிகள்தான் இதனுடைய தலைவராக இருந்தார்கள். இந்தச் சட்டமுன்வடிவு திருத்தப்பெறுவதன் காரணமாக, அமைச்சர் அவர்களே இதனுடைய தலைவராக இருப்பது என்பது ஏற்கத்தக்க, வரவேற்கத்தக்க ஒன்று. ஆகவே, இதன்மூலம் மக்களாலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அன்றாடமுள்ள மக்களின் பிரச்சினையை நல்ல முறையிலே அணுகவும், குறிப்பாக இந்தத் துறையினுடைய அமைச்சர் நல்ல முறையிலே செயல்படுவதற்கும் வாய்ப்பாக உள்ளதால் இது வரவேற்கத்தக்கது. ஏற்கெனவே இருந்தபடி, Non-official ஒருவரைச் சேர்மனாக நியமிக்க இந்தச் சட்டத்திலே இடம் இல்லை. இதை நான் வரவேற்கிறேன்.

குறிப்பாக, சென்னையிலே சமீபத்திலே ஏற்பட்ட குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்கின்ற வகையில் நம்முடைய அமைச்சர் அவர்களும், சென்னை நகரத்தின் வணக்கத்திற்குரிய மேயரும், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் முதல்வரைச் சந்தித்து உடனடியாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகமான லாரிகளை வழங்க வேண்டுமென்றும், மேலும் டாங்குகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கேட்டோம். உடனடியாக அதற்கு 2 கோடி ரூபாயை முதல்வர் அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். அமைச்சர் அவர்களுடைய தீவிர முயற்சியின் காரணமாகவும், 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, கூடுதலாக, அதிகமான trip-களில் லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இப்போது அதிகமான எண்ணிக்கையில் டாங்குகளில் தண்ணீர் நிரப்பப்படுகிறது. இதை சென்னை மாநகர மக்களின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது சென்னை மாநகராட்சியும், குடிநீர் வடிகால் வாரியமும் சேர்ந்து இணைப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள்கூட இங்கே நினைவூட்டினார்கள். 10 வார்டுகளின் குழுத் தலைவர்கள் மட்டும் இந்த இணைப்புக் குழுவிலே இடம் பெற்று





பிரச்சினையை எடுத்துச் சொல்லிவிட முடியாது. இப்போது வந்திருக்கின்ற கவுன்சிலர்கள் எல்லாம் புதியவர்கள். என்னுடைய 3-வது 'zone' என்று சொன்னால், அதிலே இரண்டு தொகுதிகள், பூங்கா நகர், பெரம்பூர் ஆகியவை வருகின்றன. அதேபோல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய தொகுதியான எழும்பூர் தொகுதியும், ஆயிரம் விளக்குத் தொகுதியும் சேர்ந்து வருகிறது. எனவே, வார்டு குழுத் தலைவர்களாலே மட்டும் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்லிவிட முடியாது. அன்றாடம் உள்ள மக்கள் பிரச்சினையை உணர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள். அமைச்சர்கள் போக, 6 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் மீதியாக இருக்கிறோம். ஆகவே, எங்களையும் அந்த இணைப்புக் குழுவிலே இணைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கடந்த காலத்திலே 1987-ல் அரசாணை M.S. எண் 467, MAWS Department, நாள் 27-7-1989 என்ற ஒரு ஆணைக்கேற்ப ஆதி ஆந்திர மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு, கழிவுநீர் செல்ல, பாதாளச் சாக்கடை இணைப்புகளுக்கு 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்று சொல்லி, தமிழக அரசின் முதல்வர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி பல ஆயிரக்கணக்கான இணைப்புகள் வழங்கப்பட்டன. இதனாலே, ஏறக்குறைய 36,000 மக்கள் பலன் அடைந்தார்கள். ஆனால் கடந்த 5 ஆண்டுக் காலத்தில் அந்தச் சட்டம் என்னவாயிற்று, அந்த ஆணை என்னவாயிற்று என்று எங்களுக்குத் தெரியவில்லை, ஆனால், மீண்டும் இப்போது 3டி எண் 79, MAWS Department, நாள் 16-8-1996-ல் இதற்காக 5 கோடி ரூபாயை அரசு ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இருந்தாலும், இந்தத் திட்டத்தின்மூலம் அனைத்து மக்களும், குடிசைவாழ் மக்களும் பயன் அடைவதற்கும், 18 சதவிகிதம் Overhead Charges-ஐத் தள்ளுபடி செய்தார்கள். அதைப்போல, Road Cutting Charges-ஐயும் நிச்சயம் நீங்கள் தவிர்த்தால் நன்றாக இருக்கும். சென்னையிலே இருக்கின்ற குடிசைவாழ் மக்கள் ஒரு இணைப்பு எடுக்க வேண்டுமென்று சொன்னால், 6,000 ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த Road Cutting Charges-ஐயும், Overhead Charges-ஐயும் நீங்கள் waive செய்தால், நிச்சயம் materials cost 800 ரூபாயிலிருந்து 1000 ரூபாய்க்குள்ளேதான் வரும்.

*பிற்பகல் 12-50*

பெரும்பாலும் சென்னையிலே இருக்கிற மக்கள் பாதாளச் சாக்கடை இணைப்புகள் இருந்தாலும்கூட எடுப்பதில்லை. குடிசைவாழ் மக்கள்-Storm water drain மழைநீர்க் கால்வாயில்தான் இணைப்புக் கொடுத்து விடுகிறார்கள். ரோடுகள் எல்லாம் பாழாகிக் கொண்டு இருக்கின்றன. சென்னையிலே இருக்கன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதை அறிவார்கள். ஏற்கெனவே இது சம்பந்தமாக அமைச்சரிடத்திலும், நம்முடைய மேயர் அவர்களிடத்திலும் மனுக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களும் முதலமைச்சரிடம் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நீங்கள் இந்த உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். இந்த ஆண்டு 5 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆகவே Overhead Charges-ஐயும் Road Cutting Charges-ஐயும் Waive செய்து சென்னையிலே இருக்கிற குடிசைவாழ் மக்களுக்கு நீங்கள் பாதாளச் சாக்கடை இணைப்புகளைக் கொடுப்பீர்களானால், நிச்சயமாக மக்கள் வரவேற்பார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக் கொள்கிறேன்.

அதைப்போல, கிருஷ்ணா நிதிநீரை உடனடியாக சென்னை மக்கள் பெறுவதற்கான வழிவகைகளை நீங்கள் செய்ய வேண்டும். மக்கள் எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தையொட்டி சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய ரங்கநாதன் அவர்களும், மதிப்பிற்குரிய செங்கை சிவம் அவர்களும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய ரங்கநாதன் அவர்கள் குறிப்பிட்டது கிருஷ்ணா நதி நீர் கொண்டு வந்து கொடுக்கப்பட்டதற்குப் பிறகு, அறிவித்த அளவுக்குத் தண்ணீர் வரவில்லை, அதற்கான காரணங்களை அதிகாரிகள் சொல்கிறார்கள். சரியோ, தவறோ தெரியவில்லை என்பதைப்போல



குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே, அவர்கள் சொல்கிற காரணம் உண்மைதான். இன்றைக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இருந்தால் என்னைவிட அதிகமாக விளக்கம் தருவார். காரணம், தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டுவந்து கொடுப்பது அவருடைய பொறுப்பு. விநியோகிக்கின்ற பொறுப்பை இந்த வாரியம் ஏற்றிருக்கிறது. ஆகையினால் அவர்கள் கொண்டு வருகிறபோது அந்த நீர்த்தேக்கத்திலிருந்து கொடுக்கிற அளவு முழுவதும் வரவில்லை என்பதைப் பகிரங்கமாக ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும். காரணம், மண்ணிலே ஈர்ப்பு இருந்தால் குறைவாக இருக்கும். மலையிலே ஈர்ப்பு இருந்தால் அதிகமாக இருக்கும். மலையிலே நல்ல ஓட்டைகளாக இருக்கும். அவற்றில் அளவுக்கு மீறி தண்ணீர் போகும். வெறும் மண்ணாக இருந்தால் கசிவுதான் வரும். வருகின்ற தண்ணீரில் பெரும் பகுதிகள் மலைப்பகுதியிலே வருகிறது. எனவே, கசிவு அதிகமாக ஏற்படுகிறது. அதனாலே இங்கே வந்து சேர்கிறபோது பனிக்கட்டிபோல்தான் ஆகின்றது. இன்னும் கொஞ்சம் காலத்திற்குள் அதைச் சீர் செய்துவிட முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. அந்தப் பணிகளையும் துவங்குவதற்கு இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒரு மாதத்திற்கு 2 முறை, 3 முறை இதுசம்பந்தமாக எல்லோரையும் அழைத்து வைத்துப் பேசிக்கொண்டுதான் இருக்கிறார்கள். உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஆந்திர அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக அந்தப் பணிகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பை தமிழ்நாடு அரசு ஏற்கும்.

அதோடுகூட, இன்னும் பெருநகரப் பகுதிகளில், இந்த மாநகராட்டியில் சாலைகள் போடுவதாலும் மற்ற, மற்ற பிரச்சினைகளாலும், கழிவுநீர் வெளியேற்றுகிற சாதனங்களாலும் இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. ஏற்கெனவே சிறப்பு அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது, நம்முடைய மதிப்பிற்குரிய தனி அதிகாரிகள் மற்றவர்களோடு சென்று பல சாலைகளைப் பார்த்தேன். அதிலே பல கழிவறைகள், மற்றவை ஒன்று சேர்ந்து வடிகிற வடிகாலையும் பார்த்தேன். அதனாலும், இதனாலும் இரண்டிற்கும் இடையூறுகள் ஏற்பட்டு வருவதால் மக்கள் பாதிக்கப்படுவது நன்றாகத் தெரிகிறது. எனவே, அதற்குப் பரிகாரம் காணவேண்டும். எப்படி என்றால் எல்லாத் தரப்பினரையும்- மாநகராட்சி என்றால் பல பிரிவுகள் அங்கே இருக்கின்றன. ஒரு பெரிய அரசாங்கம்தான் அதுவும், பல துறைகள் அங்கே இருக்கின்றன, அந்தப்

[திரு. கோ. சி மணி] [1997 அக்டோபர் 15

பல்வேறு துறைகளில் அவரவர்களுக்கு தனித்தனி அதிகாரத்தை வைத்துக்கொண்டு செய்கிறார்கள். அதை ஒன்றிணைத்து அவர்களிடத்தில் பேசி முடிவு எடுத்து சாலை அமைப்பது, வடிகால் அல்லது சாக்கடை புதுப்பிப்பது, இவற்றை இந்த, இந்த முறைகளில்தான் செய்ய வேண்டும் என்ற ஒரு நியதியைப் புதிதாக நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அதை நிச்சயமாக ஏற்படுத்துவோம் என்ற நிலையை நான் இங்கே விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுகூட மாண்புமிகு செங்கை சிவம் அவர்கள் சொன்னார்கள். ஆதிதிராவிட, பழங்குடி மக்களும், ஆதிவாசிகளும் வாழ்கிற பகுதிகளில் ஏற்கெனவே இந்த இணைப்புகள் கொடுப்பதில் அவர்களிடத்திலே வலியுறுத்தப்பட்டு, பணம் பெறப்பட்டு சங்கடங்கள் வந்து, கொடுக்க முடியாமல், அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடனாகவும், மானியமாகவும் கொடுத்து அந்தப் பணியினைச் செய்தார்கள். இடையிலே வந்தவர்கள் அதை நிறுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள். இடையிலே வந்தவர்கள் அதைமட்டும் அல்ல, எதை எதையோ மோசடி செய்தார்கள்; ஆகையினால் அதைப் பரிசீலித்து ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்பதற்காகத்தான் புதிய நிதியாதாரத்தைக் கொடுத்து அதைத் துவங்க ஆரம்பித்திருக்கிறார்கள். அந்தப் பணி விரிவடையும். அந்தப் பணி தொடர்ந்து நடத்தப்படும். நம்முடைய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னாலே என்னைச் சந்தித்து ஒரு மகஜரைக் கொடுத்தார்கள். அதிலே அதைத் திட்டவட்டமாக அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுடைய உடன்பாடும் அதிலே இருக்கிறது. எனவே மாநகராட்சி வேறு, சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் வேறு என்ற பிரச்சினை அல்ல. அதோடுகூட சட்டமன்ற உறுப்பினர்கள் வேறு என்றும் நீங்கள் எழுதி விடக்கூடாது. இந்தக் குழுவிலே நாங்கள் இல்லையே, அந்தக் குழுவிலே நாங்கள் இல்லையே என்று நீங்கள் சொல்லவே தேவையில்லை. இந்த மாமன்றம் அத்தனைக்கும் பொதுவானது. தமிழ்நாடு பொதுவானது.

*பிற்பகல் 12-55*

தமிழ்நாட்டில் அங்கம் பெற்று இருக்கக்கூடிய ஊராட்சிகளாக இருந்தாலும், நகராட்சிகளாக இருந்தாலும், மாநகராட்சிகளாக இருந்தாலும், இந்த வாரியமாக இருந்தாலும், அந்த வாரியமாக இருந்தாலும் இங்கேதான் எல்லாம் வரவேண்டும். எந்த அனுமதி



1997 அக்டோபர் 15] [திரு. கோ. சி மணி]

என்றாலும், அதற்கு நிதி ஆதாரம் என்றாலும், சட்ட விளக்க உரை என்றாலும், திருத்தங்கல் என்றாலும், இணைப்புகள் என்றாலும், நீக்குதல் என்றாலும் இங்கேதான் வந்தாக வேண்டும். ஆகவே, உங்களுக்கு வானளாவிய அதிகாரம் இல்லாவிட்டாலும், வரம்புக்குரிய அதிகாரத்தை பெரும்பாலும் நீங்க்ள் பெற்று இருக்கிறீர்கள். ஆகவே, அதிலேதான் அங்கம் பெற்று இருக்க வேண்டும் என்ற அவசியம் உங்களுக்குத் தேவையில்லை. எந்த நேரத்தில் எதை நீங்கள் சொன்னாலும் இந்த அரசு பரிவோடு ஏற்று, அதை நிறைவேற்றித் தருகிற எண்ணத்திலே இருக்கிறது. ஒரே கூட்டத்தைக் கூட்டிக்கொண்டு அங்கே 6 குழுத் தலைவர்களும், அதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்களும், அதற்குப் பிறகு இருக்கிற இதர குழுக்களின் தலைவர்களும் கேட்பார்கள். எல்லாம் இந்த மாநகராட்சிக்காகத்தான், எனவே உங்கள் கோரிக்கைகள், மாநகராட்சிப் பகுதியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்படும். இப்போது கோரிக்கைகள் தராமல் இல்லை. எல்லாவற்றிகும் அரசிடத்திலே கோரிக்கை கொடுக்கிறீர்கள். மாநகராட்சிக்கும் கோரிக்கை கொடுக்கிறீர்கள், அத்தனையில் முடிந்தவற்றை, தேவையானவற்றை நிறைவேற்றிக் கொடுக்கிற பொறுப்பை நாங்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறோம். இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிருஷ்ணா நதி நீர் இங்கே வரும், அதிலே ஒன்றும் சந்தேகம் இல்லை. அதோடுகூட இந்த மாதிரியான திட்டங்களை முழு மூச்சோடு நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பணியாளர்கள் சம்பந்தமாக திரு. ரங்கநாதன் அவர்கள் சொன்னார்கள் அவரிடத்தில் உள்ள ஒரே ஒரு பிரச்சினை என்னவென்றால், சொல்ல வேண்டிய அத்தனையையும் ஒரே நேரத்தில் சொல்லிவிட வேண்டும் என்று எப்போதும் அவர் விரும்புவார். பணியிடம் இருந்தால் அதை நாங்கள் நிரப்புவதற்குத் தயாராக இருக்கிறோம். இல்லாத ஒரு இடத்தை உருவாக்குகிற நிலை இந்த அரசுக்கு இப்போது முடியாது. ஏற்கெனவே அதற்கு என்று இடம் இருந்து அதை நாங்கள் நிரப்பாமல் இருந்தால் நிச்சயமாக அந்த இடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம். புதிய இடத்தை உருவாக்குவது பற்றிப் பரிசீலித்துத் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி அமைகிறேன். வணக்கம் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சென்னையைப் பொறுத்தது, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகரத்தைப் பற்றி நகராட்சியைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். ஆனால் கிராமங்களிலே குடிநீர் இருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது சென்னை சம்பந்தப்பட்டது. நீங்கள் உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

" 1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ச) இந்திய சாலைச் சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1997) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள சட்டமுன்வடிவிற்கான பின்னிணைப்பு ஆங்கிலத்தில் உள்ளதில் ஒரு திருத்தத்தை நான் முதலில் தெரிவிக்க விரும்புகிறேன்.

"In the Annexure, under the heading (2), in Section 2, Sub-Section 2 (b) (ii) after the expression 'by the', word 'local' shall be inserted."

*"1997-ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1997)" @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"*
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரிக்கும் வகையில் என்னுடைய கருத்தை வெளியிடுகிற அதேநேரத்தில் அதையொட்டி சில செய்திகளை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்திலே இருக்கிற பல்வேறு பெரிய நகரங்களுக்கு ஏற்கெனவே கடந்த 10 ஆண்டுக்காலமாக அல்லது அதற்கு முன்பு இருந்தே புறவழிச் சாலைகள் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அமைக்கப்பட்ட புறவழிச் சாலைகளெல்லாம் அரசாங்கத்தாலே அமைக்கப்பட்டவையேயொழிய, தனியார் உதவியோடு அமைக்கப்பட்டவை அல்ல.

பிற்பகல் 1-00

"கொங்கன் இரயில் திட்டம்" என்பது ஒரு மிகப் பெரிய திட்டம். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்ற எண்ணம் வந்தபொழுது, "கொங்கன் இரயில்வே கார்ப்பரேஷன்" என்ற ஒரு கார்ப்பரேஷனை நிறுவி, அதை நிறைவேற்றினார்களே ஒழிய, தனியார் துறையிலே விடவில்லை. ஆனால், இன்றைக்கு நிதி நிலை காரணமாக அரசே இதைச் செய்ய முடியாது என்று சொன்னாலும்கூட, தனியார் துறை இதை நிறைவேற்றுகின்றபொழுது, அது வசூலிக்கின்ற இந்தச் சுங்க வரியானது சாதாரண மக்களாலே கொடுக்கப்பட முடியுமா என்பதை நாம் இங்கே சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சான்றாக, நான் ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். கோவையைப் பொறுத்தமட்டிலே, நீலாம்பூரிலேயிருந்து பாலக்காடு

@14-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



செல்வதற்கு மதுக்கரை வழியாகச் செல்கிற சாலை ஒரு புறவழிச் சாலை. அதேபோல, கோவையிலே இருக்கிற ஆற்றுப்பாலம் என்கிற இடத்திலே இருக்கிற பாலம் ஒரு மிகப் பெரிய பாலம். இந்த இரண்டு திட்டங்களும் இப்போது தனியார் துறையின்மூலம் நிறைவேற்றப்படவிருப்பதாக - ஏறத்தாழ அது முடிவு பெற்றிருப்பதாக நான் அறிகிறேன். தனியார் துறையின் மூலம் அதைச் செய்கின்றபொழுது, நீலாம்பூர் புறவழிச் சாலையைப் பொறுத்தமட்டிலே 30 ஆண்டுகளுக்கு அதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட இருக்கிறது. கையெழுத்து இடப்பட வேண்டும். அதேபோல, ஆற்றுப்பாலம் - அந்தப் பாலத்தைப் பொறுத்தவரையில், தனியார் துறை 20 ஆண்டுகளுக்கு இந்தச் சுங்க வரியை வசூலித்துக் கொள்வதற்கு அவர்களுக்கு நாம் இப்போது ஒப்பந்தம் செய்து கொடுக்கவிருக்கிறோம்.

இதிலேயிருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்க்கிறபொழுது, இந்த நீலாம்பூர் சாலையைப் பொறுத்தமட்டிலே, காரண நோக்க விளக்கத்திலே கூறியிருக்கின்ற அடிப்படையிலே ஒரு நாளைக்கு 8,000 சரக்கு வாகனங்கள் அதிலே செல்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சரக்கு வாகனங்களுக்கு வசூலிக்கப்படுகிற சுங்க வரியைப்பார்த்தால், ஒரு லாரியோ அல்லது வேறு சரக்கு வாகனமோ, ஒருமுறை கடக்க வேண்டும் என்று சொன்னால் 56 ரூபாய் கட்ட வேண்டும். அதேபோல, லேசு ரக வாகனங்கள் ஒருமுறை கடக்க வேண்டுமென்று சொன்னால் 28 ரூபாய் கட்ட வேண்டும். சாதாரணக் கார்கள் போக வேண்டுமென்று சொன்னால் 19 ரூபாய் கட்ட வேண்டும்.

இந்த புறவழிச் சாலைக்குத் தனியார் துறை செய்யப்போகிற முதலீடு வெறும் 90 கோடி ரூபாய்தான். இந்த 90 கோடி ரூபாயைப் போல பல மடங்கு அதிகப் பணத்தை இந்த 30 ஆண்டுக் காலத்தில் அவர்கள் சம்பாதித்துவிட முடியும் என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் தெளிவாகக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, என்னைப் பொறுத்தமட்டிலே நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், தனியார் துறையின் மூலம் இந்தச் சாலைகளை அமைத்தாலும்கூட, பாலங்களைக் கட்டினாலும்கூட, இந்தச் சுங்கவரியைப் பெருமளவிலே குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அரசு இதைப் பரிசீலித்து

நல்ல முடிவினை அறிவிக்க வேண்டும் என்று கேட்டு, உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *1997* ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்கவரிகள் சட்டமுன்வடிவின் மீதான சில கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாக, தொன்மைவாய்ந்த நெடுஞ்சாலைத் துறையும், சாலைத் துறையும் நம்முடைய அரசுத் துறையிலேயே இருக்கிறபொழுது, இப்படிப்பட்ட வேலைகளைத் தனியார் துறைக்கு மாற்றி வருவது, அதனுடைய தரத்தைப் பாதுகாப்பதிலே இருக்காது என்பதை எங்கள் கருத்தாகத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஒப்பந்தக்காரர்களிடம் விடுகின்றபொழுது, அரசுக்குச் செய்கின்ற காரியங்களையே தனியார் செய்கிறபொழுது, ஒரு முறையான தரத்தோடு செய்யாத பல குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே வந்திருக்கின்றன. அப்படியானால், தனியார் ஒரு இலாப நோக்கத்தோடுதான் இந்தக் காரியங்களை மேற்கொள்வார்கள். அப்படி மேற்கொள்கிறபொழுது அதனுடைய வேலையின் தரத்திலே இருக்கிற குறைவு மாத்திரம் அல்ல; அது பொதுமக்களுக்கு இடையூறாகவும் அமையும்.

அவர்கள் சுங்கவரி வசூலிப்பதிலே எவ்வளவு வரம்பற்ற முறையிலே, சொந்த இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு அது வசூலிக்கப்படுகிறது என்பதை எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி, வரம்பற்ற முறையிலே நடந்து கொள்ளாமல் இருப்பதற்கு என்ன கட்டுப்பாடு இருக்கிறது ? யார் கண்காணிப்பார்கள் ? எங்கே சுங்கவரி நிர்ணயிக்கப்படுகிறது ? அவர்கள் போடுகின்ற முதலீடு எவ்வளவு ? இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளையெல்லாம் இந்தத் திருத்தச் சட்டம் உள்ளடக்கியிருக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

*பிற்பகல் 1-05*

கிராமப்புறத்திலே, கிராமச் சாலைகள் மக்களுக்குப் பயனற்ற முறையில் இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமச் சாலைகளை செப்பனிடுவதற்கோ அல்லது சரிபடுத்துவதற்கோ எந்தத் தனியாரும் முன்வரமாட்டார்கள். பல நூற்றுக்கணக்கான வாகனங்கள்



செல்லக்கூடிய பாதைகளைத்தான் அவர்கள் தெரிந்தெடுப்பார்கள். எனவே, இப்படி மக்களுக்காகச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு நெடுஞ்சாலைத் துறையே, அதனுடைய துறையின் மூலமாக நிதியாதாரத்தைத் திரட்டுவதிலே முனைப்பாகக் கவனத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக, இப்படித் தனியாருக்கே தொடர்ந்து அனுமதியளிப்பதிலே கவனம் செலுத்துவதைத் தவிர்க்க வேண்டுமென்ற உணர்வோடு இந்தத் திருத்தத்தை ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய சாலைச் சுங்கவரிகள் திருத்தச் சட்டமுன்வடிவை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்புத் தந்திருக்கின்ற தங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்து, ஒருசில கருத்துக்களை மட்டும் முன்வைக்க ஆசைப்படுகிறேன். சாலைச் சுங்கவரியை இப்போது தனியார்கள் எல்லாம் வசூல் செய்யும்போது முறைகேடான வகையிலும், வருகின்ற வாகன ஓட்டுநர்களிடமும் அல்லது உரிமையாளர்களிடமும் தவறான போக்கினைக் கையாண்டு, சில சமயங்களில் மிகவும் கேவலப்படுத்துகின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது. இதைக் கருத்தில்கொண்டு சுங்கவரி வசூல் செய்யக்கூடியவர் அல்லது கேஷியர், மேற்கொண்டு ஒருவர் வேண்டுமானால் இருக்கலாம் என்று ஒரு கட்டுப்பாடு அதிலே இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இதற்கு உதாரணமாக, எங்கள் தொகுதியிலே சேத்தியாத்தோப்பு பாலத்திற்கு கட்டுமானக் கழகத்தின் சார்பிலே தனியாருக்கு ஏலம் விடப்பட்டு அங்கே சுங்கவரி வசூலிக்கக் கூடியவர்கள், அடியாட்களை வைத்துக்கொண்டு, கத்தி கழியெல்லாம் வைத்துக்கொண்டுகூட, அங்கே வழிப்பறிக் கொள்ளை செய்வதுபோல நின்று கொண்டு வசூல் செய்கிறார்கள். இந்தப் பிரச்சினையினால் அந்தப் பகுதியிலே சாலை மறியல் எல்லாம் நடைபெறுகிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய ஓட்டுநர்கள், மற்றவர்கள் எல்லாம் மிகவும் சிரமப்படுகிறார்கள். இப்படிப்பட்ட போக்கைத் தவிர்க்கின்ற வகையிலே இந்தச் சுங்கவரி வசூல் முறைப்படுத்தப்பட வேண்டும்.

அங்கு அதிகாரிகள் மற்றும் அரசு வாகனங்கள் செல்வதற்கு மட்டுமே விலக்கு அளிக்கப்படுகிறது. அதோடு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிக்காக அவசரமாகச் செல்கின்ற நேரத்திலே இவர்களின் தொல்ல காரணத்தினால் அங்கே நின்று, அவர்களுக்குப்

பதில் சொல்லி, அவர்களுக்குப் பணம் கொடுத்து, பாக்கி வாங்கிக் கொண்டு செல்வதற்குள் எங்களுக்கு நேரம் கடந்துவிடுகிறது. எனவே, சுங்கவரி வசூலில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய அவசர வேலை நிமித்தம் காரணமாக விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர். க. கிருஷ்ணசாமி** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்கவரிகள் சட்டத் திருத்தத்தின்கீழ் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி ஒரு சில கருத்துக்களை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்தில், கோவை மாவட்டத்தில், ஒரு புறவழிச் சாலைக்கு, தனியாரிடத்திலே ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக செய்தித்தாள்களிலே நாங்கள் படிக்கிறோம். அது 90 கோடி ரூபாய் திட்டம் என்றும், அதிலே செல்லகூடிய வாகனங்களுக்கு சராசரியாக 30 ரூபாயிலிருந்து 60 ரூபாய் வரையிலும் வசூலிக்கப்படுகிறது என்றெல்லாம் தெரிகிறது. ஏற்கெனவே, தமிழ்நாட்டில் இருக்கின்ற பல சுங்கச் சாவடிகளிலே நம்முடைய மக்கள் எல்லாம், குறிப்பாக வாகனத்தினுடைய உரிமையாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி யிருக்கிறார்கள். அதுவும் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு, மூன்று ஆண்டுக் காலத்திற்கு என்று ஒப்பந்தம் செய்துவிட்டு, இருக்கக்கூடிய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு பல ரௌடிக் கும்பல் எல்லாம் தலையிட்டு அடாவடித்தனம் செய்து வசூல் செய்யக்கூடிய நிலைமைகளையெல்லாம் காண்கிறோம். குறிப்பாக, செங்கல்பட்டிற்கும் மாமண்டூருக்குமிடையே இருக்கக்கூடிய பாலத்தில் ஏற்கெனவே ஒப்பந்த காலம் முடிவுற்ற பிறகும்கூட இன்னும்கூட வசூல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே, நான்கு நாட்களுக்கு முன்பு சென்னை வருகின்றபோது பாதிக்கப்பட்டவர்களில் நானும்கூட ஒருவன். என்னுடைய காரை வழிமறித்து, ஒரு ரவுடிக் கும்பல் தகராறு செய்த நிகழ்ச்சிகளை எல்லாம் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-10*

அதேபோல், தூத்துக்குடியிலே, புதுக்கோட்டைக்கு அருகிலேகூட ஒரு சுங்கச்சாவடி சட்டவிரோதமாகச் செயல்படுவதாகத் தெரிகிறது. எனவே, ஒட்டுமொத்தமாக, இந்தச் சுங்கவரி வசூல் என்பதை வாகனங்களை ஓட்டுபவர்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடியது.





குறிப்பாக, கோவை மாவட்டத்திலே சமீபத்திலே போட்டிருக்கக்கூடிய 30 ஆண்டுகால ஒப்பந்தம் என்பது, அதனுடைய காலகட்டத்தின் அளவைப் பார்த்தால் மிக அதிகமானது. அதுவும் 90 கோடி ரூபாய் முதலீட்டிற்கு ஏறக்குறைய 400, 500 கோடி ரூபாய் வசூல் செய்யக்கூடிய உரிமையைக் கொடுப்பது சரியானதல்ல. ஒட்டுமொத்தமாக, இதையேகூட ஒரு கூட்டு முயற்சியாக, அரசாங்கமும் சில வங்கிகளோடு சேர்ந்து முயற்சி செய்து அல்லது வங்கியோடு ஒப்பந்தம் செய்துகொண்டு, அரசாங்கமே பாலங்களைக் கட்டுவதோ அல்லது புறவழிச் சாலைகளை அமைப்பதோ அது போன்ற காரியங்களைச் செய்யலாம். எனவே, இந்தச் சுங்கவரி வசூல் தொடர்பான திருத்தச் சட்டம் தேவை இல்லை என்று தெரிவித்து, ஒட்டுமொத்தமாகத் தனியாரிடத்திலே ஒப்படைக்ககூடிய நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

## 8. பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை

**சந்தனமரக் கடத்தல் வீரப்பன் பிரச்சினை பற்றியும், பணயக் கைதிகளை விடுவிப்பது பற்றியும் எடுக்கப்பட வேண்டிய அணுகுமுறை குறித்து கர்நாடக முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் சென்னையில் சந்தித்துப் பேச இருப்பது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு அவை முன்னவர், கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை இந்த அவையிலே வைப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர், கல்வி அமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 110-ன் கீழ்க்கண்ட அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

"இன்று பிற்பகல் 12-45 மணியளவில் கர்நாடக முதலமைச்சர் மாண்புமிகு திரு. பட்டேல் அவர்கள் டெல்லியிலிருந்து தொலைபேசி மூலம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களைத்

தொடர்பு கொண்டு, சந்தனக் கடத்தல் வீரப்பன் பிரச்சினை பற்றியும், பணயக் கைதிகளை விடுவிப்பது குறித்தும் விவாதித்தார்கள். இதுபற்றி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து இரண்டு மாநில முதலமைச்சர்களும், சென்னையில் வருகிற 18 ஆம் தேதி மாலை சந்தித்துப் பேசுவதாக இருக்கின்றார்கள் "

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ச) இந்திய சாலைச் சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்கவரிகள் திருத்தச் சட்டமுன்வடிவு சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். இதிலே இருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினை என்னவென்றால், தற்போதுகூட நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற பல பகுதிகளில் சுங்கம் வசூலிக்கின்றார்கள். அதாவது, 20 வருஷங்களுக்கு முன்னாலே கட்டப்பட்ட சில பாலங்களுக்குக்கூட — குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே ஞாறாமலை என்று சொல்கின்ற ஊரில், நேசமணி பாலம் என்கிற பெயரில் ஒரு பாலம் இருக்கின்றது. அது 20 வருஷங்களுக்கு முன்னாலே கட்டப்பட்டது. இன்றைக்குக்கூட அதற்கு சுங்கம் வசூலிக்கக்கூடிய ஒரு சாபக்கேடான நிலை இருக்கின்றது.—சுங்கம் வசூலிக்கக்கூடிய காலகட்டத்தைச் சொன்னார்கள். எங்குமே 20 வருஷத்திற்கும் மேலாக வசூலிக்க மாட்டார்கள் என்று சொன்னார்கள் — இந்த நிலை நீடிக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து.

அதுபோல், தனியார்களுக்கு இப்போது சாலைகளைச் செப்பனிடக் கொடுப்பதன் மூலமாக, 30 ரூபாயிலிருந்து 60 ரூபாய்க்கும் அதிகமாக ஒவ்வொரு வாகனத்திற்கும் வசூல் செய்யப்படுவது என்கிற ஒரு நிலை ஏற்பட்டால், அது அரசாங்கத்திற்குப் பதிலாக ஒரு பதில் அரசாங்கம்போல் மாறிச் செயல்படக் கூடியதற்கான வாய்ப்பு ஏற்படுமா, இல்லையா என்ற ஒரு சந்தேகம் வருகின்றது. எனவே, அரசினுடைய துறை என்று சொல்லக்கூடிய நெடுஞ்சாலைத் துறை பல கோடி ரூபாய்களைச் செலவிடுகின்ற ஒரு துறையாக உள்ளது. அதுபோல்,





பொதுப்பணித் துறை உள்ளது. உலக வங்கியிலே கடன் வாங்கினாலும் சரி, அல்லது நபார்டு திட்டத்தின்கீழ் பணம் வந்தாலும் சரி, பல்வேறு திட்டங்களை நாம் வைத்திருக்கின்றோம். எனவே, தனியார்களுக்கு இதை நாம் கொடுக்காமல் அரசினுடைய இந்தத் துறைகளின் மூலமாக, அதாவது நெடுஞ்சாலைத் துறை மூலமாக, பொதுப்பணித் துறை மூலமாகச் சரிவரச் செப்பனிடுவது மற்றும் பராமரிப்பதுதான் முறையாக இருக்குமே தவிர, வேறில்லை. இவற்றைத் தனியார்களிடம் விடுவதன் மூலமாக இன்னொரு விதத்தில் சங்கடங்களை ஏற்படுத்தும் என்பதை அரசினுடைய, மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தத் திருத்தச் சட்டமுன்வடிவை இந்த நேரத்திலே கொண்டு வரத் தேவையில்லை என்பதைச் சொல்லி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினுடைய அவசியத்தைப் பற்றி சில உறுப்பினர்கள் ஆதரித்தும், சில உறுப்பினர்கள் எதிர்த்தும் இங்கே கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அரசினுடைய நிதி நிலையைப் பொறுத்தவரையில், அதிகரித்து வருகிற தேவைகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தால், தனியார்களையும் இந்தச் சாலைகள் அமைக்கும் பணிகளிலே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் பி.ஓ.டி. என்று சொல்லப்படுகின்ற இந்த முறையை மத்திய அரசும் வலியுறுத்தி இன்று சில பகுதிகளிலே இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக, இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. லட்சுமணன் அவர்கள் கோவை புறவழிச் சாலைக்கான ஒப்பந்தத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கான செலவு 90 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டு 30 ஆண்டுகளுக்கு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த 30 ஆண்டுகளில் அவர்கள் வசூலிக்கும் தொகை அதிகம் இருக்கும் என்றுகூடக் குறிப்பிட்டார்கள். அந்தச் சாலையினுடைய நீளம் சுமார் 27 கி.மீ. அதிலே மற்றொரு முக்கியமான நியதி என்னவென்று சொன்னால் - ஐஞ் கூகு ச்நூகீட் ஹநூ ச்சிஞ்கூச்நூ - விருப்பபட்டால் அந்தச் சாலையில் போகலாம், இல்லாவிட்டால், இப்பொழுது பயன்படுத்துகின்ற சாலையைக்கூட பயன்படுத்திக் கொள்ள முடியும். இரண்டு அதிலே இருக்கிறது.

*பிற்பகல் 1-15*

குறிப்பாக, இந்த 27 கி.மீ. தூரத்தினை அதிகச் சாமான்களை ஏற்றி வருகின்ற லாரிகள் கடந்து வருகின்றபோது, நகரத்திற்குள்ளே சென்று வருகின்றபோது ஏற்படுகின்ற டீசல் செலவு, 27 கி.மீ. தூரம் புறவழிச் சாலையில் வருகின்றபோது குறைவாக வருகின்றது என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது மத்திய அரசினிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மத்திய அரசு L&T யோடு செய்துகொண்ட ஒப்பந்தம். மாநில அரசு இதனை நிர்வகிக்கின்ற பொறுப்பை ஏற்றிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தைச் செய்து முடித்தவர்கள் மத்திய அரசைச் சார்ந்தவர்கள்தான். நான் அவர்களிடம் ஆற்றுப் பாலத்திற்கு 2 கோடி ரூபாய் என்றும், 20 ஆண்டுகள் என்றும் வைத்திருக்கிறீர்களே என்ற வினாவைக் கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில் என்னவென்றால், 'ஒப்பந்தத்தில் இருக்கிறது' என்று சொன்னார்கள். அந்தப் பாலத்தைக் கட்டியவுடன், கட்டிய செலவுத் தொகையை அரசு அவர்களுக்குக் கொடுத்துவிடும் என்று சொன்னால், அவர்கள் அதிலே சுங்கம் வசூலிக்காமலேயே நம்மிடம் அதைக் கொடுத்துவிடுவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். இது ஆற்றுப் பாலத்தைப் பொறுத்தவரையில் உள்ள நிலை.

இந்தப் புறவழிச் சாலையைப் பொறுத்தவரையில், விருப்பப்பட்டவர்கள் பயணம் செய்யலாம். மற்றவர்கள் முதலிலேயே இருக்கும் சாலையில் பயணம் செய்வதற்கான வசதிகளும், வாய்ப்பும் இருக்கும். ஆகவே, 30 ஆண்டுகள் என்று சொல்கிறபோது அவர்கள் 90 கோடி ரூபாய் மூலதனமிட்டு அதற்கு 30 ஆண்டுகளுக்கு வட்டியும் கணக்கிடுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் வியாபார நோக்கோடு வருகிறார்கள், அதை நாம் மறுப்பதற்கில்லை. அதற்கு வட்டியெல்லாம் கணக்கிட்டு அவர்கள் தொகையை நிர்ணயம் செய்து ஒப்பந்தத்திலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நிர்ணயம் செய்த தொகைக்கு மேல் வசூலிக்காமல் பாதுகாக்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. 30 ஆண்டுகளும் அவர்கள்தான் முழுமையாக அதைப் பாதுகாக்கின்ற செலவை ஏற்கிறார்கள். ஏனென்றால், 90 கோடி ரூபாய் என்பது முதலிலே செய்கின்ற Investment. ஒவ்வொரு ஆண்டும் நாம் சாலையிடுவோம் என்று சொன்னால்கூட, நாம் ஒவ்வொரு ஆண்டும் 5 இலட்சம், 10 இலட்சம் என்று ஒரு கிலோமீட்டருக்குச் செலவு செய்யவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. 30 ஆண்டுகளில் அதனைப் பராமரிக்கின்ற செலவை அந்தக் கம்பெனியே, நிர்வாகமே ஏற்றுக்கொள்ள





வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் இந்தத் தொகை வசூலிக்கப்படுகிறது. இதுபோன்ற பணிகளை மேலும் விரிவாக்குவதற்கு இந்தச் சட்டமுன்வடிவு வழிவகுக்கிறது. இவற்றில் சுங்கம் வசூலிக்கின்றபோது அரசு நிச்சயமாக அவர்களை மேற்பார்வையிடும். அரசு நிர்ணயிக்கின்ற அந்த ஒப்பந்தத்தின் மூலமாக, பி.ஓ.டி. என்று சொல்கின்றபோது அதிலே ஒப்பந்தம் கையெழுத்தான பிறகுதான் இவை ஒப்படைக்கப்படுகின்றன. அப்படி ஒப்படைக்கப்படுகின்றபோது அதிலே குறிப்பிடுகின்ற தொகையைத் தவிர அவர்கள் அதிகம் வசூலிக்கக் கூடாது என்ற நிபந்தனையும் அதிலே கண்டிப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக, பல்வேறு உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் ஆய்வு செய்த பின்னர்தான், கோவை புறநகர் ஒப்பந்தத்தைக்கூட மாநில அரசு நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டிருக்கிறது. மேலும், இதுபோன்ற பணிகளை இப்போது நெடுஞ்சாலையில் மட்டும் கொண்டு வந்திருக்கிறோம். மேலும், தமிழகத்தின் அனைத்துப் பணிகளிலும் இவற்றை விரிவாக்குகின்ற வகையில்தான் சட்டமுன்வடிவு கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழக மக்களுடைய தேவையை உடனடியாக நிறைவேற்றுவதற்கு ஒரு வாய்ப்பாகக் கருதி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1997 அக்டோபர் 15

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு இந்திய சாலைச் சுங்கவரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்".
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1997 அக்டோபர் 15]

## (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1997). மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 சட்டமுன்வடிவுகள் இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். இதை மனதிலே கொண்டு பேச வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்

முற்பகல் 1-20.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகள் நியமித்தல் குறித்த சட்டமுன்வடிவின்மீது பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமைக்கு எனது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துக்களைக் கூறலாம் என நினைக்கிறேன். சட்டமன்றத் தேர்தல் முடிந்தவுடன் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று, அதைத் தொடர்ந்து விரைவாக கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் தேர்தல்கள் நடைபெற்றன. தொடர்ந்து, மாவட்ட அளவிலே, மாநில அளவிலே பால்வள ஒன்றியமாக இருந்தாலும் சரி, மத்திய, மாநிலக் கூட்டுறவு வங்கிகளாக இருந்தாலும் சரி, மாநில

---

@14-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ்.என் பாலசுப்பிரமணியன்] [1997 அக்டோபர் 15

இணையமாக இருந்தாலும் சரி, இவற்றுக்கெல்லாம் தேர்தலை நடத்திட வேகமாகச் செயல்பட்ட அரசு, மாநில, மத்திய அளவில் தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்காமல், இதிலே ஏன் காலம் தாழ்த்துகிறது என்பது எனக்கு புரியாத புதிராக இருக்கிறது. எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள், வசதிகள் முழுமையாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு, தங்கம் எல்லாம் செய்யாததை சங்கம் செய்யும். கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நல்ல பணிகள் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய காலகட்டத்தில், மாதிரிக் கூட்டுறவுச் சங்கங்களை, கண்டிப்பாகத் தமிழகத்திலே கொண்டு வர வேண்டுமென்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாக நிர்வாகம் இருக்குமேயானால், மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளை உடனுக்குடன் அவற்றால் செய்ய முடியும்.

இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு, தொலை தூரத்திலே இருக்கக்கூடிய மக்களுக்குச் சென்றடையக்கூடிய அளவுக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) முடிக்கிற மாதிரி வந்து தொடர்கிறீர்கள். 'தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே' என்று ஒரு கருத்தைச் சொல்லி விட்டீர்கள். சிக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** எதிர்காலத்தில் மாதம் 30 நாட்களும் அத்தியாவசியப் பொருட்கள் முழுமையாகக் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். 30 நாட்களும் சீமை எண்ணெய், சர்க்கரை எல்லா மக்களுக்கும் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2 கிலோமீட்டர் தூரத்திற்கு 1 கடை, 200 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற அளவிலும், இலவசமாகக் கட்டிடம் கொடுக்கும் இடங்களில் நியாய விலைக் கடை அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அமைச்சர் அவர்களும், பதிவாளரும் இவற்றைச் செய்ய நினைத்தால்கூட, கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள்



1997 அக்டோபர் 15] [திரு. எஸ்.என் பாலசுப்பிரமணியன்]

இன்னும் ஒத்துழைக்க மறுக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தொடர்ந்து அமர்ந்து பணியாற்றவும், நியமன அதிகாரிகள் முறையை ரத்துச் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்கான தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை மேலும் 6 மாதம் நீட்டித்திருப்பது உண்மையிலேயே வேதனைக்குரிய ஒன்றாகும். நமது அரசு பொறுப்பேற்ற பின்னர் உள்ளாட்சித் தேர்தலை நடத்திக் காட்டியிருக்கிறோம். கீழ்மட்ட அமைப்புகளுக்கு, கூட்டுறவுத் துறையிலே தேர்தலை நடத்தியிருக்கிறோம். மாவட்ட அளவிலே கூட்டுறவு அமைப்புகளுக்கும், மாநில அளவிலே கூட்டுறவு அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்துவதில் 204 கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்த முடியாமல் தடையாணை உள்ளதாகச் சொல்கிறார்கள். அதனை அரசு கொஞ்சம் முனைப்போடு விரைவாகத் தீர்க்க வழிவகை காண வேண்டும். அதைப்போன்று, சில இடங்களிலிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. ஈரோடு மாவட்டத்திலே 195 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. 195 கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்த்து இவற்றின் சார்பாக மத்திய கூட்டுறவு வங்கியிலே ஒரே ஒரு பிரதிநிதிதான், இயக்குநர் குழுவிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். மற்ற அம்சங்களை ஆராயும்போது இந்த அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், இந்த ஒரு தவணையிலேயே—மீண்டும் காலக்கெடு வராமல் இந்த 6 மாத காலத்திற்குள் கூட்டுறவுத் தேர்தலை நடத்திட வேண்டுமென்று கேட்டு, ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

*பிற்பகல் 1--25*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களினுடைய தனி அலுவலர்கள் நியமனத் திருத்தச் சட்டமுன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். தனி அலுவலர் பதவிக் காலம் என்பது நீட்டிக்கப்படக் கூடாத ஒன்று. கூடிய விரைவிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் போன்று பல்வேறு கூட்டுறவுச்

[திரு. ஜி.கே. மணி] [1997 அக்டோபர் 15

சங்கங்களுக்குத் தேர்தல்களை நடத்தி முடித்து, மாவட்ட அளவில், மாநில அளவில் இருக்கின்ற கூட்டுறவு அமைப்புகளுக்கு உடனடியாக மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்திட வேண்டுமென்று முதலிலே அன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். நடந்து முடிந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே, என்னுடைய தொகுதியிலே, மக்களெல்லாம் கண்ணெதிரிலே பார்த்து வேதனைப்படக்கூடிய அளவிலே சில முறைகேடுகள் நடந்தன. அப்படிப்பட்ட முறைகேடுகள் நடக்காவண்ணம், முறையாக நடப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமெ ்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் போன்ற பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற செயலாளர்கள் இதுவரையிலேயும் மாறுதல் செய்யப்படாமல் ஆண்டாண்டுகாலமாக அவர்களே பணியில் இருக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. அவர்கள் அங்கே குட்டி இராஜாக்கள் போல ஆதிக்கம் செலுத்துகின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிலே அவர்கள் பினாமி பெயரிலே பணத்தை எடுத்துக் கொண்டு, வட்டி இலாபம் பெற்றுக் கொண்டு, அந்த வங்கிகளெல்லாம் கடனிலே திவால் ஆவதற்குக் காரணமாக அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பதாக அங்குள்ள பொதுமக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் மாறுதல் கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளும், பொதுமக்களும் சொல்லக்கூடிய நிலை இருந்து வருகிறது. ஆகவே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றுகின்ற செயலாளர் பதவியிலிருப்பவர்களை நிச்சயமாக மாறுதல் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அதேநேரத்தில், கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் செயல்படுகின்ற நியாய விலைக் கடைகள், பல்வேறு இடங்களில், பொது மக்கள் கேட்டும்கூட, அரசாங்கம் உத்தரவிட்டும்கூட, அவற்றைப் பிரிப்பதற்கு, கீழ்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படாத நிலை இருந்து வருகிறது. ஆகவே, இரண்டு கிலோமீட்டர் தொலைவிலோ 200 குடும்ப அட்டைகளுக்கு மேலாகவோ இருக்கக்கூடிய் நிலையில், அந்தக் கடைகளைப் பிரிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டு, இதனை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 15]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் இருக்கக்கூடிய 23,379 கூட்டுறவுச் சங்கங்களிலேயும் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு, அதிலே 204 சங்கங்களுக்குத் தடையாணை இருக்கின்ற காரணத்தினால் தேர்தல் நடத்த முடியாமல் இருக்கிறது. அந்தந்தத் தடையாணையை நீக்குவதற்குரிய முயற்சிகள் அரசாங்கத்தின் சார்பாக முழுமையாக, தீவிரமாக எடுக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமே முழுமையான காரணம் என்று சொல்வதற்கில்லை. 2-5-1997-ல் தமிழ்நாடு அரசின் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளபடி, மொத்த விற்பனைப் பண்டக சாலைகளிலே தனி நபருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்ற சட்டத்தின்படி. பல்வேறு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளிலே அந்தப் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், அதையெல்லாம் உருவாக்குவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டையும் வெகு விரைவிலே முடித்து, முழுமையாக அத்தனை சங்கங்களுக்கும் தேர்தல் நடத்த வேண்டுமென்றுதான் இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே பேசிய உறுப்பினர்கள், ஆறு மாத காலத்திற்குள்ளாக, அடுத்த முறை நீட்டிப்பு இல்லாமல் நடத்தி முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை முழுமையாக எடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்து இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாலசுப்பிரமணியன் அவர்களும், திரு. பெரியசாமி அவர்களும், திரு. மணி அவர்களும் ரேஷன் கடைகள் பிரித்துத் தரப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இந்த அரசின் சார்பாக அதற்கான உத்தரவுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு கிலோமீட்டர் தொலைவு இருந்தால் போதும்; அங்கே 800 கார்டுகளுக்கு மேலே 200 கார்டுகள் இருந்தால்கூட பகுதிநேரக் கடை பிரித்துத் தரப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் உரிய முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களை அணுகி, வாடகை இல்லாமல் ஒரு இடத்தை ஒதுக்கித் தர முன்வருவார்களேயானால், அங்கே பகுதிநேர நியாய விலைக் கடை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு நிச்சயமாகச் செய்து தரும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உங்களுக்குச் சரியாகப் பதில் அளிக்கவில்லையென்றால்கூட, எனக்குத் தெரிவித்தால், நான் மீண்டும் அவர்களோடு பேசி, உரிய முறையிலே கடைகளைத்

திறப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். புதிதாகத் திறக்கப்பட உள்ள 5000 கடைகளிலே ஒவ்வொரு ஆண்டும் 1000 கடைகள் திறக்கப்படும் என்று சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டதற்கிணங்க, இந்த ஆண்டு மட்டும் 2000 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

மேற்கொண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புவார்களேயானால், அரசு அறிவித்திருக்கிற அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு இருக்குமேயானால், விரைவாகச் செயல்படுவதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு, அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** அதேபோன்று மத்திய வங்கியிலே கைத்தறி நெசவாளர்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். உரிய முறையில் ஆராய்ந்து, அதற்கும் வாய்ப்பு இருக்குமானால், அந்த இடத்தைத் தருவதற்கு, நிச்சயமாக இந்த அரசு உங்களோடு உறுதுணையாக இருக்குமென்று சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை ஏற்று, நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் எனும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் எனும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க, (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1997 அக்டோபர் 15

**(ஊ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1997-ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1997) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை முழுமையாக வரவேற்று, என்னுடைய ஒருசில கருத்துக்களை நான் சொல்லலாம் என்று ஆசைப்படுகிறேன். தொழில்களும், தொழில்கள் இருக்கின்ற வரை தொழிலாளர்களும், தொழிலாளர்களுடைய பிரச்சினைகளும் இருந்து கொண்டுதான் இருக்கும். அப்படிப்பட்ட நிலையிலே, பிரச்சினைகள் வருகிறபோது, வழக்குகள் எல்லாம் ஏற்படுகிறபோது, அந்த வழக்குகளை உடனுக்குடன் தீர்க்கின்ற வகையிலே, கூடுதலாக நீதிபதிகளை நியமித்து அவை தீர்க்கப்பட வேண்டும்.

அதேபோன்று, அரசு உயர் அதிகாரிகளுக்குத் தொழிலாளர்கள் பிரச்சினைகளைக் கையாளுவது என்பது அவ்வளவு சிறந்ததாக இருக்க முடியாது. பிரச்சினைகளிலே மூன்று விதமான பிரச்சினைகள் இருக்கின்றன. தீர்க்கப்படுகின்ற, தீராத பிரச்சினைகள், தீர்க்கப்படாமல் தொடருகின்ற பிரச்சினைகள் என்று பிரச்சினைகள் பலவிதமாக இருக்கின்ற நேரத்திலே, ஒருவர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று சொல்கிறபோது, இன்னொரு சங்கத்தினர் பிரச்சினை தீர்க்கப்பட முடியாத அளவுக்கு, அந்தப் பிரச்சினையை முழு அளவுக்கு உருவாக்கிடும் வகையில் செயல்படுகின்ற போக்கினை மாற்றுகின்ற ஒரு சட்டத்தை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

---

@14-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1997 அக்டோபர் 15] [திரு. பா. வேல்துரை]

அதேபோன்று, பல நேரங்களிலே, அது பேசித் தீர்க்கப்படுகின்றபோது, அரசே அதில் தலையிட வேண்டும். வெறும் தொழிலாளர்களும், முதலாளிகளுமே பேசும்போது, அந்தப் பிரச்சினை தீர்க்கப்படாமல், இழுத்தடிக்கப்பட்டு, அதன்காரணமாக, பல மில்கள், பல தொழில் நிறுவனங்கள் திறக்கப்பட முடியாத நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதை அரசு கவனத்தில் கொண்டு, தொழிலாளர் நலனிலே அக்கறை கொண்டு, உடனடியாக தொழிலாளர்களுக்கு அந்தத் தொழிலைக் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர்கள் முறை அடியோடு நீக்கப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர்கள் எப்படி ஏற்படுகிறார்கள்? குடும்பத்தில் ஒரு கஷ்டமான நிலை ஏற்படுகிறபோது, குழந்தைகள் வேலையிலே ஈடுபடுத்தப்படுகிறார்கள். ஆகவே, அதைத் தடுப்பதற்கு அந்தக் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகள் செய்து, அந்தக் குழந்தைகளைப் படிக்க வைக்கின்ற உதவிகள் எல்லாம் அரசு செய்து தர வேண்டும்.

அதேபோன்று, பீடித் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர்கள், விவசாயக் கூலிகள் எல்லாம் இப்போது அடிமட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது விவசாயத்தைப் பற்றி நாம் எல்லாம் மேடைகளிலே பேசும்போது, விவசாயம்தான் இந்த நாட்டிற்கு மூலத் தொழில், முதல் தொழில் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால், விவசாயத் தொழிலை நாம் எந்த வகையிலேயும் கவனிப்பதே கிடையாது. விவசாயிகள் இன்னும் அடிமட்டத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள் அந்த விவசாயக் கூலிகளையும் அரசாங்கம் கூலித் தொழிலாளர்களாகக் கவனித்து, அவர்களுக்கும் 60 வயதைத் தாண்டி விட்டால், பென்ஷன் தொகை கொடுக்க வேண்டுமென்றும், வேலை உறுதி மற்றும் இதர நல்ல வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தென் தமிழ்நாட்டிலே, நெல்லை, சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களிலே, பனை ஏறும் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள், அந்த பனை ஏறும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான தொழில் உத்தரவாதமும், பாதுகாப்பும் கிடையாது. அவர்கள் கீழே விழுந்தால், நிச்சயமாக இறந்து விடுவார்கள். ஆகவே, அப்படிப் பனை ஏறும் தொழிலாளர்கள் இறந்துவிட்டால், அவர்களுக்குக் குறைந்தது ஒரு இலட்சம் ரூபாய் நட்டஈடாக இந்த அரசாங்கம் வழங்க

[திரு. பா. வேல்துரை] [1997 அக்டோபர் 15

வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உபகரணங்கள் எல்லாம் இலவசமாக வழங்க வேண்டும். இலவச வீடுகள் வழங்க வேண்டும். குழந்தைகள் படிப்பிற்கான வசதிகள் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பனையேறும் தொழிலைச் செய்கிற அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே சேர்த்து, அரசினுடைய சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொண்டு இந்தச் சட்டமுன்வடிவை நான் முழுவதும் வரவேற்று, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன் அவர்களும், திரு. தீரன் அவர்களும் தங்கள் அரிய கருத்துக்களை மிகவும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை நான் வலியுறுத்த வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற மசோதாவினுடைய நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் அரசு அதை எந்த நோக்கத்தோடு முன்மொழிகிறதோ, அந்த நோக்கத்திற்குப் பொருத்தமற்ற ஒரு அம்சம் அதிலே உள்ளடங்கி இருக்கிறது.

அரசாங்கத்தினுடைய நோக்கத்திற்கு நேர் எதிரான ஒரு விஷயம் உள்ளடங்கி இருப்பது அரசின் கௌரவத்தைக் குறைக்கும் என்பதால்தான் நான் தலையிடுகிறேன். ஆகவே, இந்த விஷயத்தில் நான் என்ன முன்வைக்க விரும்புகிறேன் என்றால் இங்கே லேபர் கோர்ட்டிலும், இன்டஸ்ரியல் டிரிப்யூனலிலும் Presiding ஆபீசராக இருப்பதற்கு சட்டத் துறையினுடைய இணைச் செயலாளரையும், ஜே. சி. எல்.-ஐயும் தகுதி உள்ளவர்களாக ஆக்குவதற்கு உரிய முறையில் ஒரு அம்சம் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதில் நான் உடன்படுகிறேன். ஆனால், இதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால். சட்டத் துறை இணைச் செயலாளர் ஆனாலும் சரி, ஜே.சி.எல். ஆனாலும், 3 வருடம் அனுபவம் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே நான் ஒரு விஷயத்தை மிகச் சிறந்த வழக்கறிஞர் என்ற முறையில் நம்முடைய



1997 அக்டோபர் 15] [திரு. கே. சுப்பராயன்]

மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய சிந்தனைக்கு முன்வைக்க விரும்புகிறேன். முன்னரேயே லேபர் ஆபீசராக இருந்து ஏ. சி. எல்.-ஆக இருந்து (Assistant. Labour Commissioner), டி. சி. எல்.- ஆக இருந்து பல்வேறு நீதித் துறை சம்பந்தப்பட்ட விசாரணை அனுபவம் நிரம்பப் பெற்றவர்கள், ஜே. சி. எல். ஆனதற்குப் பிறகு அதிலே அவர்களுக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. ஜே. சி. எல். என்பது வெறும் சர்ட்டிஃபையிங் ஆபீசர் தான். எனவே, அதில் 3 வருடம் என்று கேட்பது என்பது, 5 விரலோடு 6-வது விரல் ஒட்டி இருந்தால் அதில் என்ன இருக்கிறது, ஒரு பொருளும் இல்லை, ஒரு பயனும் இல்லை. எனவே, எந்தப் பயனும் அற்ற 5 விரல்களோடு ஒட்டியிருக்கிற 6-வது விரல் போல இந்த 3 வருடம் என்று சொல்வதில் பொருளே இல்லை. பொருளே இல்லாத ஒரு விஷயத்தை நீங்கள் பொருத்தாதீர்கள் என்பதை மட்டுமே சொல்லி, நேரத்தின் அருமை கருதி, தங்கள் வேண்டுகோளையும் கவனத்தில் கொண்டு, தங்கள் மீது நம்பிக்கை வைத்து, அதை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்ற மிகுந்த நம்பிக்கையோடு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொழில் தகராறுகள் திருத்தச் சட்டமுன்வடிவின் மீது ஒருசில கருத்துக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, தங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்திலே உள்ள டால்மியா சிமெண்ட் ஆலைக்குச் சொந்தமான சில நிறுவனங்கள் Trans concrete Finance என்ற நிறுவனமும், Commercial carriers என்ற நிறுவனமும், அரியலூர் பக்கத்திலே உள்ள பெரியநாகலூர் என்ற இடத்திலிருந்து சுண்ணாம்புக் கற்களை லாரிகளின் மூலமாக ஏற்றிக் கொண்டு செல்கின்றன. ஏறத்தாழ 30 ஆண்டுக்காலமாக, 60 தொழிலாளர்கள் டிரைவர்களாக, கிளீனர்களாக, மெக்கானிக்குகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து 30 ஆண்டுகளாகியும் அவர்கள் நிரந்தரப்படுத்தப்படவில்லை; முறையான ஊதியம், சரியான ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை முன்வைத்து, கடந்த 40 நாட்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருக்கும், காவல் துறையினருடைய

[திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்] [1997 அக்டோபர் 15

அதிகாரிகளுக்கும் முறையாக இதையெல்லாம் தெரிவித்து, அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி இவை நியாயமான கோரிக்கைகள்தான் என்று எடுத்துச்சொல்லிய பிறகும், அந்த நிர்வாகமானது தொழிலாளர்களுக்கான பாதுகாப்பை, பணி நிரந்தரப்படுத்துவதையோ அல்லது ஊதியத்தை உயர்த்தித் தருவதையோ கொஞ்சம்கூடக் கண்டுகொள்ளவில்லை. எனவே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தர ஆவன செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை. அந்த ஆலைக்கு நிலம் கொடுத்தவர்கள் 53 பேர். 17 ஆண்டுக்காலமாகப் பணி செய்கின்றார்கள். ஆனால், அதிலே 10 பேர்களை மட்டும் நிரந்தரம் செய்தார்கள். மீதமுள்ள 43 பேர்களுக்கு பணி நிரந்தரம் செய்யாமல் அவர்களை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய பாட்டாளி தொழிற்சங்கத்தின் சார்பிலே அதற்கு உரிய முறையில் முறையிட்டு, பேச்சுவார்த்தை நடத்தியும்கூட, அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்காமல், நிலம் கொடுத்தவர்களை ஏமாற்றி,... அவர்களுடைய பணியை நிரந்தரப்படுத்தாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவை விட்டுவிட்டுப் பேசுகிறீர்கள். நாளையதினம் துணை மானியக் கோரிக்கையில் பேசுங்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு. நேற்றையதினம் உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நாளையதினம் பார்த்துக் கொள்ளலாம்; பேசிக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். ஆகவே, உங்கள் பதில் அப்படி இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நீதிமன்றங்கள், 'Labour Courts' தொழில் ஆயம் 'Industrial Tribunal' இவற்றிற்கெல்லாம் நடுவர்கள் 'Presiding Officers' நியமனம் செய்யப்படுகிறபோது, இப்போது நடைமுறையில் உள்ள சட்டத்திலே, உயர் நீதிமன்றத்திலே நீதிபதியாகப் பணியாற்றுபவர்கள்



1997 அக்டோபர் 15] [திரு. அ. இரகுமான்கான்]

அல்லது முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை Tribunal-க்கும், லேபர் கோர்ட்டுக்கும் Presiding ஆபீசர்களாக நியமிக்கலாம். இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தம், மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல ஜே. சி. எல். என்று சொல்லப்படுகின்ற Joint Commissioner of Labour, அதைப்போல, Joint Secretary in Law Department ஆகிய இரண்டு பதவிகளில் பணியாற்றக்கூடியவர்களை நீதிபதிகளாக லேபர் கோர்ட்டிலும், ட்ரிபியூனலிலும் நியமிக்கலாம் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களும் மனப்பூர்வமாக இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டார்கள். அதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்லுகிறபோது, Joint Commissioner of Labour - ஆக இருந்தாலும் Joint Secretary--ஆக இருந்தாலும், அவர்கள் ஏற்கெனவே சட்டத்துறையில் அனுபவம் பெற்றவர்கள், ஆகையினால் இப்பதவிகளில் அவர்களை நியமனம் செய்வதற்கு 3 ஆண்டுகள் அவர்கள் அனுபவம் பெற்றிருக்க வேண்டுமென்று கண்டிசன் இருக்கிறது. கட்டளை இருக்கிறது, இந்தியாவில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களில் ஏதாவது ஒன்றில் சட்டப்படிப்பு டிகிரியை அவர்கள் பெற்றிருப்பார்களானால் அதுவே போதும் என்று இருக்கிறது. அவற்றை எல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இந்த ஒன்று இருக்கிறதே, அதாவது 3 ஆண்டுகள் அனுபவம் என்பது தேவையில்லை என்று சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே இந்தத் துறையிலே அனுபவம் பெற்றவர்கள் என்றுகூடச் சொன்னார்கள். அவர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதிலே எந்தவிதமாக கருத்து வேறுபாடும் இல்லை.

Shops and Establishments Act அடிப்படையிலும், Payment of Wages Act அடிப்படையிலும், அவர்கள் Judicial Function, Quasi Judicial Function, செய்கிறார்கள் என்ற உறுப்பினரது கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். சட்டத்தின் அடிப்படையிலே சமரசம்- 'conciliation' செய்கிறார்கள் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், சிவில் கோர்ட்டு போன்று சம்மன் அனுப்புவது, Maintenance of Records, Production of Witness and Evidence—இவற்றைப் போன்ற நீதிமன்றப் பணிகளையும் அவர்கள் செய்கிறார்கள். நான் உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன், அவர்கள் அப்படியே அனுபவம் பெற்றவர்களாக இருந்தாலும், ஏற்கெனவே

[திரு. அ. இரகுமான்கான்] [1997 அக்டோபர் 15

இருக்கக்கூடிய சட்டத்தில் ட்ரிபியூனலுக்கு சொல்லப்படுகிற போது, அவர்கள் மேலும் அனுபவம் பெற்றவர்களாக இருப்பதற்கு ஒரு வரையறையை வைத்து, காலவரையறை *3* ஆண்டுகள் என்றும், லேபர் கோர்ட்டுக்கு *5* ஆண்டுகள் என்றும் வைத்து இருக்கிறார்கள். எனவே, காலவரையறையை நிர்ணயிப்பது அவசியமா, அவசியம் இல்லையா என்றால் இன்னும் கூடுதலாக அவர்கள் ஒரு ஆண்டு நீடித்து இருப்பார்களானால், அனுபவங்களைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்; இன்னும் அவர்கள் திறமையை வளர்த்துக் கொள்வதற்கு, தெரிந்துகொள்வதற்கு, புரிந்துகொள்வதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினரது மேலான ஆலோசனை பரிசீலிக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய உறுப்பினர் தீரன் அவர்கள் இங்கே பேசுவதற்கு முன்பாக என்னிடம் சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். இங்கேயும் பிரச்சினையை எழுப்பினார்கள். பணி நிரந்தரம் செய்வது என்பது சட்டத்திற்கு உட்பட்டுச் செய்யப்பட வேண்டிய ஒன்று. அதில் பிரச்சினை வருமானால், அதற்காக சட்டத்தில் ஏற்கெனவே விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் மனுக்கள் கொடுப்பார்களேயானால் சட்ட ரீதியாக அது விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட முடியும். இதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன். அந்த முறை- சட்ட ரீதியான முறை- சட்டத்தின் மூலமாகத் தீர்வு காணுகின்ற முறையை நாம் செய்ய வேண்டும். அதுபோன்ற முயற்சிகள் செய்யப்பட்டு இருக்கின்றனவா, conciliation, பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு இருக்கின்றனவா, அதற்கு என்ன தடைகள் இருக்கின்றன என்பது குறித்து நாம் ஆய்வு செய்ய வேண்டும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கைகளைச் சொல்லுவார்களானால் அதுகுறித்து அரசு பரிசீலித்து, அதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து, நம்முடைய பா.மா.கா. வைச் சேர்ந்த அன்புச் சகோதரர் அவர்கள் பல கோரிக்கைகளை, பல பிரச்சினைகளை, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்லியதுபோல், துணை மானியக் கோரிக்கையில் பேச வேண்டிய பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதிகாரிகளை வைத்து, நடுவர்களாக, நீதிமன்ற நீதிபதிகளாக வைத்து வழக்குகளைத் தீர்க்க முடியாது என்ற வாதம் சரியானது அல்ல.



1997 அக்டோபர் 15] [திரு. அ. இரகுமான்கான்]

*பிற்பகல் 1-45*

வழக்குகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறோம். ஏற்கெனவே இருக்கக்கூடிய லேபர் கோர்ட்டிலும் ட்ரிபியூனல் கோர்ட்டிலும் வழக்குகள் ஏராளமாக இருப்பதால் உரிய காலத்திலே வழக்குகளைத் தீர்க்க முடியாமல் இருப்பதாலும், கால்தாமதம் ஆவதாலும் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை. இதனைத் தவிர்க்க வேண்டுமென்கிற நோக்கத்திலேயே இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றிச் சொன்னார்கள். குழந்தைத் தொழிலாளர் முறையினைக் கடுமையாக ஒழிக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றுள்ள இந்தச் சமயத்தில் தமிழ்நாடு முழுவதும் இது குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகிறோம். சிவகாசியிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் இதுகுறித்துப் பேசி எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டுள்ளோம். திருப்பூரிலே இதுமாதிரியான முயற்சிகளை எடுத்துக்கொண்டோம். அதிகாரிகளை முடுக்கி விட்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் இதற்கென்று ஒரு ஜே. சி. எல்.-ஐத் தனியாக நியமித்திருக்கிறோம். குழந்தைத் தொழிலாளர்கள் முறையினை ஒழித்துவிட்டு, அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். ஆக, இதுகுறித்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிறது என்று கருதவேண்டாம், ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசவேண்டுமென்று சொன்னால், அது அமைச்சர்களுக்கும் பொருந்தும், மானியக் கோரிக்கையிலே பேசவேண்டியதற்கெல்லாம் நீங்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். இப்போது இருக்கிற Prohibition and Regulation of Child Labour Act-ன் படி அபாயகரமான தொழிலில் குழந்தைகளை ஈடுபடுத்துவதைத்தான் சட்ட ரீதியாகத் தடுக்க முடியும் என்று இருக்கிறது. அபாயகரமற்ற தொழிலில், ஓட்டல்களிலோ அல்லது மற்ற இடங்களிலோ குழந்தைத் தொழிலாளர்கள் பணியாற்றுவார்களேயானால்

சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கத் தடை இருக்கிறது. எனவேதான், டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் மாநாட்டிலே இதுபற்றிப் பேசி, சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று சொல்லி, மத்திய அரசும் ஒப்புக்கொண்டு சட்டத் திருத்தத்திற்கு உரிய முயற்சியை இந்த அரசு எடுத்து வருகிறது. ஆக, இந்தக் கருத்துக்களை ஏற்று, இந்த சட்டத் திருத்தத்திற்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.





மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை 16-10-1997 காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

93. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போக்குவரத்து VII) துறையின் 28-5-1996-ஆம் நாளிட்ட 762-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1986-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[1997 அக்டோபர் 15

*94. 1981*-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகள் மற்றும் *1983*-ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகள் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்வது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் *25-2-1997*-ஆம் நாளிட்ட *70*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [*1937*-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *10/1937*) *54(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*95. 1963*-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊர்க்காவலர் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (காவல் XIV) துறையின் *19-5-1997*-ஆம் நாளிட்ட *756*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1963*-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊர்க்காவலர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *3/1963*) *15(4)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*96. 1951*-ஆம் ஆண்டு தமிழ்நாடு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தமொன்றை செய்வது குறித்து பொதுத் துறையின் *12-12-1996*-ஆம் நாளிட்ட *1430*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1951*-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *20/1951*) *14(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*97. 1955*-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பயணப்படி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் *5-5-1997*-ஆம் நாளிட்ட *510*-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1951*-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *20/1951*) *14(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*98. 1995-96*-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஏழாவது ஆண்டறிக்கை. [*1989*-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *42/1989*) *51 (3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

*11. 1995-96* ஆம் ஆண்டிற்கான மாநிலப் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வாரியங்களின் செயல்பாடு குறித்த ஆண்டு ஆய்வு (தமிழ், ஆங்கிலம்).



1997 அக்டோபர் 15]

*12.* பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் இருபதாவது அறிக்கை, *1997-98.*

*13.* பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை, *1997-98.*

*14. 1997-98*-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

*15. 1997-98*-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*16. 1997-98*-ஆம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

ஐஐ

D
V211,31'N97
N97.37.3
218443

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.